www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20

ஒக.13-19,1995

ரூபா 11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 114

## அரசியல்-யுத்த முனைகளில் புதிய காட்சிகள்!

## துருப்புச் சீட்டோடு சந்திரிக்கா அரசு!

## எதிர்த்தாட புலிகள் வகுக்கும் உத்திகள்

நாரதரின் எக்ஸ்ரே ரிப்போர்ட்



அழகிப் போட்டி

இலக்கிய நயம்

சினி விசிட்

## கோடம்பாக்கம் முதல் ஹொலிவூட் வரை



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## பந்து–பாராளுமன்ற தெரிவுக்குழுவிடம்...

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

வர-வர எல்லோருமே மக்களை
குழப்பத் தொடங்கிவிட்டார்கள்.
அரசியல் தீர்வுத் திட்ட விடயத்திலும்
எக்கச்சக்கமான குழப்பங்கள்.

அரசு முன்வைத்துள்ளது
தீர்வுத் திட்டம் என்று ஒரு தவறான
கண்ணோட்டத்தை- தெளிவில்லாமல்
அவசரக் குடுக்கைகளாக அறிவித்ததில்
பத்திரிகைகள் பலவற்றுக்கும்
ஒரு பங்கிருக்கிறது.

முரசு இந்த விடயத்தில்
அவசரம் காட்டாமல்-
பரபரப்புக்கு தீனிபோடாமல்-
பொறுமை காத்தது.

"அரசு முன்வைக்கப்போவது
தீர்வுத் திட்டமல்ல-
தீர்வுக்கான யோசனைகள் மட்டுமே"
என்று சென்றவாரம் முரசு
சுருக்கமாகவும் தெளிவாகவும் சொன்னது.

அதுதான் நடந்திருக்கிறது;
"இதுதான் தீர்வு!" என்று
அரசு ஒரு திட்டத்தை முன்வைத்திருந்தால்
அதன் அடுத்த கட்டம்-
அதனை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது
என்பதாகவே இருந்திருக்கும்.

இப்போது, நடந்திருப்பது வேறு:
"இதனைத் தீர்வாக வைக்கலாமா? கூடாதா?
என்று ஆராய்ந்து பார்க்கலாம்:
அனைத்து கட்சிகளும் வாருங்கள்,
பாருங்கள், கருத்துத் தாருங்கள்"
என்று அரசு கேட்டிருக்கிறது.

ஆகவே- இனித்தான் விவாதம்:
அதன்பின்னர் வருவதுதான்
அரசியல் தீர்வுத் திட்டம்!

அந்தத் திட்டம்,
முதலில் பாராளுமன்றம் செல்லும்,
பின்னர், கருத்துக் கணிப்பு வாக்குக்கு
பொது மக்களிடம் செல்லும்.

ஆக, வருகிறது, வரப்போகிறது
என்று எதிர்பார்த்த அரசியல் தீர்வு
இப்போது அரசின் கையில் இல்லை.
பாராளுமன்ற தெரிவுக் குழுவிடம் இருக்கிறது.
அதாவது- பந்தை நோகாமல் தட்டி
பாராளுமன்ற தெரிவுக்குழுவின்
எல்லைக்குள் அனுப்பிவிட்டது அரசு!
இனி அரசுக்கு தொல்லையில்லை.

தீர்வெங்கே? என்று கேட்டால்,
"அதோ! அவர்கள் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள்"
என்று கையைக் காட்டிவிடலாம்.
அதிகம் கொடுத்துவிட்டீர்களே
என்று இனவாதிகள் துள்ளினால்,
"யோசனைதானே சொல்லியிருக்கிறோம்:
இன்னும் முடிவுக்கு வரவில்லையே!"
என்று கூறிவிடலாம்.

ஆளும் கட்சி நல்ல பெயர் எடுக்க
எதிர்க்கட்சி விரும்பப் போவதில்லை.
அதேசமயம் - எதிர்ப்புக் காட்டி
தமிழ் பேசும் மக்களின்
அதிருப்தியை சம்பாதிக்கவும்
எதிர்க்கட்சி துணியப்போவதில்லை.

எனவே-பாராளுமன்ற தெரிவுக்குழுவில்
விவாதத்தை நீடித்து-
தீர்வுத் திட்டம் இறுதியாக்கப்படுவதை
தள்ளிப் போட்டுக் கொண்டிருக்கவே
பிரதான எதிர்க்கட்சி விரும்பும்.

ஆக, சதுரங்க நடுவிலே
அரசியல் தீர்வு யோசனை!

எனினும், இதுவரை கால வரலாற்றில்
தானாகவே தீர்வு யோசனைகளை
முன்வைத்த வகையில்-
சந்திரிக்கா அரசின் துணிச்சலை
பாராட்டவே வேண்டும்.
ஆயினும் இனித்தான் விவாதம் ஆரம்பம்.

இனவாதிகள் வரிந்து-கட்டி எழுகிறார்கள்.
வடக்கு-கிழக்கு பிரிக்கப்பட வேண்டும்
என்ற கூச்சல்களும் கேட்கின்றன
அரசும் இந்த அடிப்படை விடயத்தில்
ஆணித்தரமாக எதையும் கூறவில்லை.

பந்தாடப்படப் போகும் தீர்வு யோசனைகள்
எழுப்பப் போகும் சர்ச்சைகளின்போது
அரசு எவ்வாறான நிலை எடுக்கும்,
தனது யோசனைகளுக்காக
முன்நின்று வாதாடுமா? வலுவூட்டுமா?
என்பதைப் பொறுத்தே
அரசின் அரசியல் துணிச்சல்
தொடருமா என்பதை தீர்மானிக்க முடியும்!

எப்படியோ-தீர்வு யோசனைகள்
அரசின் சுமையைக் குறைத்துள்ளன-
இனப்பிரச்சனைக்கான தீர்வை மட்டும்
விவாத அரங்கில் நிறுத்தியுள்ளன.

□□

மீண்டும் மறு மடலில்
வந்து கலக்கும் வரை.

என்றென்றும் அன்புடன்
–ஆசிரியர்–

# ஆன்மீகம்



## உத்தமனுக்குகந்த உபவாசம்.

ஆன்மீக வாழ்க்கைக்கு உபவாசம், ஒறுத்தல், நோன்பு போன்றவை அவசியந்தான். ஆனால் அவை எவ்வாறு அமைவது நல்லது என்பதுபற்றி சற்றே சிந்தித்துப் பார்ப்போம்.

உடல் அளவில் உபவாசமிருக்காமல் உளத்தளவில் உபவாசமிருப்பதே முக்கியம். வயிற்றுக்கு உணவில்லாமலிருந்தாலும் வளமான மனத்தை நலமாக உருவாக்குவதற்கு அது அடித்தளமாக அமைய வேண்டும். ஆம்-

"நீங்கள் உபவாசிக்கும் பொழுது மாயக் காரரைப்போல் முகவாடலாய் இராதேயுங்கள்: அவர்கள் உபவாசிக்கிறதை மனுஷர் காணும் பொருட்டாக, தங்கள் முகங்களை வாடப் பண்ணுகிறார்கள்." (மத்: 6:16)

ஆனால் இவ்வெளிவேஷ உபவாசத்தைவிட மேலான உபவாசம் உண்டு. ஆம். எசாயா அதி:58- வசனங்கள் 6-8 சற்றே வாசித்து சிந்தியுங்கள்

"அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும், நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்க்கிறதும், நெருக்கப்பட்டிருக்கிறவர்களை விடுதலையாக்கி விடுகிறதும், சகல நுகத்தடிகளையும் உடைத்துப் போடுகிறதும், பசி உள்ளவனுக்கு உன்ஆகாரத்தை பகிர்ந்து கொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக் கொள்கிறதும், வஸ்திரமில்லாதவனைக் கண்டால் வஸ்திரங்கொடுக்கிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதுமல்லவோ எனக்கு உகந்த உபவாசம்."

ஆம்-நீங்கள் இவைகளில் எந்த உபவாசத்தை விரும்புகிறீர்கள்- கடைப்பிடிப்பீர்கள்? சிந்தியுங்கள்- செயல்படுங்கள். நல்ல உபவாசத்தை நாளும் பிடிக்கலாமே!

ஏ.பி.வி. கோமஸ்

## அல்லாஹ்வை திருப்திப் படுத்தும் நற்கிரியைகள்

ஒரு நாளன்று இறைவன் ஹஜ்ரத் மூஸா(அலை) அவர்களை நோக்கி "ஏ மூஸாவே! நீ எனக்காக வேண்டி என்னென்ன நற்கிரியை புரிந்தீர்?" எனக் கேட்டான். அப்போது அவர்கள் "இறைவா உனக்காகவே நான் நோன்பு நோற்றேன்; உன்னையே சதா தஸ்பீஹ் செய்தேன்" என்று கூறினார்கள். அப்போது இறைவன் "ஏ மூஸாவே! நீர் ஸிராத்துல் முஸ்தகீம் பாலத்தை மின்னல் வேகத்தில், விரைவாக கடக்க வேண்டி தொழுதீர்! உம்மை நரகத்தை விட்டுப் பாதுகாத்துக் கொள்வதற்காக நோன்பு நோற்றீர்! உமக்கு சுவர்க்கத்தில் பல பதவிகள் உயர்த்தப்படுவதற்காக தஸ்பீஹ் செய்தீர்! இவையெல்லாம் நீர் உமக்காக செய்து கொண்டவை. ஆனால் என் திருப்திக்குரிய, எனக்குச் சொந்தமான நற்கிரியையைப் புரிந்திருக்கிறீரா?" எனக் கேட்டான்.

அது கேட்ட ஹஜ்ரத் மூஸா (அலை) அவர்கள் 'கோ' வெனக் கதறியழுதார்கள். "உனக்கு சொந்தமான அத்தகைய அமல்கள் எவை? எனக்கு அறியத்தருவாயாக" எனக் கேட்டார்கள்.

அதற்கிறைவன், "பசித்தோருக்கு உணவளித்துப் பசியாற்றுவதும், தாகித்தோருக்கு தண்ணீர் புகட்டி தாகம் தீர்ப்பதுவும், துணி இல்லாதார்க்கு அணியக் கொடுப்பதும், அநீதிக்குள்ளானவர்க்கு உதவிபுரிவதும், அறிஞர் (உலமாக்)களுக்கு சங்கை செய்வதும், அபயம் தேடுவோர்க்கு அபயமளிப்பதும், உமது ஒவ்வொரு மூச்சையும், பேச்சையும், செயலையும் முகஸ்துதியை விட்டும் தூய்மையாக்கிக் கொள்வதும் தான் என் திருப்திக்குரிய நற்கிரியைகள்" எனக் கூறினான். (மிர்க்காத்துல் குலூப்)

எஸ்.தாஜுன் நிஸா றஹ்மான்-பிலியந்தலை.

## கவிதைப்போட்டி இல–111

### பரிசுக்குரிய கவிதை

### நற்செய்தி

உலக மக்களுக்கோர் நற்செய்தி!
மண்ணுலகில் அமைதியில்லை;
உயிருக்கும் உத்தரவாதமில்லை!
விண்ணுலகில் வாழ விரும்புவோர்
உடனே பதிவு செய்து கொள்ளவும்!

எஸ்.விவேக்-மட்டக்களப்பு.

## கவிதைப் போட்டி இல-114



### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 19.08.1995

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 114
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.

## இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

### பாதுகாப்பு

நாட்டை சுற்றி
பாதுகாப்பு வேலி;
"சமாதானம்"
உட்பிரவேசிக்கத்தடை!

சுபவரன்-கண்டி.

### சந்தேகம்

முன்னேற்றப் பாய்ச்சல்
முடிந்த கையோடு
மேல் நோக்கிப் பாய்ச்சலோ?

சி.விவேகானந்தன்-கிரான்.

### எப்போது?

"வானுயர கோபுரங்கள்
வந்தேன்ன?
வான் நோக்கி மனிதனும்
சென்றுமென்ன?
வாழ்வையே சிதைத்திடும்
போரின் கொடுமை
தீர்வதெப்போ...?

திருமதி.குமுதா மனோகர்-நோட்டன்-பிரிஜ்.

### உயிரோ போ....

உச்சாணிக் கொம்பிலேறி
உயிரை விடப்போகிறீரா?
உச்சாணி தேவையில்லை...
உடனேவா! வடகிழக்கில்
வலியின்றிப் போகலாம்!

கே.பிரதீபன்-களுவாஞ்சிக்குடி.

### பயம்

தொலைதூரம் ஏறுகின்ற எங்களை
தொட்டிடுமோ துப்பாக்கிரவை.

திருமதி.என்.ரட்ணமணி-நாவலப்பிட்டி.

### உறுதி

விண்திரையாம் மேக மதை
வீறுடனே ஊடறுக்கும்
திண்மையுள்ள மதில் எழுப்ப
திறமுடனே வேலை செய்யும்
உண்மை மிகு ஊழியரின்
உறுதியினைக் காண்பதற்கு
கண்களோ கோடியிங்கே
கட்டாயம் வேண்டுமம்மா!

முஸ்தபா-ரசீதியா-ஏறாவூர்-01.



### உயிர்ப்பணய உழைப்புநிலை

இருதேச எல்லையின் இடைநடுவில்
இரும்புக் கம்பிவேலியிலே பணிபுரியும்
இருவரது "உயிர்ப்பணய உழைப்பு நிலை"
இருளான வாழ்வகல திரளான பொருள்தருமா?

வாழையூர்-வைரமுத்து.

### ஒத்திகைதானா?

வடக்கை
வசமாக்க
நடக்கும்
ஒத்திகையில்
ஒன்றோ
இது?

எம்.எச்.எம்.ஹாரிஸ்-புத்தளம்.

### சிலந்தி வலை

சீறிவரும்
ஷெல்களை
சிக்க வைக்கவோ
இந்த
சிலந்தி வலைப்
பின்னல்...?

ரேணுகா நிமாந்தீன்-ஏறாவூர்-02.

### அழிவு

கம்பிவேலிக் கண்களுக்குள்
காட்சி தரும் கட்டிடங்கள்
ஆக்கியது கடினமடா
அழிவதும் ஒரு நொடிதானடா?
ஆன இந்த பூமியிலே

க.சுரேஷ்-மட்டக்களப்பு.

### வாழ்க்கை பள்ளத்தில்

உயர வேலை செய்து
ஊதியம் பெற்றென்ன?
வயிற்றைத் தொட்டு
சத்தியம் செய்வோம்!
வாழ்க்கை பள்ளத்தில் தானென்று!

அ.குமணன்-பாண்டியூர்-01.

### எதற்கு?

ஷெல்பட்டு!
நம்மக்கள்சீரழிந்து போனபின்
கட்டிடத்தை..
பாதுகாக்க!
கம்பி வேலி எதற்கு?

ஹப்புத்தளையூர் மனோ.

### புதிய முயற்சி

ஆகாய வெளியிலும்
ஓர் வலைவிரிப்பு
சமாதானப் புறாவே
உனக்காகத் தான்!

வெள்ளைமணல்-ஏபாரெம் மர்சூக்.

### ஏன் செல்கின்றீர்...?

மானுடம் மடியும்
மண் கசந்ததாலா....?
விண்ணை நோக்கி
விரக்தியுடன் ஏறுகின்றீர்?

இர்.:.பானா ஜெப்பார்-பேருவளை

## வாசகர் சாலை

### தம்பட்டம்!

முரசை தழுவும் பிரான்ஸ் பத்திரிகை ஒன்று முரசுமீது பாய்ந்திருக்கிறது. தாம் பத்திரிகை அனுபவம் உள்ளவர் என்று தம்பட்டம் அடிக்கும் ஒருவர் குறிப்பிட்ட பத்திரிகையின் பின்னால் இருக்கிறார். முன்னாள் பத்திரிகையாளருக்கு இது முரசு யுகம் என்று ஈயடிக்கும் போது மட்டும்தான் தெரிகிறதோ? முரசின் வளர்ச்சியால் வயிறு மட்டும் எரிகிறதோ?

ம.சர்வானந்தன்-பிரான்ஸ்.

**தகவலா கொடுத்தீர்?**

யோவ்! நாரதரே! வெலிஓயாத் தாக்குதல் பற்றி நீர்தானே தகவல் கொடுத்தீர்? வாசகர்களாகிய எமக்கு முன்கூட்டியே மேலோட்டமாக ஒரு குறிப்புக் கொடுத்தீர் அல்லவா? அதைத்தான் சொன்னேன்! பயந்துவிட்டீரோ?

வி.கஜேந்திரன்-கண்டி.

**தெரிவதில்லையா?**

ராஜதந்திரியாருக்கு 'ரெண்டு எழுத்தாரின்' தவறுகளே கண்ணில் படுவதில்லையோ? அல்லது; பக்கச் சார்பின்மையை பேண வேண்டியது முக்கியம் என்பதை மனதில் கொள்க.

ஆர்.உசேன்-கின்னியா.

**மு.பி**

முரசை காதலிக்கும் எங்களுக்கு போட்டியாக தழுவுகிறவர்கள் பலர் வந்துவிட்டார்கள். பொறாமையாக இருந்தாலும், முரசுக்குப் பின் (மு.பி) என்று குறிப்பிடும்படி முரசு முத்திரை பதித்து விட்டமை பளிச். பளிச்...பளிச்.

தேவசீலன் மாதங்கி-மட்டக்களப்பு.

ரிஸ்கி ஷெரீப், ஷர்மிளா இஸ்மாயில் ஆகியோரது சிறுகதைகளில் இப்போது புது இரத்தம் பாய்வதாகத் தெரிகிறது. தேன்கிண்ணக் கவிதைகளில் சமகால நடப்புக்கள் இடம்பெறுவதைக் காணும் போது பூரிப்பு!

செல்வி-கே.ரஞ்சனி-நுவரெலியா.

மகளிர் மட்டும் போட்டியைத்தான் அறிமுகம் செய்கிறீர்கள். ஆண்கள் மட்டும் போட்டி நடத்தினால் என்ன?

சி.மனோகரன்-நீர்கொழும்பு.

'மகாபாரதம்' நிறைவடையப் போவது மனதுக்கு வருத்தமாக இருக்கிறதய்யா.

எஸ்.பாலமுருகன்-திருக்கோணமலை.

**ஈட்டிகள்**

'தாய்' நாவலின் ஒவ்வொரு அத்தியாயமும் பசுமரத்தாணிபோல நம் நெஞ்சில் பதிந்துவிடுகிறது. உரையாடல்களில் இருப்பவை வார்த்தைகளா? அல்லது ஈட்டிகளா?

அ.சாந்தமேரி-மாத்தளை.

நம் அன்பு முரசாரே! உன் மனதில் நாம் இருக்க, நம் மனதில் நீ நிலைத்தாய்!

ஆர்.ஸ்ரீஸ்கந்தராஜா, ஆர் விஷ்ணுராஜா-பள்ளகெட்டுவ.

**துல்லியம்**

வாசகர்களுக்கு தற்காலிக தீனியாக பரபரப்பு செய்திகள், ஆரூடங்கள் வெளியிடும் முறையை தமிழக பத்திரிகைகளும் செய்து வருகின்றன. மூன்று மாதத்தின் பின்னர் அதே பத்திரிகைகளை எடுத்து திருப்பிப் பார்த்தால் கற்பனை ஆரூடங்கள் என்று தெரிந்து போகும். ஆனால், நாரதரின் எக்ஸ்ரே ரிப்போர்ட் இருக்கிறதே, அதை மூன்று மாதத்தின் பின் திருப்பி மீண்டும் படித்தால் நூற்றுக்கு 90% துல்லியம்! பக்கச் சார்பற்ற விமர்சனத்திற்கு ஆயுள் அதிகம் என்பது உண்மையிலும் உண்மை. தொடரட்டும் பணி. கவனம் நாரதரே, இரு தரப்பிலும் உமக்கு எதிரிகள் இருக்கலாம்!




பா.சிவலோகன்-வவுனியா.

ராஜேஸ்குமார் வாராவாரம் அசத்துகிறார். விபரீதம் வரப்போவதை தெரிவித்து நம்மை அழைத்துச் செல்லும் பாணி அவருக்கு கைவந்த கலை.

என். இல்யாஸ்-புதிய காத்தான்குடி.

தித்திக்கும் தேன் தமிழில் நித்தம் புது ஆக்கங்களை சுமந்துவரும் பணி தொடர வாழ்த்துகிறேன்.

ஏ.ஆர். நிசானா றசாத், உகுரஸ்ஸப்பிட்டிய.

கவிதைப் போட்டியில் வரும் கவிதைகள் பல சிக்கனமான வார்த்தைகளில் சுற்றுப்புற சூழ்நிலையை இயம்புகின்றன. தொடரட்டும்.

கு.மகேஸ்வரன்-அவிசாவளை.



படிப்பகம்

www.padippakam.com

# தீர்வு யோசனையால் புலிகளுக்கு நெருக்கடி!

# தளபதிகளை அழைத்து பிரபா யோசனை

## புலிகள் மீது எல்லாளன் படை கண்டனம்?

(நமது நிருபர்)

**புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் அரசு இறக்கியுள்ள துருப்புச் சீட்டுத்தான் தீர்வு யோசனைகள் என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். அரசின் தீர்வு யோசனைகளுக்கு பரவலான வரேவற்பு கிடைத்து வருவதை சுட்டிக்காட்டியுள்ள அரசியல் அவதானிகள், அரசு தனது நோக்கத்தில் முதல் கட்ட வெற்றியைப் பெற்றுள்ளது என்று கூறியுள்ளனர்.**

### புதிய நெருக்கடி

அரசாங்கம் தனது தீர்வு யோசனைகளை வெளியிட்டுள்ளதன் மூலம் புலிகளுக்கு புதிய நெருக்கடி ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி அரசின் யோசனைகளை பலமாக ஆதரித்துள்ளது.

ஈ.பி.டி.பி., புளோட் ஆகிய அமைப்புக்கள் தீர்வு யோசனைகளை இனப் பிரச்சனைத் தீர்வுக்கான ஆரம்பமாகக் கொள்ள முடியும் என்று கருத்துத் தெரிவித்துள்ளன.

அரசின் தீர்வு யோசனைகள் இறுதித் திட்டமாக மாறுவதற்கு எவ்வளவு காலம் செல்லும் என்று தெரியவில்லை.

ஆனால், தீர்வு யோசனை விவாதங்களை பரவலாக்கி, அரசியல் கட்சிகள் அந்த யோசனைகளை ஆராய்ந்து கொண்டிருக்கும் காலகட்டம், அரசு தனது போர் வியூகங்களை வகுக்க உதவிகரமாக அமையும்.

தனது தீர்வு யோசனைகளை ஆராயும் களத்திற்கு அரசியல் கட்சிகளை அழைத்து வந்துள்ள அரசாங்கம், புலிகளை தனிமைப் படுத்துவதில் அரசியல் ரீதியான வெற்றியைப் பெற நினைக்கிறது.

புலிகளுக்கு அவர்கள் தம்மை புதிய சூழலுக்கு ஏற்ப தயாராவதற்குரிய கால அவகாசம் எதனையும் கொடுக்க அரசு விரும்பவில்லை. அதனால்தான் தீர்வு யோசனைகள் புலிகளுக்கு அனுப்பப்பட மாட்டாது என்று அரசு திட்டவட்டமாக அறிவித்தது.

யோசனைகளை புலிகளும் ஆராய அனுமதித்தால், தீர்வு யோசனைகள் ஆராயப் படும் காலகட்டத்தில் உள்ள அவகாசம் பயனற்றுப் போய்விடும் என்று அரசு நினைக்கிறது. ஏனெனில் அக்கால அவகாசத்தை புலிகளும் பயன்படுத்தி விடுவார்கள் என்று சுட்டிக்காட்டுகிறார்கள் அரசியல் அவதானிகள்.

### பாரிய நடவடிக்கை

தீர்வு யோசனைகளை பாராளுமன்ற தெரிவுக் குழு ஆராய்ந்து கொண்டிருக்கும் போது வடக்கை, குறிப்பாக யாழ் குடாநாட்டை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வரும் பாரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளப்போகிறது என்று நம்பப்படுகிறது.

இதேவேளை அரசின் தீர்வு யோசனைகள் வெளியான பின்னர் ஏற்பட்டுள்ள புதிய நிலமைகள் குறித்து புலிகள் யாழ்ப்பாணத்தில் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர்.

வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் மக்களது தாயகம் என்ற கோட்பாட்டை அரசு ஏற்கவில்லை. எல்லைகள் மீள் வரைவு மூலம் நிலங்கள் பறிபோகும் என்ற விடயத்தை புலிகள் முதன்மைப்படுத்துவார்கள்.

அதே சமயம் தம்மைப் புறக்கணித்து பிரச்சனைக்கு தீர்வு காணலாம் என்ற அரசின் எண்ணத்தை பொய்யாக்கும் இராணுவ நடவடிக்கைகளுக்கு புலிகள் திட்டமிடலாம் என்று கருதப்படுகிறது.

அரசின் தீர்வு யோசனைகள் வெளியானதை அடுத்து தனது முக்கிய தளபதிகளை அழைத்து பிரபாகரன் ஆலோசனை நடத்தியுள்ளதாக முரசுக்குக் கிடைத்த நம்பகமான தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.

அரசின் தீர்வு யோசனைகள் குறித்து புலிகளது உத்தியோக பூர்வமான கருத்தை வெளியிடும் அறிக்கையை தயாரிக்கும் பொறுப்பை திரு. அன்ரன் பாலசிங்கத்திடமும், வே.பாலகுமாரிடமும் (முன்னாள் ஈரோஸ் தலைவர்) பிரபாகரன் ஒப்படைத்துள்ளார்.

### புலிகளுக்கு கண்டனம்

இதேவேளை 'எல்லாளன் படை' சமீபத்தில் விடுத்த அறிக்கையொன்றில் புலிகளைக் கண்டிப்பது போன்ற வாசகங்கள் காணப்பட்டன.

'எல்லாளன் படை' புலிகளோடு தொடர்பற்ற ஒரு அமைப்பு என்ற கருத்தை ஏற்படுத்திவிட்டு கொழும்பிலும், அரச கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளிலும் பரவலான குண்டுத்தாக்குதல்களுக்கு புலிகள் திட்டமிடுவதாகக் கருதப்படுகிறது.

அதன் முதல் கட்டமே கடந்த 07.08.95 அன்று கொழும்பு நகரில் இடம்பெற்ற பாரிய குண்டு வெடிப்பாகும் என்று தெரிகிறது. இதற்கு முன்னர் சிறியளவிலான குண்டுவெடிப்புக்கள் மட்டுமே எல்லாளன் படையால் நடத்தப்பட்டன.

தீர்வு யோசனைகளை ஆதரித்துவரும் தமிழ் அரசியல் கட்சித்தலைவர்கள் புலிகளால் குறிவைக்கப்படலாம் என்றும் நம்பப்படுகிறது.

## யாருடைய குண்டு?

## மட்டக்களப்பில் சந்தேகம்!

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு பொதுச்சந்தை சதுக்கத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை 09.05 மணிக்கு இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் நான்கு பொதுமக்கள் பலியாகினர். 18 பேர் காயமுற்றனர். இறந்தவர்களில் மூவர் முஸ்லிம்கள் ஒரு தமிழ்ப் பெண்மணியும் பலியானது தெரிந்ததே.

அச்சம்பவத்தைத் தொடர்ந்து மட்டக்களப்பு நகரில் சோதனைகள் மேலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு பொதுச்சந்தைக்குள் நுழையும் பிரதான வீதிகளில் சோதனைச் சாவடிகள் உள்ளன. இந்த நிலையில் குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது குறித்து பாரபட்சமற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென்று ஈ.பி.டி.பி. மட்டு-அம்பாறை அமைப்பாளரும் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அ.இராசமாணிக்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இக் குண்டுவெடிப்புக்கு புலிகள் காரணமாக இருக்கமுடியாது என்று நம்பப்படுகிறது. சம்பவம் நடைபெற்ற இடத்தை வைத்தே அவ்வாறு நம்பப்படுகிறது.

**மூடும் இருள் விலக**
**வாழ்வில் நலம் பெருக**
**நபிகள் நாயகம் (ஸல்)**
**அவர்களின் பிறந்தநாளில்**
**முரசின் வாழ்த்துக்கள்.**

## கூட்டணி மீது யாழில் பாய்ச்சல்

அரசின் தீர்வு யோசனைகள் குறித்து யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகைகள் கருத்துத் தெரிவித்துள்ளன.

புலிகளின் 'ஈழநாதம்' பத்திரிகை உடனடியாக வெளியிட்ட கருத்தில், தீர்வுத் திட்ட யோசனையை தயாரித்தவர்களில் கூட்டணியின் பிரமுகரான நீலன் திருச்செல்வமும் ஒருவர் என்று கூறியுள்ளது. மேலும் அதில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது: "தமிழர் பிரச்சனை என்றால் என்னவென்று தெரியாத நீலன் போன்றவர்கள் தயாரித்த யோசனை இது. இந்த யோசனையில் உள்ள குறைபாடு என்னவென்றால் தமிழர்களின் பிரச்சனை என்னவென்று தெரியாமல் முன்வைக்கப்பட்டுள்ளமையாகும். இனப்பிரச்சனையைத் தீர்க்கும் விடயமானது பல்கலைக் கழகத்தில் சட்டம் படிக்கும் மாணவர்களுக்கு, சட்டப் பாடங்களில் குறிப்புக் கொடுக்கும் வேலைபோன்றதல்ல." என்று தெரிவித்துள்ளது 'ஈழநாதம்' பத்திரிகை.

### யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்ட பேரணி

9.8.95 அன்று யாழ்ப்பாணத்தில் கண்டனப்பேரணி ஒன்று நடத்தப்பட்டது. பல ஆயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்ட இப்பேரணி யாழ்-குடாநாட்டு மக்கள் தமது பக்கமிருப்பதை தெரிவிக்கும் புலிகளது நடவடிக்கையாகும்.

ஊர்வலத்தில் அரசுக்கு எதிரான கோஷங்களும், பொருளாதார தடைக்கு எதிராகவும், தீர்வுயோசனைகளை நிராகரிக்கும் விதமாகவும் கோஷங்கள் எழுப்பப்பட்டன. சுலோக அட்டைகளும் தாங்கிச் செல்லப்பட்டன. (யாழ் நிருபர் வர்மா)

## புலிகளின் முகாம்களுக்கு பொருள் விநியோகம்

## படையினரின் சந்தேகப்பார்வையில் வர்த்தகர்கள்!

கிழக்கிலங்கை ஐக்கிய கிராம சேவையாளர் சங்கத் தலைவரும் பெரிய புல்லுமலை கிராம சேவையாளருமான திரு.சொலமன் சுப்பிரமணியம் இம் மாதம் 1ம் திகதி புலிகளால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். அவர் விடுவிக்கப்பட்டதாக இன்னும் தகவல் இல்லை.

மட்டக்களப்பை அண்டிய பகுதிகளில் அடிக்கடி சுற்றி வளைப்புகள், தேடுதல்கள் நடைபெறுகிறது. சென்ற 03.08.95 அன்று இருதயபுரம், பிள்ளையாரடி, ஜெயந்திபுரப் பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டதால் கொழும்பு- மட்டக்களப்பு வீதி 4 மணித்தியாலங்களுக்கு மேலாக போக்குவரத்து தடை செய்யப்பட்டது. சத்துருக்கொண்டானில் காலை ஏழு மணி தொடக்கம் பகல் ஒரு மணி வரை வீதி ஓரங்களில் ஆயிரக் கணக்கான பயணிகளும் நூற்றுக்கு மேற்பட்ட வாகனங்களும் தகிக்கும் வெயிலில் தவிக்க வேண்டியிருந்தது. அவ்வேளை சோடா பானலொறி ஒன்றும் அங்கு நிறுத்தப் பட்டிருந்தது. கொளுத்தும் வெயிலில் தவித்த பயணிகளுக்கு கொள்ளை விலையில் சோடா விற்று கொழுத்த இலாபம் பெற்றுக் கொண்டார்கள்.

இதனிடையே 04.08.95 அன்று கொழும்பிலிருந்து 98000/- ரூபா பெறுமதியான டோர்ச் பற்றரிகளை ஓடுகளுக்குள்மறைவாக வைத்து அனுமதிப் பத்திரங்களின்றி ஏற்றிவந்த லொறியொன்றை ஏறாவூர் பொலிசார் பிடித்துள்ளனர். சந்தேக நபர்கள் மட்டக்களப்பு மாவட்ட நீதிவானால் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள். ஓட்டமாவடி ஏறாவூர் பகுதிகளிலிருந்து புலிகளுக்கு வேண்டிய அதிகளவான பொருட்களை வர்த்தகர்கள் வழங்குவதாக பரவலான கதை அடிபடுகிறது.

ஓட்டமாவடி, ஏறாவூர் பகுதிகளிலுள்ள சில முஸ்லிம் வர்த்தகர்கள் பற்றரிகள் உட்பட புலிகளுக்கு வேண்டிய பெருந்தொகையான பொருட்களை புலிகளின் தளத்துக்கே அனுப்பிவைப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இங்ஙனம் அனுப்பி வைக்கப்பட்ட சில தொகுதிப் பொருட்கள் படையினர் வசம் சிக்கியும் உள்ளன. தடை செய்யப்பட்ட பொருட்கள் வேறு பொருட்களுக்குள் மறைத்து அனுப்பப்பட்டதாம்.

## தீர்வுத் திட்டம் திருப்த்தியில்லை.

## கிழக்கில் புலிகளின் கருத்தரங்குகள்!

ஜனாதிபதியின் அரசியல் தீர்வுத்திட்டம் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் போதியளவில் நிறைவேற்ற வில்லை. இதனால் தமிழீழ இலட்சியத்துடனான எமது விடுதலைப் போராட்டம் தொடரும். பொதுமக்கள் தமது ஆதரவை தொடர்ந்தும் வழங்க வேண்டுமென விடுதலைப் புலிகள் கூறிவருகின்றனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் தமது கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் கிராம மட்டக் கருத்தரங்குகளை நடாத்திவரும் புலிகள் அதனைத் தெரிவித்து வருகிறார்கள்.

மேலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வாகரை, வவுண தீவு பிரதேச செயலகப் பிரிவுகளில் இருந்து புலிகள் அமைப்பிற்கு ஆட்கள் சேர்க்கப்பட்டு வருகின்றனர். வீட்டிற்கு ஒருவராவது எம்முடன் இணைய வேண்டுமென வற்புறுத்தி வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மின்கம்ப கொலைகளும் மட்டக்களப்பில் ஆரம்பித்துள்ளன. மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக்குள் உள்ள ஜெயந்தி புரம் கிராமத்தில் இராணுவத்தினருடன் தொடர்பு கொண்டதாக குற்றம் சாட்டி இறைச்சி வியாபாரி ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை மின் கம்பத்தில் இறந்த நிலையில் தூக்கப்பட்டிருந்தார்.

## அதிகாரம் போதாது என்கிறார் தொண்டா!

## 'மலத்தீன்' தெளிக்கும் உரிமையும் இல்லையாம்!

அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றை உருவாக்குவதற்காக அரசாங்கம் முன்வைத்துள்ள யோசனைகள் குறித்து பல்வேறு வாதப் பிரதிவாதங்கள் எழுந்துள்ளன.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான தொண்டமான் அரசின் தீர்வு யோசனைகள் குறித்து தமது நிலைப்பாட்டை முன்வைத்துள்ளார்.

பிராந்திய சபைகளுக்கு என்று வழங்கப்படும் அதிகாரங்களை மத்திய அரசு மறுபுறத்தால் மெல்ல எடுத்துக் கொள்ளக்கூடிய வசதிகள் அரசின் அதிகாரபரவலாக்கல் யோசனைகளில் காணப்படுவதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதிகாரப் பரவலாக்கலில் பிராந்திய சபையினது அதிகாரம் என்ன? மத்திய அரசின் அதிகாரம் என்ன? என்பவற்றை வரையறுக்க இரண்டு பட்டியல் இருக்கும். ஒன்று; பிராந்திய பட்டியல்.இரண்; ஒதுக்கப்பட்ட பட்டியல். ஒதுக்கப்பட்ட பட்டியலில் கூறப்படும் விடயங்கள் யாவும் மத்திய அரசின் அதிகாரத்தில் வரும்.

அரசின் தீர்வு யோசனையில் பிராந்தியப் பட்டியல், ஒதுக்கப்பட்ட பட்டியல் இரண்டிலும் உள்ள விடயங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

பிராந்தியப் பட்டியலில் உள்ள விடயங்கள் ஒதுக்கப்பட்ட பட்டியலிலும் வரும்போது, பிராந்திய சபையின் அதிகாரம் சுருங்கிப்போய்விடும். இது ஒரு கையால் கொடுத்து மறு கையால் எடுப்பது போன்றதாகும் என்கிறது இ.தொ.கா.

இதற்கு உதாரணமாக இ.தொ.கா.குறித்துக் காட்டியுள்ள விடயங்களை கீழே தருகிறோம்.

| பிராந்தியப்பட்டியல் | | ஒதுக்கப்பட்டபட்டியல் |
|---|---|---|
| 1. வீடமைப்பு மற்றும் கட்டுமானம். | — | தனிச் சிறப்பான தேசிய வீடமைப்புத் திட்டங்கள். |

**இ.தொ.காவின் கருத்து:**
**தனிச் சிறப்பு தேசிய வீடமைப்புத் திட்டங்கள் பிராந்திய சபைக்கு கொடுக்கப்படும் வீடமைப்பு அதிகாரத்தை தடை செய்கிறது. வீடமைப்பு முழுவதும் பிராந்திய சபையின் பொறுப்பில் விடப்படுவதே நியாயமாகும்.**

| | | |
|---|---|---|
| 2. சுகாதாரம் மற்றும்-சுதேச மருத்துவம். | — | சுகாதாரத்துடன் தொடர்புடைய ஆராய்ச்சி-கல்வி, பயிற்சி,தற்போதுள்ள சிறப்பு பணிகளுக்காக மருத்துவமனைகளை உள்ளடக்கிய தேசிய சுகாதார நிர்வாகம். தேசிய சுகாதார அபிவிருத்திக்கான தரங்கள். சகல சிறப்பு திட்டங்களுக்கான நிர்வாகம். உ.ம்-மலேரியா தடுப்பு. |

**இ.தொ.காவின் கருத்து:**
**முழுமையான சுகாதாரம் மத்திய அரசுக்கே ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் பிராந்திய சபைக்கு மலத்தீன் தெளிப்பதற்கான அதிகாரமும் இல்லை.**

| | |
|---|---|
| 03. சிறிய துறைகளும், துறைமுகங்களும். | விமானத் தளங்கள் துறைமுகங்கள், சர்வதேச போக்குவரத்துக்கான துறைகள். |

**இ.தொ.காவின் கருத்து:**
**திருக்கோணமலை, காங்கேசன்துறை ஆகிய இரு துறை முகங்கள் வடக்கு-கிழக்கு பிராந்திய சபைக்கு வருகின்றன. இருப்பினும் இவைஇரண்டும் மத்திய அரசின் கண்காணிப்பில் அடங் குகின்றன.**
**பருத்தித்துறையை எடுத்துக்கொண்டால் சென்னையிலிருந்து வெங்காயம் இறக்குமதி செய்ய நேரும் பட்சத்தில், அது சர்வதேசப் போக்குவரத்தாக கொள்ளப்பட்டு மத்திய அரசின் கட்டுப்பாட்டில் வந்துவிடலாம்.**

இவ்வாறு இ.தொ.கா. பட்டியலிட்டுக் சுட்டிக்காட்டியிருக்கிறது.

இதேவேளை காணி அதிகாரம் பிராந்திய சபைக்கு இருக்கும் என்ற அம்சத்திலும் மத்திய அரசு தலையிட பல வழிகள் உள்ளன. அரசியலமைப்புச் சட்டப்படி ஜனாதிபதி விரும்பினால் காணிகளை குத்தகைக்கு கொடுக்க முடியும். அது தவிர தேசிய சுற்றுப்புறச்சூழல் பணிகள், தேசிய வீடமைப்பு பணிகள், உல்லாசப் பயணத் துறை அபிவிருத்தி போன்ற மத்திய அரசின் அதிகாரத்தின் கீழ்வரும் தேவைகளுக்காக காணிகள் எடுக்கப்படலாம். இதற்கு பிராந்திய சபைகளது அனுமதி தேவையில்லை.

## ஆசிரியர் பற்றாக்குறையில் தொடரும் அலட்சியம்!

## பாராமுகம் ஏன்? மத்திய மாகாணத்தில் குமுறல்!

(கண்டி நிருபர்)

மத்திய மாகாணத்தில் தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக் குறை நீண்டகாலமாக நிலவிவருகிறதல்லவா. இது குறித்து அலட்சியப்போக்கு தொடர்வதாக மத்திய மாகாணத்தில் உள்ள ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகிய சகல தரப்பினரும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே ஆசிரியர்கள் நியமனத்திற்கான நேர்முகப் பரீட்சைகள் ஏனைய மாகாணங்களில் நடைபெற்றுவருகின்றன. மத்திய மாகாணத்தில் மட்டும் மேற்படி நேர்முகப் பரீட்சை நடைபெறவில்லை. நடைபெறுவதற்கான அறிகுறிகளும் தெரியவில்லை.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் பயிலுநர் ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டது. அந்தப் பரீட்சையில் தோற்றி நல்ல பெறுபேறுகள் எடுத்தவர்களுக்கே தற்போது நேர்முகப் பரீட்சை நடத்தப் படுகிறது. தெரிவுப் போட்டிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெற்றவர்கள் மத்திய மாகாணத்திலும் இருக்கிறார்கள். அவர்களுக்கு மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கான எந்த அறிவித்தலும் இதுவரை கிடைக்கவில்லை.

தென்மாகாணம், சப்பிரகமுவ மாகாணம், மேல்மாகாணம் போன்றவற்றில் நேர்முகப் பரீட்சைகள் நடந்துமுடிந்துள்ளன. இம்மாதம் எதிர்வரும் 18-19ம் திகதிகளில் ஊவா மாகாணப் பரீட்சார்த்திகளுக்கு நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளது.

சுமார் 2400 ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ள மத்திய மாகாணத்தில் நேர்முகப் பரீட்சை நடத்தி ஆசிரியர்களை நியமிக்க தாமதம் ஏன் என்று கேள்வி எழுந்துள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கான திகதியை கல்விச் சேவை ஆணைக் குழுவே அறிவிக்க வேண்டும் என்று கண்டியில் உள்ள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நாடெங்கும் தமிழ் மொழி மூலப் பாடசாலைகளுக்கு ஆயிரம் ஆசிரியர்களை நியமிப்பதற்கு கல்விச் சேவை ஆணைக்குழு கருதியுள்ளபோது, மத்திய மாகாண ஆசிரியர்கள் விடயத்தில் மட்டும் இந்த அலட்சியம் ஏன்? என்று மத்திய மாகாண மக்களிடம் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.


படிப்பகம்

www.padippakam.com

# மழை பெய்தால் ஏன் தொல்லை?

(திருமலை நிருபர்)

உவர்மலைப் பகுதியில் வடிகால் அமைப்புச் சீராக இல்லாததால் மழைநீர் வளவுகளுக்குள்ளாகவும் வீடுகளுக்கூடாகவும் வடிந்தோடுவதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

ஏற்ற இறக்கங்கள் நிறைந்த இந்தப் பகுதி நெருக்கமான குடியிருப்புக்களைக் கொண்டுள்ளது. கோடை காலங்களில் கடும் வரட்சியுடன் காணப்படும் இப்பகுதி மழை நாட்களில் மிக வேகமாக நீர் பாய்ந்தோடும் பகுதியாகவும் காணப்படுகிறது.

இந்த வேகமான நீர் வடிதலுக்கு ஈடு கொடுக்கக் கூடியதாக வடிகால் அமைப்புக்கள் இல்லை என்று அங்குள்ள குடியிருப்பாளர்கள் கூறுகிறார்கள்.

குறிப்பாக ஸ்பெல்லின்ட் வீதியும் அப்பகுதிக் குடியிருப்புகளும் மழை நாட்களில் மோசமாகப் பாதிக்கப்படுவதாகத் தெரிய வருகிறது. இது பற்றிப் பல தொடர்புகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஏற்படுத்திக் கொண்டபோதிலும் சாதகமான பதில் இதுவரை கிடைக்கவில்லையாம்.

# குண்டு குழிப்பாதைகள் கண்டியில்?

(கண்டி நிருபர்)

கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த சகல கிராம, நகர்ப்புறங்களிலும் உள்ள பஸ் பாதைகள் பஸ்கள் ஓட முடியாத அளவுக்கு குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றன. சில பாதைகளில் பஸ்கள் ஓட முடியாமல் சாரதிகளே வேண்டுமென்றே லீவில் இருந்துவருகின்றனர்.

உலக வங்கியினால் 39 கோடி ரூபா நிதி, பாதைகளின் புனரமைப்புக்கு ஒதுக்கப்பட்டிருந்தும் கூட பாதைகள் புனரமைக்கப்படாமலிருப்பதேன் என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். மத்திய மாகாண சபையில் கூட பாதைகளின் சீர்கேடுகள் பற்றி பல உறுப்பினர்களும் பிரஸ்தாபித்தபோதும் நிலைமை அப்படியே இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# இனியும் தொடருமா?


எமது நாட்டில் வடக்கிலும் கிழக்கிலும் யுத்தத்தினால் ஏற்படும் அவல நிலைகள் பலரும் அறிந்ததே.

கல்முனைப் பிரதேசத்திலுள்ள நற்பிட்டிமுனைக் கிராமத்தில் அடிக்கடி மின்துண்டிப்பும் 'அம்பியர்' குறைப்பும் ஏற்பட்டு மாணவர்களுக்கு இரவிலே படிக்க முடியாத நிலையும், மின்னில் இயங்கும் எந்தப் பொருட்களையும் இயக்க முடியாத ஓர் அவல நிலையும் தோன்றி இருக்கிறது. அரசாங்கம் இத்தகைய 'அம்பியர்' குறைப்புகள், மின் துண்டிப்புக்கள் எதையுமே செய்யக் கூடாது என்று அறிவித்த புதிதில் கொஞ்சம் மெச்சத்தக்க வகையில் மின் வினியோகங்கள் நடைபெற்றன. சுமார் இரண்டு கிழமைக்குப் பின் 'பழைய குருடி கதவைத் திறடி' என்ற நிலை மீண்டும் ஏற்பட்டு விட்டது. இது ஒரு வருந்தத்தக்க விடயமாகும்.

இது குறித்து சம்பந்தப்பட்ட மேலதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுத்து பொது மக்களின் அவலத்தைப் போக்குவர் என நம்புகின்றேன்.

சபீனா பேகம் இஸ்மாயில்- நற்பிட்டிமுனை-03.

# வாட்டப்பட்ட வைத்தியசாலை! நஷ்டம் பல கோடி!



இராணுவத்தினரின் 'முன்னேறிப் பாய்ச்சல்' நடவடிக்கையின் போது மூளாயிலுள்ள கூட்டுறவு வைத்திய சாலையும் பாதிக்கப்பட்டது.

அங்கிருந்த விலை உயர்ந்த மருந்துப் பொருட்களை காணவில்லை. சத்திர சிகிச்சைக் களம் சேதமடைந்துள்ளது. வைத்தியசாலைக் கூரைகள் 'ஷெல்' தாக்குதலில் சேதமடைந்துள்ளன. இவற்றின் காரணமாக 5 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக வைத்திய சாலை வட்டாரங்கள் கூறியுள்ளன.

இந்த வைத்தியசாலை தென்னாசியாவிலேயே கூட்டுறவுத் துறையின் முதலாவது போதனா வைத்தியசாலையாகும்.

# காட்டூண் மூலை




தமிழ் நாட்டிலிருந்து -திருமலை-

# புலிகளை நம்பும் வை.கோ!

## வாளைப்பிளக்கும் கரகோசம்! வாக்குகள் திரளுமா?



'89ல் வன்னிக்காட்டில் பிரபாவோடு வை.கோ.

தமிழ் நாட்டு அரசியல் களத்தில் தற்போது புலிகளை நம்பியிருக்கும் முக்கியமான அரசியல் தலைவர் வை.கோபாலசாமி.

தனது திருச்சி மாநாட்டில் அவர் பகிரங்கமாகவே புலிகளை ஆதரித்தது மூலமாக சர்ச்சைகளை உருவாக்கியிருக்கிறார்.

தி.மு.கவில் இருந்தபோது தன்னை ஒரு தீவிரமான புலி ஆதரவாளர் என்று சொல்லிக் கொள்வதில் வை.கோவுக்கு ஒரு தயக்கமும் இருந்ததில்லை.

தி.மு.கவை விட்டு வெளியேறிய வை.கோவை அரசியலில் இருந்து ஓரம்கட்டிவிட நினைத்தது தி.மு.க.

அதனால், வை.கோபாலசாமிக்கும் - புலிகளுக்கும் இருந்த உறவை தமிழக அரசியலில் சதிவலை விரிக்கும் திட்டமாகக் காண்பித்தது.

இதனைக் கண்டு உஷாராகிவிட்ட வை. கோபாலசாமி தடாலடியாக ஒரு கருத்தை வெளியிட்டார்.

"இலங்கைத் தமிழர்களைத்தான் நான் ஆதரிக்கிறேன், புலிகளையல்ல!"

என்று தெரிவித்தார் வை.கோ. இதனால் தமிழக புலி ஆதரவாளர்களுக்கு வை.கோ.மீது லேசான வருத்தமும் ஏற்பட்டிருந்தது.

இதன்பின்னர் கடந்த மாதம் திருச்சியில் நடந்த மறுமலர்ச்சி தி.மு.க மாநாடு புலிகள் தொடர்பான வை.கோவின் முன்னைய நிலைப்பாடு மீண்டும் திரும்பியிருப்பதை காட்டிவிட்டது.

புலி வேசமணிந்த இளைஞர்கள் ஊர்வலத்தில் அணிவகுத்து வந்தார்கள். புலி ஆதரவுக் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

அனைத்தையும் மேடையில் ஏறி நின்று இரசித்தார் வை.கோ. அனைத்துக்கும் சிகரம் வைத்தாற் போல மாநாட்டு உரையில் புலி ஆதரவு நிலையை திட்டவட்டமாக பிரகடனம் செய்தும் விட்டார்.

மாநாட்டில் குழந்தையொன்றுக்கு 'கிட்டு' என்று பெயர் வைத்தார் வை.கோ.

"வை.கோவை சுற்றி தமிழக இளைஞர்கள் திரளுகிறார்கள். அவர்களை கவரவும், தன் வசம் வைத்திருக்கவும் 'பிரபாகரன்' என்ற பெயரை உச்சரிக்கிறார் வை.கோ!" இது தி.மு.கவின் குமுறல்.

'புலி ஆதரவு அஸ்திரம் இளைஞர்களைக் கவர உதவலாம், கரகோசம் பெற வைக்கலாம். வாக்குகளைப் பெற உதவுமா?' இது தமிழக பத்திரிகைகள் சிலவற்றின் கேள்வி.

ஆனால், எது எப்படியிருந்தாலும் தமிழ் நாட்டில் புறக்கணிக்கப்பட முடியாத அரசியல் சக்தியாக வை.கோ.அணி (ம.தி.மு.க) வளர்ந்து வருவது மட்டும் உண்மை.




## அற்புத மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக ஆவி உச்சாடங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்சுமி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்சுமி இயந்திரம் தேவையா? ஞான திருஸ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464,434831,344832.
FAX 00941342463 EXT 25

தலைமையகம்

மளையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி (J.D.G.A.N.)
P.K. SAAMY ASSOCIATE (PVT)LTD
இல 31.32.33
தினச்சந்தை கட்டிடம்
நு வெரலியா.
T.P. 052 2508 3093,3336.
FAX 0094523093 EXT 28


1 வயதும் 7 மாதமும் நிரம்பிய எனது மகள் செல்வி. கோகிலவாணி சதாசிவம் இருதய நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். இதற்கான சத்திர சிகிச்சை இலங்கையில் செய்வதற்கு மருத்துவ வசதி போதாமையால், இந்தியாவிற்குச் சென்று சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டியுள்ளது. நான் மாத்தளை பிட்டகந்தை தோட்டதைச் சேர்ந்தவன்.

சாதாரண சாரதியாகிய எனக்கு இந்தியா செல்வதற்கு வசதியில்லை தயவு செய்து இவ்விளம்பரத்தினைக் காணும்



அன்பர்கள் எனது மகளின் சத்திர சிகிச்சைக்கான உதவியினை வழங்கும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

வங்கி கணக்கு இலக்கம். 1000 401 75 304
இலங்கை வங்கி, புறக்கோட்டை, கொழும்பு-11.


## ஜோதிடம்

எத்தகைய தீராத பிரச்சனைகளுக்கும் தீர ஆலோசனைகள் வழங்கப்படும். சாதகத்துடன் நேரில் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம்.

## விவாக சேவை

உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ வசிக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மணமக்கள் பட்டியல் கைவசமுண்டு- பொருத்தமானவர்களைத் தெரிவு செய்யலாம்.

V.S.S GURUKKAL
18,STATION ROAD,
WELLAWATTA
COLOMBO-06.

## நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு ரூபா | 557/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் ரூபா | 284/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் ரூபா | 145/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுய முகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

THINAMURASU VARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO

என்ற முகவரிக்கு கடிதம் அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

## BRIGHT BOOK CENTRE (PVT) LIMITED

தபால் மூலம் கல்வி நெறிகள்

* 90 Days Spoken English & Sinhala
  (ஓடியோ கசெட்டுடன் கூடிய மூன்று மாதப் பாடத்திட்டம்)
* Method of Book- Keeping
  கடைக்கணக்கு எழுதும் முறை
* G.C.E (O/L) முன்னோடிப் பயிற்சி நெறி
  (1000 வினா விடைகளுடன் கூடிய பாடத்திட்டம்)
* ஆண்டு 5 புலமைப் பரிசில் முன்னோடிப் பயிற்சி

மேலதிக விபரங்களுக்கு முத்திரை ஒட்டிய தபாலுறையுடன் கீழ்க்காணும் விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து அனுப்பவும்

விரும்பும் பாடநெறி:............................
பெயர்:............................
முகவரி:............................

BRIGHT BOOK CENTRE (PVT) LIMITED
P.O.BOX 162, S-27, FIRST FLOOR
COLOMBO CENTRAL SUPERMARKET COMPLEX
COLOMBO-11 T.P: 434770

## தபால் மூலம் கல்வி ஆங்கிலம் (English)

வெளிவாரிப்பட்டப்படிப்புகள் நிறுவனத்தால் நடாத்தப்படவுள்ள பின்வரும் தபால் மூல பாடநெறிகளைப் பயில விரும்பும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### ஆங்கில இலக்கணம் (English Grammar)

ஆங்கில இலக்கணம் முழுவதும் 60 நாட்களில் தபால் மூலம் கற்பிக்கப்படுகின்றது. தமிழில் போதியளவு விளக்கம் தரப்படுகிறது. முழுக் கட்டணம் - ரூபா 350/-

### ஆங்கில கடிதம் எழுதுதல் (English Letter - Writing)

சாதாரண குடும்ப கடிதங்கள் முதல் உத்தியோக பூர்வ கடிதங்கள் வரை இலக்கண முறைப்படி ஆங்கிலத்தில் எழுத தபால் மூலம் 60 நாட்களில் பயிற்சியளிக்கப்படுகிறது. தமிழில் போதியளவு விளக்கம் தரப்படுகிறது. முழுக்கட்டணம் ரூபா 350/-

### ஆங்கில பேச்சு பயிற்சி (English speaking Course)

உங்களுக்கு தெரிந்த ஆங்கிலத்தில் இலக்கண முறைப் படி சுலபமாக எந்த இடத்திலும் உரையாடுவதற்கு 3 மாத காலத்தில் தபால் மூலம் பயிற்சியளிக்கப்படுகிறது. தமிழில் போதியளவு விளக்கம் தரப்படுகிறது. முழுக் கட்டணம் ரூபா 350/-

விபரங்களுக்கு : உங்கள் சொந்த முகவரி எழுதப்பட்ட, இரண்டு ரூபா முத்திரை ஒட்டப்பட்ட நீள கடிதவுறையை கீழ் வரும் முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். "கடிதவுறையின் இடது புறத்தில்" விண்ணப்பிக்கும் பாடநெறியைக் குறிப்பிடவும்.

விண்ணப்ப முடிவு திகதி: 1995.08.31

EXTERNAL STUDIES ACADEMY
( Correspondence School )
P. O. Box : 660, COLOMBO




படிப்பகம்

www.padippakam.com

## எக்ஸ்ரே ரிப்போர்ட்
நாரதர்

# சுவர் இல்லாச்சித்திரம்

அரசும்-புலிகளும் பேசிக் கொண்டிருந்த போது இரு தரப்பும் மேற் கொண்ட காய் நகர்த்தல்கள் பேச்சு வார்த்தைக்கு ஆயுள் அதிகமில்லை என்று துல்லியமாகச் சொல்லிக் கொண்டிருந்தன.

ஆனாலும், சமாதான விரும்பிகள் என்று பெயரெடுக்க விரும்பியவர்கள் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம், அதோ ஒரு திருப்பம், இதோ ஒரு பாய்ச்சல் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

, இப்போது, அரசு தீர்வு யோசனைகளை முன்வைத்திருக்கிறது. இது ஒரு திருப்பம் இதுவரை இல்லாத முன்னேற்றம் என்று கண்ணை மூடிக்கொண்டு மந்திரம் போல உச்சரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தீர்வு யோசனைகளில் உள்ள அதிகாரப் பரவலாக்கல் விடயங்களைப் பக்கம் பக்கமாக ஆராய்ந்து தங்கள் புலமையை வெளிப்படுத்தவும் சில விமர்சகர்கள் மத்தியிலே பலத்த போட்டி நிலவுகிறது.

வீட்டிலே அம்மா சமையல் செய்து கொண்டிருப்பாள்; குழந்தைகள் அழுது கொண்டிருக்கும்; சமைத்து முடிக்கும்வரை குழந்தைகளுக்கு போக்கு காட்ட வேண்டு மல்லவா? பொம்மைகளைக் கொண்டுவந்து குழந்தைகளிடம் கொடுப்பாள் அம்மா. உடனே குழந்தைகள் அழுவதை நிறுத்திவிட்டு பொம்மைகளோடு விளையாடத் தொடங்கிவிடும்.

தீர்வு யோசனைகளும் அப்படித்தான். அரசாங்கம் புலிகளோடு யுத்தத்தை நடத்திப் பார்த்துவிடுவது என்று மிகத் தெளிவான முடிவுக்கு வந்துவிட்டது.

யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது அரசியல் தீர்வு எங்கே என்று நச்சரித்துக்கொண்டிருந்தால் அரசுக்கு அது ஒரு இடையூறாக இருக்கும்.

வெளிநாடுகளும் "உங்கள் தீர்வைச் சொல்லுங்களேன்" என்று அரசைக் கேட்கும்.

ஆனால், அரசுக்கு உள்ள சிக்கல் என்ன வென்றால் யுத்தம் நடந்துகொண்டிருக்கும்போது திட்டவட்டமான ஒரு அரசியல் தீர்வை முன்வைக்க முடியாது.

'யார் தடுத்தாலும் இதனைச் செய்வோம்' என்று ஒரு திட்டத்தை முன்வைத்தால் சிங்கள மக்களிடம் அதிருப்தி ஏற்படலாம்.

அப்படி ஒரு அதிருப்தி ஏற்பட்டால் யுத்தத்திலும் வெற்றிபெற முடியாது. அடுத்த தேர்தல்களிலும் வாக்குகளை அள்ள இயலாது.

சரி-இதுதான் உறுதியான தீர்வு என்று ஒன்றை முன்வைத்தால் அதிலே சில திட்டவட்டமான அம்சங்கள் நிச்சயம் இடம் பெற்றேயாக வேண்டும்.

குறிப்பாக, வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களது தாயகம் என்ற கோட்பாட்டை அரசு எப்படி நோக்குகிறது என்பது தெரிந்துபோகும்.

அப்படித் தெரியவரும் போது ஒன்றில் சிங்கள மக்களின் அதிருப்தியை சம்பாதிக்க வேண்டும். அல்லது தமிழ் பேசும் மக்களின் எதிர்ப்பை முகம் கொடுக்க வேண்டும்.

இவ்வாறான இருதலைக் கொள்ளி நிலையில் தான் தீர்வுத் திட்டத்துக்கு பதிலாக தீர்வு யோசனைகளை அரசு முன்வைத்துள்ளது.

இதனை துணிச்சல் என்று சொல்வதா, புத்திசாலித்தனம் என்று கூறுவதா?

அம்மா குழந்தைகளிடம் பொம்மையைக் கொடுத்து சமாதானம் செய்வதை துணிச்சல் என்று யாரும் சொல்வதில்லை. சமயோசிதம், புத்திசாலித்தனம் என்று சொல்லலாம்.

அரசாங்கம் துணிச்சலைவிட, புத்திசாலித்தனத்தை அதிகம் நம்புகிறது.

இல்லாவிட்டால், தனது தீர்வு யோசனைகள் அடங்கிய ஆவணத்தை பின்கதவு வழியாக வெளியேவிட்டு ஒரு வெள்ளோட்டம் நடத்திப் பார்த்திருக்காது.

இறுதியாக தீர்வுத் திட்டத்தை அரசு முன்வைக்க நினைத்திருந்தால், அதற்கு முன்னர் அரசியல் கட்சிகளை அழைத்துப் பேசியிருக்க வேண்டும்.

தீர்வு யோசனைகள் என்றால், அதனை முன்வைத்துவிட்டு பேசலாம். விடிய விடியப் பேசிக்கொண்டேயிருக்கலாம்.

யோசனை என்றால் என்ன? நாலு பேரின் அபிப்பிராயம் கேட்டு முடிவுக்கு வர முன்வைக்கப்படும் விசயம்தானே.

அரசாங்கம் அரசியல் கட்சிகளை அழைத்து தனது தீர்வு யோசனைகள் பற்றி பேசியதல்லவா? அப்போது அரசின் கையில் இதுதான் நமது யோசனை என்று காட்டுவதற்கு எந்தவொரு ஆவணமும் இருக்கவில்லை.

"எங்கே உங்கள் யோசனை? அதனைத் தந்தால் தானே நாங்கள் பரிசீலிக்கலாம்" என்று தமிழ் கட்சிகள் கேட்கவும் இல்லை.

பத்திரிகைகளில் வெளிவந்தவைதான் யோசனைகளாக இருக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டுதான் தமிழ்க் கட்சிகள் தமது அபிப்பிராயத்தை சொல்லிவிட்டு வந்தார்கள் என்பதுதான் வேடிக்கை.

ஜனாதிபதியோடு பேசிவிட்டு வந்த தமிழ் கட்சிகளை, பேச்சு நடந்த மண்டப வாயிலில் வைத்தே அரசு தொலைக்காட்சி நிலையத்தாரும், வானொலி நிலையத்தாரும் மடக்கிப் பேட்டி எடுத்தார்கள்.

கூட்டணிப் பிரமுகர் திரு. ஆனந்தசங்கரியிடம் "தீர்வுத் திட்ட யோசனைகள் எப்படி?" என்று செய்தியாளர்கள் கேட்டார்கள்.

"பத்திரிகைகளில் வெளியானதல்லவா ஒரு தீர்வு யோசனை! கிட்டத்தட்ட அது மாதிரித்தான் ஜனாதிபதி சொன்னதும்" என்று பதில் கொடுத்தார் சங்கரி.

ஆனால், அரசு தனது யோசனைகள் அடங்கிய ஆவணம் இதுதான் என்று மேசையில் போடாமல் இருந்தது ஐக்கிய தேசிய கட்சிக்கு ஒரு பிடியாகி விட்டது. "யோசனை தரப்படவில்லை, தந்த பின்னர் கருத்துச் சொல்கிறோம்" என்று கூறிவிட்டது.

இதற்கிடையில் பத்திரிகைகளில் வெளிவந்த யோசனைகளை அடிப்படையாக வைத்து ஈ.பி.டி.பியும், இ.தொ.காவும் தமது பதில் யோசனைகள் அடங்கிய ஆவணங்களை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தன.

அவற்றையும் வாங்கி வைத்துக் கொண்டார் ஜனாதிபதி.

மறுநாள் நல்ல நேரம் பார்த்து காலையில் தொலைக்காட்சியில் சுருக்கமான உரை ஒன்றை ஆற்றிவிட்டு, மாலையில் தனது அரசின் தீர்வு யோசனைகளை வெளியிட்டார் ஜனாதிபதி. வெள்ளோட்டம் விடப்பட்ட யோசனைகள் தான் அரசின் யோசனைகள் என்பது தெரிந்துபோனது.

ஆக, ஏகப்பட்ட தயக்கங்கள், தந்திரங்கள் கடந்து தீர்வு யோசனையை வெளியிட வேண்டியதாகிவிட்டது.

இத்தனையும் ஒரு யோசனைக்கு என்று ஆகும்போது, இறுதியான ஒரு தீர்வுத் திட்டத்துக்கு என்றால் நிலமை எப்படியிருந்திருக்கும்?

தீர்வுத்திட்ட யோசனைகள் இனப்பிரச்சனைக்கான தீர்வு என்று சொல்வது பிறக்காத குழந்தைக்கு பெயர் வைப்பது மாதிரித்தான்.

குழந்தையே இன்னும் பிறக்கவில்லை; மூக்கும், முழியுமாக கொழு, கொழுவென்று இருக்கிறது என்று சொன்னால் அதன் அர்த்தம் என்ன?

மனதில் பட்டதை உடனே வெளியே சொல்பவராக நீங்கள் இருந்தால், 'பைத்தியக் காரத்தனம்' என்பீர்கள்.

துரதிஷ்டவசமாக, தமிழ்மக்கள் தரப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி, குழந்தை கொழு, கொழுவென்று இருப்பதாகவே சொல்லிக் கொண்டிருக்கிறது.

மறுபுறம், இனவாதிகளும் 'குழந்தை இவ்வளவு புஷ்டியாக இருக்கிறது. இப்படியே விட்டால் வளர்ந்து வந்து எங்களை ஒரு மிதி மிதித்துவிடும்.' என்று பூச்சாண்டி காட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

உண்மையில் ஒரு நல்ல தீர்வுத் திட்டம் கிடைத்தாலும்கூட இனவாதிகள் உள்ள நாட்டில் "அந்தத் திட்டம் போதும், அதிகம் தந்துவிட்டீர்கள்" என்று சொல்லலாமா?

அப்படிச் சொன்னால் இனவாதிகள் என்ன நினைப்பார்கள்? தமிழ் பேசும் மக்களுக்கு அதிகமாகக் கொட்டிக் கொடுத்துவிட்டார்கள் என்றுதானே நினைப்பார்கள்?

மூத்த தலைவர்களுக்கு சாணக்கியம் முனை மங்கிவிட்டதா? அப்படியில்லை. திரை மறைவில் இருந்து தங்களில் ஒருவரும் சேர்ந்து தயாரித்த யோசனையை அவர்கள் எப்படி எதிர்க்க முடியும்? அதுதான் விஷயம்.

ஆக, கூட்டணி போதும் போதும் என்கின்றது. இனவாதிகளோ அதிகம், அதிகம் என்கிறார்கள். ஆனால் கிடைத்திருப்பதோ இனப்பிரச்சனைக்கான தீர்வல்ல.

ஏன்? எப்படி?

இனப்பிரச்சனை என்பது 'அதிகாரப் பரவலாக்கம்' என்ற விடயத்தோடு மட்டுமே சம்பந்தப்பட்ட ஒன்றல்ல.

இனப்பிரச்சனை என்பதை முழுமையாக எடுத்துக்கொண்டால் அதிகாரங்களை பரவலாக்குவது என்பதும் அதில் உள்ளடக்கமாக இருக்கும். ஆனால் அது மட்டுமே பிரச்சனையல்ல.

தமிழ் பேசும் மக்கள் அதிகாரங்களை பரவலாக்குமாறு கேட்டுவந்தது ஏதோ அதிகாரம் மீது ஆசைப்பட்டல்ல.

தமது தாயகத்தை பாதுகாக்க, தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த, தமது மொழி, கலாசாரம், பொருளாதாரம் என்பவற்றை கட்டிக்காத்து வளப்படுத்தவுமே அதிகாரம் வேண்டும் என்று கேட்கப்பட்டது.

இதனால் தான், 1985ல் திம்புவில் நடந்த மாநாட்டில் நான்கு அம்சக் கோரிக்கையாக இனப்பிரச்சனை தீர்விற்கான-அடிப்படைகளை தமிழ் அமைப்புக்கள் முன்வைத்தன.

அதில் மிக முக்கியமான இரண்டு அம்சங்கள் இவைதான்:

1. தமிழ் மக்கள் தனியான ஒரு தேசிய இனம்.

2. வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் மக்களது தாயகம்.

தேசிய இனம் என்றால் என்ன? பொது மொழி, நிலத் தொடர்ச்சி உள்ள பிரதேசம், பொதுப் பொருளாதாரம், பொதுவான கலாசாரம் என்ற நான்கு அம்சங்கள் இருக்க வேண்டும்.

ஆனால், ஜே.ஆர். அரசு அதனை ஏற்றுக் கொள்ள மறுத்த போது திம்பு பேச்சு முறிந்தது.



போர் நிறுத்தம் முடிந்தது.

அதன் பின்னர் இந்திய-இலங்கை ஒப்பந்தம் வந்தது. வடக்கு-கிழக்கு தமிழர்களது பாரம்பரிய பிரதேசம் என்பதை அது மறைமுகமாக ஒப்புக் கொண்டது.

வடக்கு-கிழக்கு பிரிப்புக்கு கிழக்கில் கருத்துக்கணிப்பு நடத்தப்படும் என்ற ஒரு அம்சம் அதிலே இருந்தது. சிங்கள மக்களை திருப்திப் படுத்தவே அப்படிக் கூறுவதாகவும் உண்மையில் அப்படி ஒரு வாக்கெடுப்பே நடக்காது என்றும் ஜே.ஆர். உத்தரவாதம் சொன்னதாக இந்திய அரசு கூறியது.

வெறும் வார்த்தைகள் அந்தந்த சமயத்தில் உதவுமே தவிர, நீண்ட கால நோக்கில் பார்த்தால் திட்டவட்டமாக- ஆணித்தரமாக எடுக்கப் படும் முடிவுகளே பாதுகாப்பானவை.

கிழக்கில் கருத்துக் கணிப்பு என்பது சிங்கள மக்களை திருப்திபடுத்தவே சொல்லப்பட்டது என்று ஜே.ஆர். இன்று ஏற்றுக் கொள்வாரா? மாட்டார். ஜே.ஆர். கூறிய வாய் வாக்குறுதியை நம்பியதால் இன்று இனவாதிகளுக்கு ஒரு பிடியைக் கொடுத்ததுதான் மிச்சம். கிழக்கில் கருத்துக் கணிப்பு நடத்த வேண்டும் என்பதை தமிழ் கட்சிகளே ஏற்றுக்கொண்டவையல்லவா? என்று இனவாதிகள் வாதம் செய்கிறார்கள்.

இப்போது அரசு முன்வைத்துள்ள தீர்வு யோசனைகளை தெளிவாக நோக்கினால் அதிகாரங்கள் பரவலாக்கப்படுதல் என்ற ஆரவாரமான அறிவிப்புக்கள் மத்தியில் இனப்பிரச்சனைக்கான அடிப்படைவிடயங்கள் பின் தள்ளப்பட்டு விட்டன.

வடக்கு-கிழக்கு பிரிப்பு என்ற விடயம் யோசனையில் இல்லை அல்லவா? என்று கேட்கலாம். பிரித்தால் கூட போராடி சேர்த்துக்கொள்ளலாம். இடையிலே தோண்டி எடுத்தால் எக்காலத்திலும் சேர்க்கவே முடியாது.

எல்லைகள் மீள் வரைவு என்பது அதுதான். தோண்டி எடுப்பதுதான்.

ஏதோ அம்பாறையிலுள்ள ஒரு பகுதிதான் தனியாகப்போகிறது என்று கூட்டணி சொல்லிக்கொண்டிருக்கிறது.

அம்பாறையில் ஒரு பகுதி தனித்துப் போவதால் வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் மக்களது பெரும்பான்மை பாதுகாக்கப்படும் என்பது கூட்டணியின் வாதம்.

அடுத்த தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட விரும்பும் நீலன் திருச்செல்வத்துக்கும் சிங்கள மக்களது வாக்குகள் குறுக்கிடாமல் இருப்பது வசதி.

ஆனால், முதல் வாதத்தில் ஓரளவு நியாயம் இருந்தாலும் வடக்கு-கிழக்கில் இருந்து ஒரு பகுதியை தனியாக்கலாம் என்று தமிழ் பேசும் தரப்பிலிருந்தே முந்திக்கொண்டு குரல் கொடுப்பது, ஏனைய பகுதிகளையும் பிரித்து தனியாக்கலாம் என்ற நினைப்புக்கு ஊக்கம் கொடுப்பதாகிவிடும். முன்பு சாணக்கியம் போதித்த தலைமை இந்த இடத்திலும் சறுக்கிவிட்டது. அவசரம் ஏன்?

இந்த இடத்தில் அமைச்சர் தொண்டமான் சொன்ன கருத்து ஒன்று நினைவுக்கு வருகிறது.

"கூட்டணித் தலைவர்கள் சட்டம் பேசுவதில் சிறந்தவர்கள் தான். ஆனால், சமரசப் பேச்சுவார்த்தைகளில் அல்ல!"

எல்லைகள் மீள் வரைவு என்று பார்த்தால் வடக்கு-கிழக்கின் இதய பூமியே பறிபோகும் அபாயம் இருக்கிறது.

வடக்கு-கிழக்கை இணைக்கும் மைய நலமான மணலாறு வெளிஓயாவாக மாறிநிற்கிறது. அது எல்லை மீள் வரைவில் வெளியே போகப் போகிறது.

இதன் பின்னர் வடக்கு-கிழக்கு இணைப்பு, அதிக அதிகாரம் என்று எது கிடைத்தாலும் அது தாய்ப்பால் கேட்டு அழும் குழந்தைக்கு கிலுகிலுப்பை கொடுப்பது போலவே இருக்கும்.

எனவே-அரசைப் பொறுத்தவரை தீர்வுத்திட்ட யோசனைகள் அதன் புத்திசாலித்தனத்தையே காட்டுகின்றன. இதற்காக அரசாங்கத்தை குறை சொல்லக்கூடாது.

தமிழ் பேசும் மக்களது தரப்பிலிருந்து பேசுகிறவர்கள் புத்திசாலிகளாக இருக்க வேண்டும். அதுதான் முக்கியம்.

அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை விழுந்துவிழுந்து ஆராய்வது முக்கியமா? அதிகாரப் பரவலாக்கலை பயன்படுத்த வடக்கு-கிழக்கு முழுமையாக தமிழ் பேசும் மக்களிடம் இருக்கப் போகிறதா? என்பதை அறிவது முக்கியமா?

சுவர் இருந்தால்தானே சித்திரம் வரையலாம்.

ஆனால், சுவர் இருக்குமா இல்லையா என்பதை பின்னர் பார்த்துக்கொள்ளலாம். சித்திரம் வரைய தூரிகை இருக்கிறதா? தூரிகையின் அளவென்ன? வர்ணம் இருக்கிறதா? எத்தனை வர்ணம் என்பவைதான் முதல் முக்கியம் என்று நினைப்பதைப்போன்றதே அதிகாரம் பற்றிய அளவுகுறித்த விவாதங்களில் இறங்குவதும்.

அரசைப் பொறுத்தவரை, அதிகாரப் பரவலாக்கம் என்ற எல்லைக்குள் நின்று தமிழ் பேசும் அரசியல் கட்சிகளும், சிங்கள அரசியல் கட்சிகளும் கயிறிழுத்துக்கொண்டிருப்பது லாபம். புலிகளுக்கெதிரான யுத்தம் மட்டுமே இதுவாகும் என்று சொல்லிக் கொள்ளவும் வசதி.

யுத்தத்தில் அரசு வெற்றிபெறுவதாக வைத்துக்கொண்டால் ஏனைய தமிழ் கட்சிகளை சமாளிப்பது பெரிய காரியமல்ல. அதன் பின்னர் எல்லைகள் மீள்வரைவு பற்றி அரசு புதுத்தெம்போடு தனது முடிவை அறிவிக்கலாம்.

இப்போது எல்லைகள் மீள்வரைவு என்ற விடயத்தை எடுத்துக்கொண்டால் தமிழ் கட்சிகளின் குரல் பலமாக கேட்கும். ஏனெனில் யுத்தம் தமிழர்களுக்கு எதிரானது அல்ல என்று சொல்ல தமிழ் கட்சிகளது ஆதரவும் அரசுக்கு முக்கியம். பாராளுமன்றத்திலும் தமிழ் கட்சிகளது ஆதரவை அரசு நம்பியிருக்கிறது.

யுத்தத்தில் வெற்றி பெற்றல், அது ஒன்றே போதும். ஒரு பொதுத்தேர்தலை நடத்தி வாக்குகளை அள்ளி தனிப் பெரும்பான்மை பெற்றுக்கொள்ளலாம்.

எனவே- தற்போதுதான் இனப் பிரச்சனையின் அடிப்படை விடயங்கள் பற்றிப் பேசும் வாய்ப்பு தமிழ் பேசும் கட்சிகளுக்கு சாதகமாக இருக்கிறது.

ஆனால், தமிழ் கட்சிகளோ, குறிப்பாக கூட்டணியோ அரசுக்கு சாதகமான நிலைவரும்வரை இனப்பிரச்சனையின் அடிப்படை விடயங்களை பேசுவதை தள்ளிப்போடலாம் என்று தலையாட்டுகிறது. இது அரசில் தாமும் ஒரு அங்கமாக மாறிச் சிந்திப்பதுபோலவே அமைந்திருக்கிறது.

அரசியல்-இராணுவ பலம் தமிழ் மக்கள் தரப்பில் உள்ளபோதே வடக்கு-கிழக்கு இணைந்திருக்கக் கூடாது என்று இனவாதிகள் அடம்பிடிக்கிறார்கள். நாளை இந்தப் பலம் வீழ்ந்தால் அடங்கிப் போவார்களா? இன்னும் அதிகமாக துள்ளுவார்களா?

ஆக, அதிகாரம் எந்தளவுக்கு வேண்டுமென்பதை பின்னர் பார்த்துக் கொள்ளலாம்; முதலில் வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் மக்களது தாயகம் என்ற கோட்பாட்டை அரசு ஏற்கச் செய்ய வேண்டும். வடக்கு-கிழக்கில் உள்ள சிங்கள மக்களின் நிலை என்ன என்பதை வரையறுத்துக்கொள்ள வேண்டும். என்பவையே தமிழ் பேசும் மக்களது தரப்பில் இருந்து மேற்கொள்ளக்கூடிய புத்தி சாலித்தனமான அணுகு முறைகளாக அமையும்.

இஸ்ரேலிய-பாலஸ்தீன பேச்சு வார்த்தையை எடுத்ததற்கெல்லாம் உதாரணம் காட்டுவது வழக்கம். பாலஸ்தீனத்தின் ஒரு பகுதியிலிருந்து இஸ்ரேலிய குடியேற்றங்களை மீளப்பெறும் நடவடிக்கையை ஏன் இங்கு உதாரணத்திற்கு கொள்ள முடியாது.

இஸ்ரேலியர்களது கடும் எதிர்ப்பின் மத்தியில் தான் குடியேற்றங்களை அங்கு மீளப்பெறுகிறார்கள்.

1948க்குப் பின்னர் வடக்கு-கிழக்கில் நடைபெற்ற குடியேற்றங்கள் அகற்றப் படலாம் என்று அமைச்சர் தொண்டமான் யோசனை சொல்லியிருக்கிறார்.

ஆக, இப்போது விவாதிக்கப்பட வேண்டியது அதிகாரம் பற்றிய பிரச்சனைகள் அல்ல; இனப்பிரச்சனைக்கு நிரந்தரத்தீர்வாக அமையப் போகும் அடிப்படை பிரச்சனைகள் பற்றியே முடிவுகாண வேண்டும். அதுதான் இலங்கையில் தமிழர்கள் ஒரு தேசிய இனமாக தொடர்ந்திருப்பதையும், தமிழ் பேசும் மக்கள் தமது பிரதேசத்தை இழக்காமல் இருப்பதையும் உறுதிப் படுத்தும்.

அதிகாரங்கள் கூடலாம், குறையலாம், மாறலாம்-ஆனால், நிரந்தரமான- உயிர்த் துடிப்பான அம்சங்கள் முக்கியம். அது குறித்து அரசின் முடிவை தெளிவாக அறியும்வரை, தற்போதைய தீர்வு யோசனைகள் அரசியல் தீர்வாக அமையும் என்று நம்புவது சிரமம்.

## அதிரடி அய்யாத்துரை



கூட்டான கட்சித் தலைவர் கிட்டத்தட்ட அதிகாரத் தரப்பு பேச்சாளராய் மாறிப்போட்டார். ரெண்டு எழுத்து தலைவருக்கு காலம் கூடாது எண்டு யாரோ ஜோசியர் சொன்னதை நம்பித்தான் துணிஞ்சிருக்கிறாராம். சிவ...சிவா அதையெல்லாம் நம்பி...

மலையக தனித்துவத் தலைவரை கூட்டான கட்சிப் பிரமுகர் ஒருவர் சந்திச்சு 'என்ன செய்யலாம்?' எண்டு ஆலோசனை கேட்டவராம். அதுக்கு தலைவர் சொன்னாராம், "கட்சியை கலைத்து விட்டு வேறை வேலை பாருங்கோ. கடை நஷ்டமெண்டால் மூடத்தானே வேணும்" எண்டாராம்.

பாரிசில் ரெண்டு எழுத்தாருக்கு ஆலோசனை சொல்பவர் முன்னாள் ஆங்கிலப் பத்திரிகையாளராம். பாரிசிலிருந்து ரெண்டு எழுத்தார் பத்திரிகை வெளியிட வேண்டுமானால் வேறு ஒரு தமிழ் பத்திரிகையும் பாரிசிலிருந்தும் வரக்கூடாது, வெளிநாட்டிலிருந்தும் வரக்கூடாது எண்டு அண்ணர் ஐடியா கொடுத்தவராம். ஐடியாவைக் கேட்டுப் போட்டு 'பாரிஸ் ஈழநாடு' பத்திரிகை நிர்வாகிக்கு ரெண்டு எழுத்தார் நாலு தட்டுத் தட்ட அவர் பொலிசிலை போய் புகார் கொடுத்துப்போட்டார். நாட்டிலிருந்து இயக்கம் சரியில்லை- முரண்பாடு எண்டு பாரிசுக்குப்போன மனோகரமான ஒருவர்தான் விலாசம் காட்டுகிறார் எண்டு தகவல். முரசு பாரிஸில் அதிகம் விற்பனையாகிறதும் அவரது சொந்தப் பத்திரிகை விற்பனைக்கு இடைஞ்சலாக இருக்குதாம். ரெண்டு எழுத்தாரின் பெயரில் அவர் சொந்த நலன் கவனிக்கிறார்.

யாழ்ப்பாண உயர் கல்விபீடத்திலை முதலாண்டுப்பிரிவில் மட்டும் பத்துப்பேர் ரெண்டு எழுத்தாரோடு சேர்ந்திருக்கினம். பத்துப்பேரும் பெண்கள். சீருடையோடு வந்து கல்விகற்றுவிட்டு செல்லுகினமாம். விரிவுரை நடத்துறவைக்கு உதறலாய்த்தான் இருக்கும் பாருங்கோ.

கிழக்கின் சிங்கத்தார், எல்லாம் நடந்து முடிஞ்சபிறகு நாடுதிரும்பலாம் எண்டு சீமையிலேயே தங்கி நிண்டவராம். இனி வந்து ரெண்டு எழுத்தாரையும் கூப்பிடவேணும் எண்டு, "தம்பிமார் தான் உங்களை மறக்கேல்லை" எண்ட ரகத்தில் ஒரு அறிக்கைவிடுவார், இருந்து பாருங்கோ.

புதிய யோசனைகளின் மூலவர்களில் கூட்டான கட்சி நிலமானவரும் ஒருவர். அதுதான் பிரதானமான இணைப்பு விடயத்தில் இருக்கிற சிக்கல்களை மறைச்சுப் போட்டு கூட்டான கட்சி விழுந்து விழுந்து வரவேற்றதாம். 56 இலிருந்து வரவேற்று வரவேற்று பழகிப்போச்சதல்லோ. தாங்களும் சேர்ந்து தயாரிச்சுப் போட்டு வரவேற்காமல் இருந்தால் நல்லாவோ இருக்கும்?

ஆற்றிலை தொடர்ந்து பிணம் மிதந்து கொண்டுதான் இருக்கு. வெகுஜன சபைக்கு அருகிலேயே வந்து மிதக்குது. வெள்ளை வான் ஒண்டு தான் கொழும்பிலையும் ஆள் பிடிக்குது எண்டும் தகவல் தெரிஞ்சு போச்சு. தகவல் தெரிஞ்சும், வசதி இருந்தும் சம்பந்தப்பட்டவை மட்டும் வலையில் சிக்காமல் இருக்கிறதுதான் ஏனெண்டு தெரியேல்லைப் பாருங்கோ.

நிறைவேற்று அதிகாரத்தை தற்போதைக்கு கைவிடும் உத்தேசம் இல்லையாம். இதைப் பல மாதங்களுக்கு முன்னரே முரசு சொன்னதல்லோ? தமிழ் கட்சிகள் நிறைவேற்று அதிகாரமுள்ளவரை விரும்புறதாலை அதை மாற்றுவது கடினம் எண்டு அதிகார மட்டக் கூட்டத்திலை அறிவிக்கப் பட்டதாம்.

மலையகத் தனித்துவத் தலைவர் ரெண்டு எழுத்தாரிடம் 5 வருசம் நிர்வாகம் கொடுக்கிற யோசனையை நேரில் சொல்லவில்லை எண்டு மேல் மட்டம் அறிவிச்சதல்லோ? அதைக் கேட்ட தனித்துவ தலைவர் அப்செட்டாகிப் போட்டாராம். "ஒண்டுக்கு இரண்டு பிரதி கொடுத்தனான்" எண்டு சொல்லுறாராம்.

ஜனநாயக தமிழ் கட்சி தீர்வு யோசனைகள் பற்றி வெளிப்படையாகப் பேசின விஷயம் மேலிடத்திலை சங்கடத்தை ஏற்படுத்தியிருக்காம். இது முதல் கட்டம் எண்டு ஜனநாயகக் கட்சி தலைவர் பேட்டி குடுத்தவராம். அப்படியெண்டால் அடுத்த கட்டம் ஈழமோ? எண்டு பெரும்பான்மையோர் கேப்பினமல்லோ எண்டு அதிகாரமுள்ள ஒருவர் ஆதங்கம் தெரிவித்தாராம்.

சமீபத்தில் குமுதத்தில் படித்த கவிதை ஒண்டு நன்றாக இருந்தது. நீங்களும் பாருங்கோ-

"இளமையில்
பழைய தெய்வங்களை
நம்ப மறுத்து
புதிய தெய்வங்களை
நம்பினேன்-
ஏமாந்தேன்.
இப்போது
பழைய தெய்வங்களையே
நம்ப ஆரம்பித்திருக்கிறேன்.
நம்பிக்கை இல்லாமல்
இருக்க முடியவில்லை"

(கே.எஸ்.விசுவநாதன்)



படிப்பகம்

39

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# உள்ளே புகுந்த போலிக் குதிரைகள்

## எம்.ஜி.ஆரிடம் பிரபா சொன்னது

அரசியல் தொடர்



'85ல் எம்.ஜி.ஆர் உடன் பிரபா சந்திப்பு

## 'ரெலி'த் தலைவருக்கு புலிகள் குறி!

### அகண்ட தமிழகம்

நியூயோர்க் நகரில் நடைபெற்ற தமிழீழ ஆதரவு மாநாடு பற்றிச் சென்ற வாரம் கூறியிருந்தேன்.

இந்த மாநாடு உருவாக்கிய சர்ச்சை ஒன்று தொடர்பாக நிச்சயம் குறிப்பிட வேண்டும். மாநாட்டில் தமிழீழ வரைபடம் ஒன்று வெளியிடப்பட்டது.

அமையப்போகும் அல்லது விரும்பப் படும் 'தமிழர் தாயகம்' என்ற பெயரில் அந்த வரைபடம் வெளியாகியிருந்தது.

அந்த வரைபடத்தைப் பார்த்தவர்களுக்கு அதிர்ச்சி மேல் அதிர்ச்சி.

இலங்கையில் தமிழர்கள் வாழும் வடக்கு-கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளோடு இந்தியாவில் உள்ள தமிழ் நாட்டையும் இணைத்து அந்த வரைபடம் உருவாக்கப்பட்டிருந்தது.

'தமிழீழ ஆதரவு' என்ற போர்வைக்குள் அமெரிக்காவின் சி.ஐ.ஏ.உளவு நிறுவனம் போட்ட திட்டப்படியே அந்த வரைபடம் தயாரிக்கப்பட்டதாக சந்தேகம் எழுந்தது.

நியூயோர்க்கில் இருந்து தமிழீழ ஆதரவாளர்களாக நடித்துக்கொண்டிருந்த இலங்கைத் தமிழ் பிரமுகர்களை தமது கைக்குள் போட்டுக் கொண்டது சி.ஐ.ஏ. அவர்களும் சி.ஐ.ஏ. சொன்னதை செய்து முடித்து விட்டார்கள் என்று பரவலாகப் பேசப்பட்டது.

'அகண்ட தமிழக' வரைபடத்தை உருவாக்கியதால் சி.ஐ.ஏ.உளவு நிறுவனத்திற்கு என்ன இலாபம்?

இதற்கான பதிலை தமிழ்நாட்டில் இருந்து வெளிவந்த 'மக்கள் குரல்' பத்திரிகை சொன்னதில் இருந்து தருகிறேன்:

"இந்தியாவின் தமிழ் நாட்டையும் ஈழத்தோடு இணைத்து ஒரே தேசமாக வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.

பிரிவினை பற்றி இந்தியர்களிடமும், இந்திய ஆட்சியாளரிடமும் ஒரு பயத்தை உருவாக்குவதே இந்த அகண்ட வரைபடத்தின் நோக்கம்.

இப்படிச் செய்தால் தமிழீழக் கோரிக்கை அடிபட்டுப்போய் விடும் என்பது தந்திரம்!

ஜயவர்த்தனா அரசுக்கு நடைமுறையில் உதவ இந்த வரைபடமே போதுமானது.

தமிழர்கள் எங்களுக்கு மட்டுமல்ல உங்களுக்கும் பிரச்சனை என்றுதான் அவர் இந்தியாவிடம் சொல்லி வருகிறார்.

ஈழம் என்று உதட்டளவில் உச்சரித்து, யாருக்கோ சேவை செய்ய ஒரு கூட்டம் முற்படுகிறது."

என்று சொன்னது 'மக்கள் குரல்' பத்திரிகை.

இதன் ஆசிரியர் டி.ராமசாமி. அவர் தான் அக்கட்டுரையை எழுதியிருந்தார். இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி ஆகியோரோடு நெருக்கமாக இருந்தவர். (தற்போது மரணமாகி விட்டார் டி.ஆர்)

அந்தப் பத்திரிகை சொன்னதில் உண்மை இல்லாமல் இல்லை.

இலங்கை அரசுக்கு யுத்தத்தில் உதவி செய்து கொண்டிருந்தது அமெரிக்கா.

தமிழீழத்தை ஆதரிப்பது போல பேச வைத்து அக்கோரிக்கையை ஆபத்தானதாகச் சித்தரிப்பதும் ஜே.ஆர். அரசுக்கு அமெரிக்கா செய்த உதவிகளில் ஒன்றுதான் என்று கருத இடமுண்டு.

### தகவல் கொடுத்தவர் யார்?

இதேவேளை இந்தியாவில் ஈழப் போராளிகளது பயிற்சி முகாம்கள் இருந்ததை மறுத்துக்கொண்டிருந்தது இந்தியா.

இந்திய அரசின் மறுப்பை பலவீனமாக்குவது போல ஒரு செய்தியை வெளியிட்டது 'இந்தியா டுடே' சஞ்சிகை.

தமிழ் நாட்டில் ஈழப்போராளிகளது பயிற்சி முகாம்கள் எங்கெல்லாம் இருக்கின்றன என்ற விபரங்களை வெளியிட்டதோடு, பயிற்சி முகாம்களது புகைப்படங்களையும் வெளியிட்டிருந்தது அச்சஞ்சிகை.

இதனை அடுத்து அத்தகவல்களை யார் கொடுத்திருக்கக்கூடும் என்ற சந்தேகம் எழுந்தது.

சந்தேகப் பார்வையில் சிக்கியவர்களில் ஒருவர் சிவநாயகம். 'சற்றடே றிவியூ' என்றொரு ஆங்கில இதழ் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்தது. அதன் ஆசிரியராக இருந்தவர்தான் சிவநாயகம்.

பின்னர் இவர் சென்னையில் 'தமிழ் தகவல் தொடர்பு நிலையம்' நடத்தி வந்தார்.

இவர்தான் பயிற்சி முகாம்கள் பற்றிய தகவல்களைக் கொடுத்தார் என்று நம்பப்பட்டது.

### போலிக் குதிரைகள்

சிவநாயகத்திற்கும் அமெரிக்க சி.ஐ.ஏ. உளவு நிறுவனத்திற்கும் தொடர்புகள் இருப்பதாக இந்தியாவின் முற்போக்குப் பத்திரிகையான 'பிளிட்ஸ்' அம்பலப்படுத்தியது.

பிளிட்ஸ் பத்திரிகை காட்டமாக குற்றம் சாட்டிய மற்றொருவர் நீலன் திருச்செல்வம்.

25.08.84 அன்று தனது முன்பக்கத்தில் 'பிளிட்ஸ்' வெளியிட்ட செய்தியிலிருந்து சில பகுதிகள் இதோ:

"தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் சி.ஐ.ஏ. புகுத்திவிட்ட நீலன் திருச்செல்வம் ஒரு போலிக் குதிரை. (TROJAN HORSE) இப்படியான போலிக் குதிரைகள் மூலம் நீண்ட காலத்திற்கு முன்பே சி.ஐ.ஏ. ஈழ விடுதலைக் குழுக்களுக்குள் ஊடுருவி விட்டது.

இன்னொரு போலிக் குதிரைதான் சிவநாயகம் என்பவர். இந்தியாவுக்கும் விடுதலைப் போராளிகளுக்கும் எதிரான வாதங்களை கிளப்பிவிட்ட 'இந்தியா டுடே' கட்டுரைக்கு பெரும்பாலான தகவல்களைக் கொடுத்தது இந்த மனிதர்தான்."

எனறு தெரிவித்தது 'பிளிட்ஸ்' பத்திரிகை.

### 'ரெலி'மீது தாக்குதல்

9.9.84 அன்று யாழ்ப்பாணத்தில் பொன்னாலை என்னுமிடத்தில் நடைபெற்ற ஒரு சம்பவம் மிகவும் துயரமானது.

ஜெகதீசன் என்னும் ஜெகன் என்பவரால் 'தமிழீழ விடுதலை தீவிரவாதிகள்' என்னும் இயக்கம் உருவாக்கப்பட்டது. இதனைச் சுருக்கமாக 'ரெலி' (T.E.L.E) என்று அழைத்தார்கள்.

மண்டை ஓட்டின் சின்னத்தோடு 'ரெலி' தனது செயற்பாடுகளை மேற்கொண்டு வந்தது.

9.9.84. அன்று காரைநகருக்கு அருகேயுள்ள பொன்னாலை பாலத்தில் கண்ணி வெடிகளை புதைத்துக் கொண்டிருந்தனர் ரெலி இயக்கத்தினர்.

கடற்படையினர் அப்பாலத்தின் வழியாக ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவது வழக்கம். அவர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கே 'ரெலி' இயக்கத்தினர் தயாராகிக் கொண்டிருந்தனர்.

தயாரிப்புக்கள் எல்லாம் பூர்த்தியாகி விட்டன. இனித்தாக்குதல் நடத்த வேண்டியது தான் பாக்கி. 'ரெலி' உறுப்பினர்கள் காத்திருந்தனர்.

அப்போதுதான் அந்தப் பகுதிக்கு இன்னொரு குழுவினரும் வந்து சேர்ந்தனர்.

'ரெலி' தலைவரை அக்குழுவினர் வருமாறு அழைத்தனர். அவரும் அவர்களை நோக்கிச் சென்றார்.

திடீரென்று அக் குழுவில் இருந்த ஒருவர் 'ரெலி' தலைவர் ஜெகனை நோக்கி சுட்டார். தொடர்ந்து ரவை மழை.

ஜெகன் அப்படியே சரிந்து வீழ்ந்து உயிர்விட்டார். இதனைக் கண்ட 'ரெலி' இயக்கத்தினர் அங்கிருந்து ஓடித் தப்பி விட்டனர்.

வந்த குழுவினர் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள்.

ஜெகனைச் சுட்டவர் திலீபன். இவர்தான் பின்னர் புலிகளது யாழ் மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளராக இருந்தவர். இந்திய படைக்கு எதிராக சாகும்வரை உண்ணாவிரதமிருந்து மரித்தவர்.

ஜெகன் கொல்லப்பட்டதை ஏனைய தமிழ் அமைப்புக்கள் கண்டித்தன.

இதனையடுத்து 13.09.84இல் புலிகளால் ஒரு பிரசுரம் வெளியிடப்பட்டது.

"விடுதலைப் போராளிகள் என்று இனம் கண்டு கொள்ள முடியாத நிலையில்தான் அச் சம்பவம் நடைபெற்றது."

என்று அப் பிரசுரத்தில் புலிகளால் விளக்கம் சொல்லப்பட்டிருந்தது.

அதன் பின்னர் 'ரெலி' இயக்கம் சில காலம் இயங்கியதாயினும் பின்னர் செயலிழந்து விட்டது.

### மலையக அகதிகள்

மலையகத்தில் நடந்த வன்செயல்கள் காரணமாக இடம்பெயர்ந்த மலையக தமிழ் குடும்பங்கள் வவுனியாவில் குடியேறி இருந்தனர்.

வவுனியாவில் நடைபெற்ற இராணுவத்தினரின் தேடுதல் வேட்டைகளில் அங்கிருந்த மலையகத் தமிழர்கள் தொல்லைகளுக்கு உள்ளாயினர்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள நெடுங்கேணிப் பகுதியில் 'டொலர்', 'கென்ற்' என்னும் பண்ணைகளில் சிங்கள மக்களை அரசு குடியேற்றியது.

அநுராதபுரத்திலிருந்து அழைத்து வரப்பட்ட குடியேற்றவாசிகளில் பெரும்பாலானவர்கள் பழைய 'கேடி'கள். சிறையில் இருந்து வந்தவர்கள். அவர்களுக்கு ஆயுதங்களும் வழங்கப்பட்டிருந்தன.

அருகில் இருந்த தமிழ் குடும்பங்கள் இந்த ஆயுதம் தாங்கியவர்களால் மிரட்டல்களுக்கு உள்ளாகின. மலையகத் தமிழ் குடும்பங்களும் அதில் அடக்கம்.

### அற்புதன் — எழுதுவது

### இயக்கப் பிரசாரங்கள்

1984 இன் இறுதியில் ஒவ்வொரு தமிழ் இயக்கமும் தமது பலத்தை வெளிப்படுத்தும் பிரசாரங்களில் ஈடுபடத் தொடங்கின.

தாக்குதல் நடவடிக்கைகள் மூலம் தாமே முன்னணி இயக்கம் என்று காட்டுவதும் அதில் ஒரு முறையாகும்.

இதனால், தமது தாக்குதல்களின் போது பலியாகும் படையினரது எண்ணிக்கையை அதிகமாகக் கூறிக் கொண்டிருந்தார்கள். இதற்கு ஒரு சுவாரசியமான உதாரணம் கூறுகிறேன்.

காரைநகர் கடற்படை முகாம்மீது ஈ.பி.ஆர்.எல்.எஃப். 1984இல் தாக்குதல் நடத்தியபோது கடற்படையினர் எவரும் இறந்ததாகவே அரசு கூறவில்லை. சிலர் காயமடைந்தனர்.

ஆனால் -ஈ.பி.ஆர்.எல்.எஃப். பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை என்ன கூறியது தெரியுமா?

"150 கடற்படையினர் பலி. கடற்படை முகாம் தரைமட்டம்!"

இதே போல - யாழ்தேவி புகை வண்டி மீதான தாக்குதலில் நூற்றி இருபது பேர் வரையிலான இராணுவத்தினரே பலியாகியிருந்தனர்.

280 பேர் பலியானதாக தமிழ்நாட்டில் அறிவித்தது ரெலோ இயக்கம்.

இதே வேளை தமது உறுப்பினர்கள் ஆயுதங்களோடும், சீருடைகளோடும் அணிவகுத்து நிற்கும் புகைப்படங்களை வெளியிடுவதிலும் இயக்கங்களுக்குள் பலத்த போட்டி நிலவியது.

முதலில் தமது உறுப்பினர்களது புகைப்படங்களை வெளியிட்டது புலிகள் இயக்கம்.

இதனையடுத்து ஏனைய இயக்கங்களும் புகைப்படங்களை வெளியிட்டன.

முதல் இடத்திற்கு வந்துவிட வேண்டும் என்ற போட்டியில் முக்கிய இயக்கங்கள் களத்தில் குதித்திருந்தமையைக் கோடிட்டுக் காட்டவே இதனைத் தெரிவித்தேன்.

தமிழக மக்களிடமும் தமது பலத்தை பெரிதுபடுத்திக் காட்டுவதில் ஈழப்போராளி அமைப்புக்கள் ஈடுபட்டிருந்தன.

### எம்.ஜி.ஆரும் பிரபாவும்

தமிழக அரசியல் தலைவர்களிடம் சென்று, ஒவ்வொரு இயக்கத் தலைவர்களும் தாமே பெரும் இயக்கம் என்று கூறிக் கொண்டிருந்தனர்.

ஒவ்வொரு இயக்கமும் தம்மை நியாயப்படுத்த மற்றைய இயக்கத்தின் பொட்டுக் கேடுகளை ஒப்புவித்துவிடும். இதனால் ஈழப் போராளி அமைப்புக்கள் அனைத்தினதும் உள் பிரச்சனைகள் தமிழக அரசியல் தலைவர்களுக்கு அத்துப்படியாகி விட்டன.

இதே வேளையில் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். புலிகளது தலைவர் பிரபாகரன் மீது கவனம் செலுத்த ஆரம்பித்தார்.

எம்.ஜி.ஆர். தலைமையிலான தமிழக அரசோடு முதலில் நெருக்கமாக இருந்தது புளொட் அமைப்பு.

எம்.ஜி.ஆர் அமைச்சரவையில் இருந்த எஸ்.டி.சோமசுந்தரம் மூலமாகவே அந்த நெருக்கம் ஏற்பட்டது.

எம்.ஜி.ஆரோடு முரண்பட்டுக் கொண்டு எஸ்.டி. சோமசுந்தரம் தனிக் கட்சி ஆரம்பித்தபோது அந்த நெருக்கம் குறையத் தொடங்கியது.

எம்.ஜி.ஆர் பிரபாகரனை சந்திக்க விரும்பினார். முதல் சந்திப்பிலேயே பிரபாகரனை எம்.ஜி.ஆருக்குப் பிடித்து விட்டது.

அவர் நடித்த படங்களை விரும்பிப் பார்ப்பதாகவும், அந்தப் படங்கள் மூலமாகவும் அநீதிகளை எதிர்க்கும் உணர்வு சிறு வயதில் வளர்ந்தது என்றும் எம்.ஜி.ஆரிடம் கூறினார் பிரபாகரன்.

எம்.ஜி.ஆர் குளிர்ந்து போனார். கூடவே இன்னொரு திட்டமும் அவர் மனதில் விரிந்தது.

(தொடர்ந்து வரும்)



பலியான கரும்புலி தமிழினியோடும்-மீண்டுவந்த கரும்புலி செவ்வானத்தோடும் பிரபாகரன். (குறியிட்டால் காட்டப்பட்டிருப்பவரே செவ்வானம்)

# பலியான கரும்புலி மீண்டதெப்படி?

## கடற்போரில் புலிகளுக்கு ஆச்சரியம்!

மாண்டு போனார் என்று நினைத்தவர் மீண்டு வந்தால்... ஆச்சரியம் அடர்த்தியாகிவிடுமல்லவா?

புலிகளுக்கும் அப்படியொரு ஆச்சரியம் ஏற்பட்டிருக்கிறது.

16.07.95 அன்று கடற்புலிகள் அணியொன்று காங்கேசன்துறை கடற்பரப்புக்கு விரைந்தது. அந்த அணியில் மொத்தம் மூன்று படைப்பிரிவுகள் பங்கேற்றிருந்தன.

அதிகாலை - 1.15 மணியளவில் கடற்பரப்பில் புலிகளுக்கும், கடற்படைக்கும் இடையே மோதல் தொடங்கியது. அதிகாலை 5.30 வரை மோதல் இடம் பெற்றது.

மோதல் நடைபெற்றுக் கொண்டிருந்த போது கடற்புலிகளது இரு படகுகள் துறைமுகப் பகுதிக்குள் ஊடுருவிச் சென்றன. இரு படகுகளிலும் நான்கு கடற் கரும்புலிகள் இருந்தனர்.

மேஜர் நியூட்டன், மேஜர் தங்கம் ஆகியோர் சென்ற படகு 'எடிதாரா' கட்டளைக் கப்பலில் மோதியது.

தரையிறங்கு கப்பல் ஒன்றை நோக்கி கப்டன் தமிழினி, கப்டன் செவ்வானம் (இருவரும் பெண் கரும்புலிகள்) ஆகியோர் சென்ற படகு முன்னேறியது.

கடற்படையினர், முன்னேறி வந்த கரும்புலிப் படகை நோக்கி தாக்குதல் தொடர்ந்தனர். படகு சிதறியது.

கடற் போர் முடிந்து திரும்பிய புலிகள் தமது தரப்பில் 17 பேர் பலியானதாக அறிவித்தனர். பலியானவர்களில் நான்கு பேர் கரும்புலிகள் என்றும் அறிவிக்கப்பட்டது.

நான்கு கரும்புலிகளோடும் பிரபாகரன் இறுதியாக எடுத்துக்கொண்ட புகைப் படங்களும் யாழ்ப்பாண பத்திரிகைகளில் வெளியாகியிருந்தன.

17ம் திகதி கப்டன் செவ்வானம் என்னும் பெண் கடற்கரும்புலி கரைக்கு வந்து சேர்ந்தார். அன்று வெளியாகிய பத்திரிகைகளில், மாண்டவர் வரிசையில் தனது படமும் வெளியாகியிருப்பதைக் கண்டார்.

18ம் திகதி யாழ்ப்பாணப் பத்திரிகைகளில் கடற்கரும்புலி மீண்டு வந்துள்ள செய்தியை புலிகள் தெரிவித்திருந்தனர்.

படகு தாக்குதலுக்கு உள்ளான போது தமிழினி பலியாகி விட்டார். செவ்வானம் கடலில் குதித்து நீரடி நீச்சல் மூலம் தப்பி வந்து விட்டார். அதனால் கடற்படையினரது கண்ணிலும் அவர் சிக்கவில்லை.

கடற்புலிகள் அணியில் உள்ளவர்களுக்கு நீண்ட தூர நீச்சல், நீரடி நீச்சல் போன்ற பயிற்சிகள் வழங்கப் படுகின்றன.

நீரடி நீச்சல் உயிரோடு திரும்பக் கைகொடுத்திருக்கிறது.

கடற் புலிகளுக்கும் - கடற்படைக்கும் இடையே நடைபெற்ற முதலாவது பெரிய போர் 16.07.95 இல் நடந்ததுதான்.

இப் போருக்கு இரு கடற்புலித் தளபதிகள் தலைமை தாங்கிச் சென்றனர்.

அதில் ஒருவர் பெண், லெப்டினன்ட் கேணல் மாதவி (தி.திருச்செல்வி - அல்வாய்) இன்னொருவர் லெப்டினன்ட் கேணல் நரேஸ். (சி.நவராஜன் - திருக்கோணமலை) இந்த இரு தளபதிகளும்,மேலும் 14 கடற்புலிகளும் (மூவர் கரும்புலிகள்) 16.07.95 கடற் போரில் பலியானார்கள்.

www.padippakam.com

# இறுதி முடிவாக அமையாத ஜனாதிபதியின் அரசியல் தீர்வு யோசனைகள்!

அலசுவது - இராஜதந்திரி

**"இலங்கையில் வாழுகின்ற பெரும்பான்மைச் சிங்கள இனமக்கள் தமிழர்கள் என்ற பெரும் சமுத்திரத்தில் தாம் ஒரு சிறு தீவாக இருப்பதைப் போன்ற உணர்வையே கொண்டுள்ளார்கள். இலங்கையின் வடக்கு-கிழக்கு, மத்திய பிரதேசங்களில் தமிழர்கள் வாழ்கின்றார்கள். இது தவிர இலங்கைக்கு வடக்கே தென்னிந்தியாவில் தமிழ் நாட்டிலும் ஆறு கோடி தமிழ் மக்கள் வாழ்கின்றார்கள். இதன் காரணமாக தமிழினத்தினால் தாம் சூழப்பட்டுள்ள உணர்வு இலங்கையில் பெரும்பான்மை சிங்கள இனத்தவரிடையே காணப் படுகின்றது." என்று இலங்கைக்கான முன்னாள் இந்திய உயர் இஸ்தானிகர் திரு.நாகேந்திரநாத் ஜா ஒரு தடவை குறிப்பிட்டிருந்தார்.**

இன்றைய இலங்கையின் அரசியல் நிலவரத்தை நோக்கும் போது திரு.நாகேந்திரநாத் ஜா சிங்கள மக்களின் கண்ணோட்டத்தை சரிவர எடைபோட்டுள்ளார் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

## பேரினவாதப் போர்வெறிக்கு காலிவீதியில் நினைவுத்தூபி

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தமது அரசாங்கத்தின் அரசியல் தீர்வுத்திட்ட யோசனையை வெளியிட்டுள்ளார். வடக்கு-கிழக்குப் பிரச்னையின் பலதரப்பட்ட அம்சங்கள் தொடர்பாக சந்திரிகா அரசு முன்வைக்கக்கூடிய தீர்வு யோசனைகள் அத்தீர்வுத் திட்டத்தில் அடங்குகின்றன.

இருந்தபோதிலும் இவை வெறுமனே யோசனைகளாக மட்டுமே இருக்கின்றனவே தவிர இறுதியும், முடிவுமான தீர்வாக அறிவிக்கப்படவில்லை.

ஜனாதிபதி சந்திரிகா தமது அரசின் இத்தீர்வு யோசனைகள் குறித்து தமிழ் அரசியல் கட்சிகள் உட்பட பல்வேறு அரசியல் கட்சிகளுடனும் கலந்துரையாடியிருந்தார். அத்துடன் நாட்டு மக்களுக்கும் தொலைக்காட்சி, வானொலி என்பன மூலமாக தமது தீர்வு யோசனைகள் குறித்து விரிவான விளக்கத்தை வெளியிட்டிருந்தார்.

இலங்கையின் இன்றைய வடக்கு-கிழக்குப் பிரச்னை மிகவும் சிக்கலானது மட்டுமல்ல, நாட்டு மக்களின் உயிருடன் விளையாடுவதாகவும் இருக்கின்றது.

ஜனாதிபதி முதற்கொண்டு, சாதாரண பிரஜைகள் வரை அனைத்து மக்களுமே ஒரு பாதுகாப்பற்ற சூழ்நிலையில் வாழ்ந்து வருவதனையே உணரமுடிகின்றது.

இத்தகைய பாரதூரமான நிலைமை உருப்பெறுவதற்கு கடந்தகால ஆட்சியாளர்கள் இலங்கை இனப்பிரச்னையை தமது விருப்பு வெறுப்புகளுக்கேற்ப சிக்கலாக்கி விட்டிருந்ததே முக்கிய காரணமாகும்.



## எல்.ரி.ரி.ஈ.யினர் அரசியல் களத்தில் குதிக்கவேண்டிய தருணம்!

இந்நிலையில் இலங்கையின் இன்றைய சந்ததியினர் மத்தியில் அரசியல் ரீதியாக மட்டுமல்ல, இராணுவ ரீதியாகவும் சவால்விட்டுவரும் ஒரு பூதாகாரப் பிரச்னையாகவே வடக்கு-கிழக்கு விவகாரம் விளங்குகின்றது.

ஜனாதிபதி சந்திரிகாவின் தீர்வு யோசனைகள் வெளியானதிலிருந்து அது குறித்து பல்வேறுபட்ட விமர்சனங்களும் வெளிவந்தவண்ணம் உள்ளன.

இந்த யோசனைகள் துணிச்சலானவை; இன்றைய பிரச்னையை கையாள ஏற்புடையவை என்று யோசனைகள் குறித்து சாதகமான விமர்சனங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அதே சமயம் வடக்கு-கிழக்கிற்கு மிதமிஞ்சிய அதிகாரங்களை வழங்குவதா? வடக்கு-கிழக்கு இணைப்பை அங்கீகரிப்பதா? என்ற ரீதியில் பேரினவாதக் கும்பல்கள் கூச்சலிட ஆரம்பித்துள்ளன.

புத்திஜீவிகள் என்ற மட்டத்திலுள்ள சிலரும், எப்போதுமே தன்னை ஒரு தீவிரவாத பௌத்த சிங்களப் பிரஜையாகக் காட்டிக் கொள்ளும் முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சரான காமினி ஜயசூரியவும், வழமை போன்றே பௌத்த மகா சங்கத்தினரும் சந்திரிகா அரசின் யோசனைகள் குறித்து தமது கண்டனக் கணைகளை ஏவிவிட்டுள்ளனர்.

எது எப்படி இருந்தபோதிலும் வடக்கு-கிழக்குப் பிரச்னையை உறுதியான முறையில் தீர்த்துவைக்க வேண்டியது ஓர் அவசரத் தேவையாக இருக்கின்றது. இல்லையேல் முழு நாடுமே குட்டிச்சுவராகி விடுவதுடன், அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த ஜெர்மன் பாராளுமன்ற உறுப்பினர்கள் அணியொன்று குறிப்பிட்டது போல, உலக சமூகம் இலங்கையை மறந்துவிடும் சூழ்நிலைகளே ஏற்பட்டுவிடும்.

இலங்கை இனப்பிரச்னையின் ஆரம்பக்கட்டத்திலிருந்து பல்வேறு தீர்வு முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆனால், அவை எதுவும் 'இதய சுத்தி' யானவையாகவோ அல்லது தகுந்த தீர்வை ஏற்படுத்தக் கூடியவையாகவோ காணப்படவில்லை.

இன்றைய ஜனாதிபதி சந்திரிகாவின் தந்தையான முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்காவே இலங்கையில். இனவாதக் கண்ணோட்டங்களுக்கு அடித்தளமிட்டார்.

சுதந்திர இலங்கையில் 'சிங்களம் மட்டுமே' என்ற அமரர் பண்டாரநாயக்காவின் 'சித்தாந்தம்' அரசியல் ரகளையை மட்டுமல்ல, இனரீதியான வன்முறைகளையும் உருவாக்கிவிட்டிருந்தது.

ஆயினும் இனப்பிரச்னையை ஒரு முடிவுக்குக் கொண்டுவரும் வகையில், 'பண்டா-செல்வா ஒப்பந்தம்' என்ற ரீதியில் அமரர் பண்டாரநாயக்காவும், தமிழ் அரசில் தலைவர் அமரர் எஸ்.ஜே.வி. செல்வநாயகமும் தீர்வுத்திட்டமொன்றைக் கொண்டுவர முற்பட்டனர்.

ஆயினும் இத்தீர்வு முயற்சியை அன்று ஐ.தே.க. அரசியலாளரான ஜே.ஆர்.ஜயவர்த்தனா முறியடித்திருந்தார்.

இதனை அடுத்து முன்னாள் பிரதமர் அமரர் டட்லி சேனநாயக்காவுக்கும் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்துக்குமிடையே மீண்டும் 'டட்லி-செல்வா ஒப்பந்தம்' என்ற மற்றுமொரு தீர்வுத் திட்டம் 1965ம் ஆண்டு தயாரானது.

இந்த ஒப்பந்தம் தமிழ் மொழி அமுலாக்கம் மற்றும் தமிழ் பிரதேச குடியேற்றம் என்பன குறித்த தீர்வுத்திட்டங்களை உள்ளடக்கியிருந்தது.

ஆயினும் பௌத்த பிக்குமார்களே வீதியில் இறங்கிக் கலகம் செய்து இந்த ஒப்பந்தத்தை கிழித்தெறியச் செய்தனர்.

இந்த ஒப்பந்தம் தொடர்பாக பிக்குமார்கள் கொழும்பு காலிவீதியில் போட்ட கலகத்தை அடக்க பொலிசார் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தனர். இதில் பௌத்த பிக்கு ஒருவர் துப்பாக்கி வெடிக்கு இலக்காகி உயிரிழந்தார்.

கொல்லப்பட்ட பிக்குவின் ஞாபகார்த்தமாக அவர் உயிரிழந்த இடத்தில்-அதாவது கொழும்பு காலிவீதியில் உள்ள அமெரிக்க தூதராலயத்துக்கு அருகே நினைவுச் சின்னம் ஒன்று எழுப்பப்பட்டிருப்பதை இன்றும் காணலாம்.

இலங்கையில் பெரும்பான்மைச் சிங்கள மக்களைப் பொறுத்தவரை இந்த நினைவுச் சின்னம் அஞ்சலிக்குரியதொன்றாக இருக்கலாம். ஆனால் நிதானமாக நோக்கும் போது சமாதான ஒப்பந்தமொன்றை நிராகரிக்கச் செய்வதற்காகத் தனது உயிரைக் கொடுத்த ஒரு பேரினவாதப் பேர்வழியின் சின்னமாகவே அந்த நினைவுத் தூபியை நோக்க முடியும்.

எனவே, அப்பௌத்த பிக்குவின் நினைவுத்தூபி இலங்கையில் பேரினவாதக் கும்பலின் கெடுபிடிக்கு ஒரு நல்ல உதாரணமாக இருப்பதையே அறிந்துகொள்ளமுடியும்.

இதேவேளை இனப்பிரச்னைக்கான பல்வேறு தீர்வு முயற்சிகள் ஐ.தே.கட்சியின் கடந்த 17 வருட காலத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

1977ம் ஆண்டில் ஐ.தே.கட்சி பெரும்பான்மை பலத்துடன் ஆட்சிக்கு வந்திருந்தது. அதே சமயம் இலங்கையின் வடக்கு-கிழக்கிலும் 'தமிழ் ஈழ'க் கோரிக்கை வலுவடைந்த நிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணி பெரும் பலத்துடன் பாராளுமன்றம் சென்றிருந்தது.

அரசியல் ரீதியாக இனப்பிரச்னை தீர்வு குறித்து பல பின்னடைவுகளைக் கண்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் 'தமிழ் ஈழ'க் கோரிக்கை வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களின் மறுக்கப்பட்ட உரிமைகள், தனித்துவங்கள் என்பவற்றை தீவிரமாக வலியுறுத்துவதாக இருந்தது.

இந்நிலையில் இலங்கையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை அறிமுகஞ் செய்த ஜே.ஆர். ஜயவர்த்தன அரசு தனது முதலாவது இனப்பிரச்னைத் தீர்வுமுயற்சியாக மாவட்ட அபிவிருத்தி சபைகளை உருவாக்க முன்வந்திருந்தது.

இத்தருணத்தில் வடக்கு-கிழக்கில் தீவிரவாத அரசியலும் தலை எடுத்து தமிழீழ கோரிக்கை மேலும் வலுப்பெற்றது. இத்தகைய வலுவான நிலைக்கு முன்பாக ஜே.ஆர்.ஜயவர்தனவின் மாவட்ட அபிவிருத்தி சபைகளை அடிப்படையாகக் கொண்ட அரைவேக்காடான தீர்வுமுயற்சி வலுவிழந்து போயிற்று.

இதேவேளை தமிழ் தீவிரவாதிகளின் கை மேலோங்கிய நிலையில் இலங்கைத் தமிழர் பிரச்னையை ஆழமாகவும், ஆணித்தரமாகவும் கையாள வேண்டிய நிர்ப்பந்தம் ஜே.ஆர்.அரசுக்கு ஏற்பட்டது.

1983 ம் ஆண்டின் இனக்கலவரம் இனப்பிரச்னை குறித்த தீவிரவாதப்போக்கை சுவாலைவிட்டெரியச் செய்தது. இந்நிலையிலேயே ஐ.தே.க. ஆட்சியாளர்கள் இராணுவ அணுகுமுறைகளையும் தமக்கு பக்கபலமாக்கிக் கொண்டனர்.

தீவிரவாதப் போராட்டம் பல்வேறு பரிமாணங்களை எடுத்திருந்ததாலேயே ஜே.ஆர்.அரசு இந்திய அரசின் அனுசரணையுடன் தமிழ் தீவிரவாத அமைப்புக்களுடனும், மிதவாத அரசியலாளர்களுடனும் பூட்டான் தேசத்தின் தலைநகரான திம்புவில் சமரச பேச்சுக்களை முதலில் ஆரம்பித்தது. ஆனால் இப்பேச்சுக்கள் தோல்வியில் முடிவடைந்தன.

தொடர்ந்து 1987ம் ஆண்டு ஜே.ஆர்.அரசு இலங்கை-இந்திய ஒப்பந்தம் மூலம் வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு தீர்வுகாண எடுத்த முயற்சியும் தோல்வியில் முடிவடைந்ததையடுத்து, இன்றுவரை அரசியல், இராணுவ ரீதியாக பல்வேறு சிக்கல்களை உருவாக்கிய நிலையில் இனப்பிரச்னை தொடர்ந்து கொண்டிருக்கக் காணப்படுகின்றது.

இந்நிலையிலேயே ஜனாதிபதி சந்திரிகாவின் அரசியல் தீர்வு யோசனைகள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன.

இந்த யோசனைகள் குறித்து தமது கருத்தை வெளியிட்டுள்ள ஜனாதிபதி சந்திரிகா "இலங்கையில் இன, மத வாதங்களுக்கு இடந்தராது உறுதியான சமாதான சகவாழ்வை ஏற்படுத்துவதே தீர்வு யோசனைகளின் நோக்கமாகும். எனவே நாட்டு மக்கள் இதற்கு தமது ஆதரவைத் தரவேண்டும்" என்று கேட்டுள்ளார்.

எது எப்படியிருந்த போதிலும் ஜனாதிபதி சந்திரிகாவின் அரசியல் தீர்வுகுறித்த முஸ்தீபு வரவேற்கப்பட வேண்டிய தொன்றாகும். அத்துடன் வடக்கு-கிழக்கு பிரச்னைத் தீர்வு தொடர்பாக மேலும் விரிவாக ஆராயப்படக்கூடியவகையில் அதிகாரப்பரவலாக்கம் குறித்து பல்வேறு அம்சங்களும் இத்தீர்வு யோசனைகளில் அடங்கியிருக்கின்றன.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) யினர் இத்தீர்வு யோசனைகள் விடயத்தில் வெளியிட்டுள்ள கருத்தில் வடக்கு-கிழக்கு இணைப்பு என்ற அடிப்படை அம்சம் உறுதி செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளதுடன் அதிகாரப்பரவலாக்கம் தொடர்பாக சேர்த்துக் கொள்ளப்பட வேண்டிய அம்சங்கள் பலவற்றையும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே ஜனாதிபதி சந்திரிகாவினால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வு யோசனைகள் இறுதியும் முடிவுமானவையல்ல. அந்த யோசனைகள் பல்வேறு சவால்களையும் சந்திக்க வேண்டியவையாகவுள்ளன.

மறுபுறத்தே வடக்கு-கிழக்கின் தமிழ் அரசியல் கட்சிகள் இத் தீர்வு யோசனைகள் விடயத்தில் அரசியல் ரீதியாக பெரும் பங்களிப்பை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

தமது சொந்த நலன்கள், அற்ப-சொற்ப எதிர்பார்ப்புகள், என்பவற்றுக்கு அப்பாற்பட்ட விதத்தில் தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுபட்டு இத்தீர்வு யோசனைகளின் சாதக-பாதக அம்சங்களை ஆராய்ந்து ஒரு தீர்வைக்காண வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகியுள்ளன.

இவையாவற்றுக்கும் மேலாக இராணுவரீதியாகவே தமது பலத்தை நிருபித்து வரும் தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் ரீதியாகக் களத்தில் குதிக்க வேண்டியதும் மிக அவசியமாகின்றது.

சமஷ்டி அடிப்படையிலான தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்கும் பட்சத்தில் அதுகுறித்தும் பரிசீலனை செய்யத் தாம் தயாராக இருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு.வேலுப்பிள்ளை பிரபாகரன் ஏற்கனவே பல தடவைகள் தெரிவித்துள்ளார்.

சந்திரிகா அரசு தனது இந்த யோசனைகளை சமஷ்டி அடிப்படையிலானது என்று வெளிப்படையாக அறிவிக்கவில்லை. அத்துடன் எல்.ரி.ரி.ஈ.யினர் வடக்கு-கிழக்குப் பிரச்னை தொடர்பாக எதிர்பார்க்கின்ற தீர்வுத் திட்டத்தை எவ்வளவு தூரம் சந்திரிகாவின் தீர்வு யோசனைகள் அனுசரித்துள்ளன என்பது எல்.ரி.ரி.ஈ.யினருக்கே வெளிச்சம்.

எனவே அரசியல் களத்திலும் குதித்து, தமது எதிர்பார்ப்பு யாது? அது தொடர்பில் அரசின் தீர்வு யோசனைகள் எத்துணை சாதகமான அல்லது பாதகமான அம்சங்களைக் கொண்டுள்ளன என்ற கண்ணோட்டங்களை எல்.ரி.ரி.ஈ.யினர் வெளியிடுவது மிகவும் இன்றியமையாததாகின்றது.

இதனையே முழு நாடும் எதிர்பார்த்திருக்கின்றது.

இந்நிலையில் ஒரு முற்றுமுழுதான தீர்வு என்ற இலக்கை நோக்கிச் செல்ல வேண்டிய தூரம் சற்று அதிகமானதாகவே இருப்பதை உணரமுடிகின்றது. களைப்பு, சலிப்பு, விரக்தியின்றி பயணத்தைத் தொடர வேண்டியது இன்றியமையாததாகின்றது.


படிப்பகம்

# ஜிகாத் ஜிகாத் அபு ஜிகாத்

## 3

தருவது - ரசிகன்

ஜிகாத்-புனித யுத்தம்.
அபு-ஜிகாத்-புனித யுத்தத்தின் தந்தை.
அபு-ஜிகாத் என்று பாலஸ்தீனர்களால் அழைக்கப்பட்டவர்-
கலீல் அல்-வாஸீர்!
அல்-வாஸீரின் கதையை முடிக்க இஸ்ரேல் மரண வலை விரித்தது.
மரணத்தோடு போராடிய புனிதப் போராளியின் கதையில் ஒரு துளி தான் இது—

அவர்கள் எட்டுப்பேர். எட்டுப் பேரும் விறைப்பாக நின்றுகொண்டிருந்தனர். எட்டுப் பேரும் தம் எதிரே அமர்ந்திருந்த அதிகாரியின் உதடுகளில் இருந்து உதிரும் ஒவ்வொரு வார்த்தைக்காகவும் காதுகளை உஷாராக வைத்திருந்தனர். எதிரே அமர்ந்திருந்தவர் 'மொசாட்' உயரதிகாரி.

உயரதிகாரியின் தலைக்கு பின்புறச் சுவரில்- மேலே நாட்காட்டி. இன்று பெப்ரவரி 16 என்று சொல்லிக் கொண்டிருந்தது.

"இன்றிலிருந்து சரியாக மூன்று மாதங்கள். மூன்றே மூன்று மாதங்கள்!" என்றார் உயரதிகாரி.

எதற்கு மூன்று மாதங்கள்? எட்டுப் பேருக்கும் எதுவும் புரியவில்லை. எட்டுப் பேரில் ஒரு பெண்ணும் இருந்தாள். திடமான தேகம்: பயிற்சியால் உரமேறிய உடல்; எட்டுப் பேருக்குமே வளமான உடல்; எட்டுப் பேரும் கொமாண்டோக்கள். அதாவது அதிரடிப்படை வீரர்கள்.

உயரதிகாரி தன் கட்டை விரலால் இடதுபுருவத்தை வருடிக் கொண்டே எட்டுப் பேரையும் உற்று நோக்கினார். உதடுகளை அசைத்தார்.

"அல்-வாஸிர்- கலீல் அல் -வாஸிர்! கேள்விப்பட்டிருக்கிறீர்களா?"

"பட்டிருக்கிறோம்!"

கோராஸாகப் பதில் வந்தது.

"நல்லது; அபிப்பிராயம்....?"

"நமது விரோதி!"

மீண்டும் கோரஸ்.

"ஆகவே...?"

இது உயரதிகாரி.

"அழிக்கப்பட்டேயாகவேண்டும்!"

மூன்றாவது தடவையும் கோரஸ். உயரதிகாரி முகத்தில் தாராளமான புன்னகை.

"அழிக்கப்போகிறீர்கள்! அதற்காகவே நீங்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கிறீர்கள்! திட்டம் விளக்கப்படும்: தேவையான உதவி தரப்படும்."

எட்டுப்பேரும் முகங்களில் சலனமில்லாமல் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

"முதலில் நம் உளவுத்துறை தந்த தகவல்களை எட்டுப்பேரும் அடிமுதல் நுனிவரை ஒரு எழுத்தும் விடாமல் படித்துப் பாருங்கள். சந்தேகங்களைக் குறித்துக் கொள்ளுங்கள். விளக்கம் என்னிடம் கேளுங்கள். அல்-வாஸீரின் ஒவ்வொரு அசைவும் உளவுத்துறையின் அறிக்கையில் படம்பிடித்துக் காட்டப்பட்டிருக்கிறது."

சொல்லிக் கொண்டே தனது மேசையின் இழுப்பறையில் இருந்து சில கோப்புக்களை எடுத்து மேசையில் போட்டார். "மிக மிக இரகசியம்" என்று கோப்புக்களின் நெற்றியில் குறிக்கப்பட்டிருந்தது.

"இவற்றை எடுத்துக் கொள்ளுங்கள். இன்னும் ஒரு வாரத்தில் புறப்பட வேண்டிவரலாம். இன்றிலிருந்து மூன்று மாதங்களுக்குள் அல்-வாஸீர் கதைக்கு முற்றுப்புள்ளி . அதாவது....வேண்டாம்... தாக்குதலுக்கான திகதி பின்னர் சொல்லப்படும். நீங்கள் போகலாம்."

அறையின் இடதுபுறம் கையைக் காட்டினார். அவர்கள் செல்ல, மேசையில் இருந்த ஒரு பட்டனை அழுத்தினார். சுவரோடு சுவராக இருந்த கதவு திறந்தது. அவர்கள் அவ்வழியாக வெளியேற தானாக மீண்டும் மூடிக்கொண்டு சுவரோடு சுவராக கலந்து நின்றது.

மேசைமீதிருந்த 'இன்டர்கொம்' எடுத்து "அவர்களை உள்ளே அனுப்பு." என்றார். மேசையில் இருந்த இன்னொரு பட்டனைத் தட்டினார். இப்போது அறையின் வலபுறச் சுவர் விலகியது. அவர்கள் உள்ளே வந்தார்கள். மொத்தம் பன்னிரண்டு பேர். சுவர் இணைந்து கொண்டது.

"வாருங்கள்."

என்றார் அதிகாரி. மேசையில் ஒரு வரைபடத்தைத் தூக்கிப்போட்டார்.

"இதுதான் நீங்கள் சென்று செயற்படப்போகும் பகுதி. ரியுனிசியாவின் வரைபடம் இது. அலசுங்கள்! கடலில் மீன்கள் இருப்பது போல, ரியுனிசியாவில் நீங்கள் புகுந்து கலந்துவிட வேண்டும்."



அவர்களில் ஒருவன் வரைபடத்தை எடுத்துக் கொண்டான்.

"ரியுனிசியாவின் வரைபடம்தான் அது. இது ரியுனிசியாவை வீடியோவில் சுருட்டி வைத்திருக்கிறோம். போட்டுப்பாருங்கள்."

அதிகாரியின் கரத்தில் இருந்த வீடியோ கொப்பி கைமாறியது.

"சந்தேகங்கள் இருந்தால் குறித்துவைத்து என்னிடம் கேட்கலாம். இறுதித் திட்டம் விரைவில் சொல்லப்படும்."

"எங்கள் திட்டத்தின் முடிவு விரைவில் தெரியவரும்."

என்றார் அல்-வாஸீர், தனது இராணுவப்பிரிவு உறுப்பினர்களிடம்.

"மார்ச் 7ம் திகதி எமது திட்டம் நிறைவேற்றப்படும். பாலஸ்தீனர்களின் உயிர்கள் உதிரும்போது, இஸ்ரேலியர்கள் நிம்மதியாக உறங்கிக்கொண்டிருக்க முடியாது என்று தெரிவிக்கப்போகிறோம்."

என்றார் அல்-வாஸீர்.

திட்டப்படி புறப்பட்டனர் அல்-வாஸீரின் அணியினர்.

இஸ்ரேலிய அமைச்சரவை அவசரமாக கூடியிருந்தது. பிரதமர் இறுக்கமான முகத்தோடு சொன்னார்:

"நெகவ் பாலைவனத்தில் பஸ் ஒன்றைக் கடத்திவிட்டார்கள் பயங்கரவாதிகள்."

ஒரு அமைச்சர் குறுக்கிட்டார்,

"பயணிகளின் கதி?"

"பயணிகளில் இஸ்ரேலியர்களை மட்டுமே பொறுக்கியெடுத்து கொன்றுவிட்டார்கள். மூன்று இஸ்ரேலியர்கள் பலியாகிவிட்டனர். இனியும் இதனையெல்லாம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க முடியாது."

"காரணம் யார்?"

"அல் -வாஸீரின் திட்டம்தான் என்று உளவுத்துறை அடித்துச் சொல்கிறது."

பாதுகாப்பு அமைச்சர்தான் அப்படிச் சொன்னார். உடனே பிரதமர் கோபத்தில் உதடுகள் துடிக்க,

"அல்-வாஸீர்!! அல்-வாஸீர்!! அல்-வாஸீர்!! விட்டால் 'டெல் அவிவ்' வரை வந்து நமக்கே ஹலோ சொல்வார்கள் போல் இருக்கிறது."

"விட்டால்தானே!"

என்றார் பாதுகாப்பு அமைச்சர் உதட்டுக்குள் ஒரு மர்மப் புன்னகையுடன்.

அமைச்சரவை விவாதம் முடிந்து கலைந்து சென்றபின்னர், பிரதமரும், பாதுகாப்பு அமைச்சரும் இரகசியம் பேசினார்கள். இறுதியில் பிரதமர் சொன்னார்,

"டபிள் ஓ.கே!"

மொசாட்டும், இஸ்ரேலிய பாதுகாப்பு படை உயர் பீடமும் இணைந்து தயாரித்த திட்டம் அதிரடிப்படை வீரர்களுக்கு விளக்கப்பட்டது.

இரு அணியாக தாக்குதலுக்கான திட்டத்துக்கு தயாராக்கப்பட்டவர்களும் இணைக்கப்பட்டனர். இப்போது மொத்தம் 20 பேர் இருந்தனர்.

மொசாட் உயரதிகாரி தன் அருகில் நின்ற அதிகாரியை நோக்கி கண்களால் சைகை காட்டினார். அந்த அதிகாரி கறுத்த பையொன்றில் இருந்து கடவுச்சீட்டுக்களை எடுத்தார்.

அத்தனையும் லெபனான் நாட்டு கடவுச் சீட்டுக்கள்.

லெபனான் நாட்டுப் பிரஜைகள் போல ரியூனிசியா நாட்டுக்குள் புகுவதுதான் நோக்கம். அங்குதான் அல்-வாஸீர் தங்கியிருந்தர். ரியூனிசியா பாதுகாப்புப் படையினருக்கு சந்தேகம் வராதவாறு, அவர்களின் கண்களில் மண்ணைத்தூவி விட்டு செல்வதுதான் முதல் கட்டம்.

20 பேரும் அரபு மொழியில் சரளமாகப் பேசவும் பயிற்றப்பட்டிருந்தார்கள்.

"ஒரு சந்தேகமும் இல்லையே?"

என்று கேட்டார் உயரதிகாரி.

"இல்லை!"

குழுத்தலைவன் பதில் சொன்னான்:

"அல்-வாஸீர் மட்டும்தான் நமது குறி. அவரது குடும்பத்துக்கு ஒரு கீறலேனும் வரக்கூடாது!"

"வராது!"

"ஏற்கனவே இஸ்ரேலியர்கள் என்றால் அநியாயம் செய்பவர்கள் என்று உலகத்துக்கு சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் பாலஸ்தீனியர்கள். எனவே, எது குறியோ அது மட்டுமே பொறியில் சிக்கினால் போதும்!"

என்றார் அதிகாரி.

அது சுலபமான காரியமல்ல.

அல்-வாஸீரோடு அவரது மனைவி, மகள் ஆகியோர் இருக்கிறார்கள். தாக்கும்போது அவர்கள் குறுக்கே வந்தால்....? குழுத்தலைவன் உள்ளே யோசித்தான். திட்டம் தோல்வியில் முடிந்தால் அதற்கு காரணம் திட்டத்தோடு சேர்த்து அதிகாரி சொன்ன நிபந்தனையாகவே இருக்கும் என்று நினைத்தான்.

புறப்பட்டார்கள்.

கப்பல் காத்துநின்றது. 20 பேரும் உள்ளே செல்ல கப்பல் மத்தியதரைக்கடல் வழியாக பயணத்தை தொடர தயாரானது.

அதேநேரம் 'போயிங் 707' விமானத்தை தயார் நிலையில் இருக்குமாறு கட்டளையிட்டார் 'மொசாட்' உயரதிகாரி.

(தொடர்ந்து வரும்)

# ஹலோ டாக்டர்

"என்ன ஆளையே காணவில்லை?"

"வெளியூர் சென்றிருந்தேன் டாக்டர். ஒரு சிக்கல்."

"என்ன, போன இடத்தில் எதாவது வம்பு பண்ணிவிட்டீரா?"



"அதெல்லாம் இல்லை. நான் நல்ல பிள்ளை டாக்டர். வெளியூரிலிருந்து திரும்பி வந்ததும் ஒரே வயிற்று வலி. வயிற்றோட்டமும் இருக்கிறது. ஏன் டாக்டர்?"

"நல்ல பிள்ளை என்றாலும் வயிற்றுக்கு தீனி தேடியிருப்பீர்தானே? வழக்கமாக சாப்பிடும் உணவு வகைகள் உடலுக்கு பழக்கமாகிவிடுகின்றன. புதிய உணவு வகைகளை சாப்பிடும் போது ஜீரண சக்தி பாதிக்கப்பட்டு குடல் ஒத்துழைக்க மறுக்கும். வெளியூர் சென்றாலும் ஒத்துவராத உணவு வகைகளை ஒதுக்குவது நல்லது"

"பழையதான உணவுப் பொருட்களை உண்பதுகூட வயிற்றுக் கோளாறு வரக் காரணம்தானே டாக்டர்?"



"ஆம். கந்தையானாலும் கசக்கிக் கட்டு. அணியும் ஆடைக்கே சுத்தம் முக்கியம். அப்படியிருக்கும் போது உள்ளே போகும் உணவு சுத்தமாக இருக்க வேண்டாமா? சிக்கனம், செலவு மிச்சம் என்று பழைய உணவை வெளியே கொட்டவே நம்மில் பலர் விரும்புவது கிடையாது."

"வயிற்றுக்குள் கொட்டி விடுகிறார்கள்!"

"வயிறென்ன குப்பைத் தொட்டியா? பழுதான உணவை வயிறு புறக்கணித்து தனது பலத்த கண்டனத்தை தெரிவிக்கும் போது வயிற்றோட்ட தாக்குதலில் நாம்சிக்கி விடுகிறோம் சமைத்து அதிக நேரம் ஆனால் கூட அந்த உணவை விலக்குவது நல்லது. குறிப்பாக குழந்தைகளுக்கு கொடுக்கவே கூடாது."

"மிரட்டுகிறீர்கள். குடல் நோய் ஒரு தொற்று நோயா டாக்டர்?"

"தொற்றுக் கிருமிகளாலும் வரும். சில வகைக் குடல்நோய்கள் உடல் கோளாறினாலும் வரும். தொற்றுக் கிருமிகளால் வரும் குடல் நோய் குடும்பத்தில் ஏனையோருக்கும் வரும் வாய்ப்புக்கள் உள்ளன. எவருக்கேனும் வயிற்றோட்டம் இருந்தால் அவர் கழிவறையைப் பயன்டுத்தி முடித்ததும் கிருமிநாசினி கலந்த நீரை கழிவறையில் ஊற்றிச் சுத்தம் செய்வது அவசியம். குழந்தைகளுக்கு வாந்திபேதி சுலபமாகத் தொற்றிவிடும்."

"இன்னொரு கேள்வி டாக்டர். தலைவலி மாத்திரைகள் உட்பட, அடிக்கடி மாத்திரை சாப்பிடுகிறவர்களுக்கு உடலில் சத்துக் குறையுமா?"

"குறையும். இதற்கு விட்டமின் 'பி' உள்ள உணவுப் பொருட்களை சாப்பிட்டால் உடல் சத்தைப் பேணலாம். காய் கறிகளிலும் விட்டமின் 'பி' இருக்கிறது."

"மற்றொரு கேள்வி, எனது நண்பன் ஒருவன் சட்டைக் கொலரை இறுக்கமாக போட்டு 'ரை' கட்டி அலுவலகம் செல்கிறான். அடிக்கடி தலை கிறு-கிறுக்கிறது என்று சொன்னான். 'சட்டைக் கொலர்' இறுக்கமாக இருப்பதுதான் காரணம் என்று நான் சொன்னேன், சரி தானே டாக்டர்?"

"மெத்தச் சரி. இதயத்தில் இருந்து மூளைக்கு இரத்தம் பாய்வது கழுத்துப் பகுதியில் உள்ள இரத்தக் குழாய் வழியாகத்தான். கழுத்தைச் சுற்றி சட்டைக் கொலர் இறுக்கமாக இருந்தால் இரத்த ஓட்டம் பாதிப்படைகிறது."

"முதுகில் தட்டிக்கொடுப்பீர்கள் என்று நினைத்தேன், சரி, நானே தட்டிக் கொள்கிறேன். சடக்கென்று எழுந்து நிற்கும் போது தலை சுற்றுவது ஏன் டாக்டர்? ஏதாவது பலவீனமா?"

"இல்லை. இதயத்தில் இருந்து மூளைக்கு சீரான இரத்த ஓட்டம் இருக்கும் போது நாம் திடீரென்று எழும்போது உடல் போக்கு மாறிவிடுகிறது. மாறிய உடல் போக்குக்கு ஏற்ப இதயத்தின் இரத்த ஓட்டம் அமைவதற்கு அரை நொடியாவது தேவைப்படும். அந்த அரை நொடிக்குள்தான் தலை லேசாக கிறுகிறுக்கிறது."

"டாக்டர், உணவுப் பொருட்கள் சிலவற்றில் 'அந்த மாதிரி' சமாச்சாரங்களுக்கு உதவும் நல்ல குணம் இருப்பதாக கேள்வி. உண்மையா டாக்டர்?"

"பொல்லாத ஆளய்யா நீர். முந்தானை முடிச்சு படத்தில் ஊர்வசி முருங்கைக் காயோடு அலைந்தார், படம் பார்த்த குடும்பஸ்தர்கள் பலர் முருங்கைக் காய்களைத் தேடத் தொடங்கினார்கள். பாதாம் பருப்பும்.... அவ்வளவு ஏன், வெங்காயத்திலும் விஷயம் இருக்கிறது தெரியுமோ?"

"வெட்கமாக இருக்கிறது டாக்டர். வெட்கத்தோடே சென்றுவிடுகிறேன்."

# நேரம் சொல்லும் மர்லின்

ஹொலிவூட் கனவு நாயகி மறைந்த மர்லின் மன்றோவுக்கு அமெரிக்க அரசு முத்திரை வெளியிட்ட செய்தியை நெடு நாட்களுக்கு முன் சொல்லிவிட்டோம்.



இப்போது மர்லின் மன்றோவின் அசத்தலான படங்களோடு சுவர்க் கடிகாரங்கள் விற்பனைக்கு வந்துவிட்டன. நேரம் பார்க்கும்போது நினைவு தடுமாறாமல் இருந்தால் சரிதான்!

மர்லின் இருந்தபோதும் ஆயிரம் பொன், இறந்த பின்பும் ஆயிரம் பொன். மர்லினின் புகைப்படங்கள் தற்போதும் இரசிகர்களிடம் போதையூட்டுகின்றன.

மர்லின் மன்றோ ஒருமுறை உடம்பில் பொட்டுத் துணியும் இல்லாமல் போஸ் கொடுத்திருந்தார். மர்லினின் நண்பர் ஒருவர் பத்திரிகையில் படத்தைப் பார்த்துவிட்டு மர்லினிடம் கேட்டாராம், "உண்மையைச் சொல்லுங்கள், அப்போது நீங்கள் எதுவுமே போட்டிருக்கவில்லையா?" மர்லின் மன்றோ அதற்கு சொன்ன பதில்: "போட்டுக்கொண்டு தானே இருந்தேன்- ரேடியோவை!"

மர்லினது படங்கள் மட்டுமல்ல, மர்லின் பற்றிய கதைகளுக்கும் நீண்ட ஆயுள்!

சும்மாவா பின்னே? இல்லாவிட்டால், அமெரிக்க ஜனாதிபதிகளில் கில்லாடியான கென்னடியே 'மர்லினே சரண்' என்று கிடந்திருப்பாரோ?

# கடைக்குப் போகலாம் துணிவீக்!

அளவுக்கு மீறி உற்சாகபானம் உள்ளே போய்விட்டால் சிலருக்கு தலை கால் புரிவதில்லை.

இங்கிலாந்தில் உள்ள பர்மிங்ஹாம் நகரில் ஒரு மதுபான விடுதி. நண்பர்கள் சிலர் சேர்ந்து உற்சாக பானத்தை வயிற்றுக்குள் ஊற்றிக் கொண்டிருந்தனர்.

திடிரென்று நண்பர்களுக்குள் ஒரு பந்தயம். "வீதியில் நிர்வாணமாக நடந்து சென்று ஒரு கடையில் ஏதாவது வாங்கிவரவேண்டும். துணிந்தவருக்கு ஒரு போத்தல் உற்சாக பானம் வழங்கப்படும்."

"இதோ நான் ரெடி" என்று முன்வந்தார் ரோலண்ட் மெல்குயிஷ். வேகமாக ஆடைகளைக் களைந்து விட்டு நடந்து போய் சூப்பர் மார்க்கெட்டில் புகுந்தார். நேராக ஒரு கடைக்குச் சென்றார். ஒரு ஜூஸ் போத்தல் வாங்கிவிட்டு பணம் கொடுத்தார்.

இத்தனைக்கும் கவுண்டரில் இருந்தது ஒரு பெண். கண்டவுடன் சற்று பயந்த போதும் பின்னர் சிரித்துக் கொண்டே மீதிப் பணத்தை கொடுத்தார். கொடுக்கும் போது அந்தப் பெண் கேட்டார்; "மீதிச் சில்லறையை எங்கே வைப்பீர்கள்?"



ரோலண்டின் துணிச்சலான துணியற்ற நடவடிக்கையை நண்பர்கள் பட்டாளம் படம்பிடித்தது. மறுநாள் போதை தெளிந்தபின் அந்தப் படத்தைப் பார்த்த ரோலண்ட் கேட்டார், "யார் இந்த போக்கிரி; கொஞ்சம் கூட விவஸ்தையே இல்லாமல்....?"

ரோலண்டை பின்பற்ற யாரும் நினைத்து விடாதீர்கள்; தர்ம அடி நிச்சயம்!

# கொ..... கொ..... கொசு.

ஆண் கொசுக்கள் யாரையும் கடிப்பதில்லை. பெண் கொசுக்கள்தான் நம்மைக் கடித்து இரத்தத்தை உறிஞ்சுகின்றன. காதுக்குள் வந்து 'உய்ய்ய்' என்று சத்தம் எழுப்புவதும் பெண் கொசுக்கள்தான்.

இரத்தத்தை உறிஞ்சும் பெண் கொசுக்கள் அவற்றை தங்கள் முட்டைக்கு வலு கொடுக்கும் சக்தியாக மாற்றிக் கொள்கின்றன. இதனால்தான் கொசுக்கள் இரத்தம் குடித்ததும் நூற்றுக்கணக்கில் முட்டையை விட்டுத் தள்ளிவிடுகின்றன.

கொசு பற்றிய இன்னொரு ஆச்சரியாமான தகவல்: ஆண் கொசுக்களின் ஆயுள் 8 அல்லது 9 நாட்கள்தான். அனால் பெண் கொசுக்களுக்கு... சுமார் ஒரு மாதம்வரை ஆயுள்.



# ரிலாக்ஸ்




"உதைப்பே உயர்வு தரும்னு போர்ட் மாட்டி யிருக்கே.. யார் வீடு அது...?"
"கவுண்டமணி யோட வீடுதான்!"



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# தகவல் பெட்டி



## பாரிய மேசையில் பந்து விளையாட்டு

மேசையின் மீது தடுப்புக்கள் உள்ள பல பிரிவுகள். ஓடி ஆடத் தேவையில்லை. எட்டி எட்டி பந்தை உதைத்துவிட வேண்டியதுதான். தடுப்புக்களைத் தாண்டி கோல் போஸ்ட்டுக்குள் பந்தை துல்லியமாக அடித்தால் ஒரு கோல். டேபிள் டென்னிஸில் மேசையில் ஏறி விளையாடுவதில்லை. ஆனால் டேபிள் உதைப் பந்தாட்டத்தில் மேசையின் மீது தான் ஆட்டமே நடக்கும். இதற்காகவே மாபெரிய, மாபலமான நாற்புறமும் மூடப்பட்ட மேசை செய்யப்பட்டுள்ளது. இந்த பரீட் சார்த்த பந்தாட்டம் நடைபெற்றது இலண்டன் விளையாட்டரங்கில்.

## இலண்டனில் நடந்த புதுவித முயற்சி

ஒரே விதமாக விளையாடிக் கொண்டிருந்தால் சலிப்பு வருமல்லவா?! அதனால்தான் ஒரு புதிய முயற்சி. டேபிள் டென்னிஸ் விளையாடுவது போல, டேபிள் உதைப் பந்தாட்டமும் வந்துவிட்டது. மேசையின் இரு பக்கமும் 'கோல் போஸ்ட்' இருக்கும். இடையிலே



## சூரியன் வந்தால் போச்சு!




வளரும் பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும் என்பார்கள். படத்தில் இருப்பதோ வளர்ந்த பிள்ளை. அதுதான் ஐஸ் கட்டியோடு விளையாடி இருக்கிறது. இலண்டனில் உள்ள சிறுவன் 'கரிபலன்சட்' வயது 12. வீட்டின் முன் உறைந்திருந்த பனிக்கட்டிகளை எடுத்து விளையாட்டுக் கார் செய்தான். சூரியன் வந்தால் கார் காணாமல் போய்விடும். அதுதான் வேடிக்கையாக, பனிக்காரின் மீது வேகமான விற்பனைக்கு என்று எழுதிவைத்திருக்கிறான். ஆறுதலாக விலை பேசிக்கொண்டிருந்தால் பனிக்கார் உருகிப் போகுமல்லவா.

## சமரசம் உலாவும் இடமே!

அணிலைக் கண்டால் போதும் அதிரடித் தாக்குதலுக்குத் தயாராகிவிடுவார் பூனையார் என்பது நமக்கெல்லாம் தெரியும். ஆனால் படத்தில் இருப்பது மகா ஆச்சரியம். போர் நிறுத்தம் செய்துவிட்ட பூனையாரோடு தொட்டு விளையாடி சமரச உறவாடுகிறார் அணிலார். நம்நாட்டில் 'ரீதீகம' பகுதியில் வராது வந்த காட்சியாய் கமராவில் சிக்கிய காட்சி இது. 'கிளிக்' செய்தவர்; ஏ:ஸி.எம்.அக்ரம். வெளிநாடுகளில் மட்டும்தான் ஆச்சரியக் காட்சிகள் சிக்குமா என்ன?



## உயிரே- என் உயிரே!

'ஆத்தா ஆடு வளர்த்தா, கோழி வளர்த்தா, நாய் வளர்க்கலையே' என்று 'பதினாறு வயதினிலே' படத்தில் கமல் பேசுவது போல வசனம் வருமல்லவா. கலிபோனியாவில் 14 வயதான நிக்கலி என்னும் சிறுமி ஆடும் வளர்க்கவில்லை, கோழியும் வளர்க்கவில்லை, பன்றி வளர்த்தாள். நிக்கலிக்கு திடீரென்று மூளையில் ஒரு நோய். சத்திர சிகிச்சை செய்தேயாக வேண்டும். கையில் பணமில்லை. நிக்கலியின் குடும்ப நண்பர் ஒருவர் பன்றிகளது கண்காட்சி ஒன்றுக்கு ஏற்பாடு செய்தார். கண்காட்சியில் நிக்கலி வளர்த்த பன்றியை ஏலம் விட்டார்கள். 216 இறாத்தல் எடை கொண்ட அந்தப் பன்றி 108 ஆயிரம் டொலருக்கு ஏலம் போனது. கிட்டத்தட்ட 54 இலட்சம் ரூபாய். இது ஒரு உலக சாதனை. நிக்கலியின் சோகத்தை அறிந்த செல்வந்தர் ஒருவரே அத்தனை பணம் கொடுத்து வாங்கினார். சிகிச்சை முடிந்து வீடு திரும்பிய நிக்கலி தனது செல்லப் பன்றியை நினைத்து கண்ணீர் விட்டாள். உயிர் காத்த பன்றியல்லவா.




தனது செல்லப்பிராணியோடு நிக்கலி 94 இல் எடுத்துக் கொண்ட படம்.



படிப்பகம்

www.padippakam.com

# சூப்பர் ஸ்டார்-சூடான மோதல்?

தமிழ் நாட்டில் இந்து முன்னணி எனப்படும் ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கும், முஸ்லிம் தீவிரவாத குழுக்களுக்கும் இடையே நடைபெறும் மோதல்களால் குண்டுவெடிப்புக்கள் தொடர்கதையாகிவிட்டன. இதற்கிடையே 'பம்பாய்' படத்தில் முஸ்லிம்களை புண்படுத்தியதாக கூறி இயக்குநர் மணிரத்னம் வீட்டுக்கும் குண்டு வீசப்பட்டது. இரண்டு குண்டுகள் வீசப்பட்டன. ஒரு குண்டு மட்டுமே வெடித்தமையால் லேசான காயங்களோடு மணிரத்னம் தப்பிக் கொண்டார்.

இவற்றையெல்லாம் பார்த்த ரஜினிகாந்த் அதிர்ந்து போனார். 'பாட்ஷா' படத்தின் வெள்ளி விழாவில் பேசிய ரஜினிகாந்த்: "வெடிகுண்டுக் கலாச்சாரம் வளர்வது நல்லதல்ல. அரசாங்கம் இதை நிறுத்த வேண்டும். இதனை அனுமதித்தால் அரசாங்கமே விபரீதங்களுக்கு பொறுப்பு" என்று பேசிவிட்டார்.

ரஜினி பேசிய விஷயம் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் காதுக்கு எட்டிவிட்டது. சில பத்திரிகைகளும் ரஜினியின் பேச்சுக்கு உள்நோக்கம் கற்பித்து எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றிவிட்டன.

இதற்கிடையே விழாவை நடத்திய சத்யா மூவிஸ் வீரப்பனை (அமைச்சர்) அழைத்து ஜெயலலிதா கிழி-கிழியென்று கிழித்து விட்டார்.

இதனால் வீரப்பன் 'அம்மா புரட்சித் தலைவிக்கு கனவிலும் துரோகம் நினைக்க மாட்டேன்' என்ற ரகத்தில் ஒரு அறிக்கை வெளியிட்டார்.

ரஜினிகாந்த் ரசிகர்கள் மீது சில பகுதிகளில் தாக்குதல்கள் நடந்தன. ரஜினிகாந்தின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டன.

விஷயம் விபரீதமாவதை உணர்ந்த ரஜினிகாந்த் ஒரு அறிக்கை வெளியிட்டார். தனது பேச்சில் உள் நோக்கம் எதுவுமில்லை என்று அதில் வெளிப்படுத்தி விட்டார் ரஜினி. ஆனாலும் அவரது அறிக்கையில் இருந்த ஒரே ஒரு விடயம் முதல்வரை சூடேற்றியிருக்கிறது.

"சாதாரண ஆளான எனது விமர்சனத்தை பெரிதுபடுத்தி, என்னைப் பெரியாளாக மாற்றிவிடாதீர்கள்."என்று குறிப்பிட்டிருந்தார். அந்த வார்த்தைகள் குத்தலா, அடக்கமா என்று தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கிறாராம் தமிழக முதல்வர்.

ஆனாலும் தற்போது மோதல் அடங்கிவிட்டது. மீண்டும் எப்போது சூடுபிடித்துக் கிளம்பும் என்று தெரியவில்லை.

## திரும்ப வருவார்

'செந்தூரபாண்டி' படத்தில் விஜய்-யுவராணி ஜோடி ஏற்படுத்திய கிளு-கிளு யாவரும் அறிந்ததே. அதன் பின்னர் யுவராணி வாய்ப்புக்கள் குவியும் என்று கலர் கலராய் கனவு கண்டார். 'பாட்சா' படத்தில் தங்கை வேசம். அதற்குப் பின்னர் தங்கை வேசங்களே தேடிவந்து கதவைத் தட்டியதால், யுவராணி தெலுங்குப் படவுலகம்சென்றார். 'அலாவுதீனும் அற்புததீபமும்' என்ற படத்தில் நடித்தார். படம் பயங்கரமான வெற்றி. இப்போது மூன்று படங்கள் தெலுங்கில் செய்கிறார். இனிமேல் தமிழில் நடிக்கக் கூப்பிட்டால் 'கதாநாயகியாகவே நடிப்பேன்' என்று கறாராகச் சொல்லப் போகிறாராம்.

## குங்கும பொட்டுக் கவுண்டர்

'காந்தி பிறந்த மண்' படம் வெளியாகி நன்றாகப் போய்க் கொண்டிருப்பதால் அதன் இயக்குநர் ஆர்.சுந்தரராஜன் அடுத்த பட வேலையில் இறங்கி விட்டார்.

சத்யராஜ் நடிக்க மணிவண்ணன் இயக்கிப் பெரும் வெற்றி பெற்ற படம் 'முதல் வசந்தம்' அந்தப் படத்தில் சத்யராஜ் குங்குமப் பொட்டுக் கவுண்டராக நடித்திருந்தார்.

அந்தப் பெயரையே தனது புதிய படத்தின் பெயராகச் சூட்டிவிட்டார் ஆர்.சுந்தரராஜன். சத்யராஜ்-சவுந்தர்யா ஜோடியாக நடிக்கின்றனர். கவுண்டமணியும் இருக்கிறார். இசை, தேவா.

## பாசவலை நல்ல நிலை

கமல்-ஆம்னி ஜோடி நடித்து மொழிமாற்றப்பட்டு தமிழுக்கு வந்துள்ளது 'பாசவலை'. சென்னையில் மட்டும் மூன்று திரையரங்குகளில் நான்கு காட்சிகள். ஒரு திரையரங்கில் பகல் காட்சி. கடந்த இரண்டு வாரங்களாக வசூல் நிலவரம் நன்றாக இருக்கிறது. பத்திரிகைகள் தரமான படம் என்று விமர்சனம் செய்துள்ளன.



சைய்ப் அலிகான்-மம்தா குல்கர்னி



## கனவு நாயகனின் புதிய காதலி

## பம்பாய் நிருபர் | கதை கட்டும் மம்தா

மம்தா குல்கர்னி கவர்ச்சி விடயத்தில் துணிச்சலுக்கு பெயர் போனவர் (படத்தைப் பார்த்தாலே தெரிகிறதல்லவா) இளம் ஹீரோக்களோடு தயக்கம் இல்லாமல் நெருங்கிவிடுவார். பின்னர் கசப்பு வந்ததும் அந்த ஹீரோக்களோடு வேறு நடிகைகளை இணைத்துக் கதை கட்டி விடுவார். மம்தாவின் இந்தக் குணாம்சத்தை அறிந்த ஹீரோக்கள் பலர் அவரைக் கண்டாலே ஓடத் தொடங்கிவிடுகிறார்கள்.

## கிழக்கு ராசி நாயகன்

'கிழக்கு வாசல்' படம் கார்த்திக் நடித்த படங்களிலேயே ஒரு கலக்குக் கலக்கிய படம். அதனால் கார்த்திக்கு கிழக்கு 'ராசி' என்று நினைத்துவிட்டார்கள். அதனால் கார்த்திக் நடிக்கும் புதிய படத்திற்கு 'கிழக்கு முகம்' என்று பெயர் வைத்துள்ளார்கள். படத்தை இயக்குபவர் புதிய இயக்குநரான எம்.அண்ணாதுரை. நடிகைகள் தேர்வு நடந்து வருகிறது. இசை, ஆதித்யன். இம்மாதம் 27ம் திகதி படப்பிடிப்பு ஆரம்பமாகிறது.



-ஜிம்காரி-

## கற்கண்டும்-டிஸ்கோசாந்தியும்

மலையாளப் படமொன்றில் போதை மருந்துப் பொடியை மூக்கில் வைத்து நுகர்வது போல் ஒரு காட்சி. நடித்தவர் டிஸ்கோ சாந்தி. போதை மருந்துப் பொடிபோல கற்கண்டைப் பொடியாக்கி நுகரக் கொடுத்தார்கள். கொஞ்சம் அதிகமாகவே உள்ளே இழுத்துவிட்டார் டிஸ்கோ. கற்கண்டுப் பொடி மூக்குக்குள் புகுந்து விட்டது. மூச்சுவிட முடியாமல் டிஸ்கோ குலுங்கித் துடித்துப் போனார். சிகிச்சை கொடுத்து தேற்றினார்கள்.

## கனகா காத்திருக்கிறார்

'ஜல்லிக்கட்டுக்காளை' (நம் நாட்டு தொலைக்காட்சியில் பார்த்திருப்பீர்களே) படத்தில் பிரபு-கனகா தான் ஜோடி. படம் வெற்றி பெறவில்லை. அதே ஜோடி நடித்துள்ள படம்தான் 'பெரிய குடும்பம்' வினிதாவும் இன்னொரு ஜோடி. விரைவில் திரைக்கு வரும் பெரிய குடும்பம் படம் வெற்றிபெற்றால் தனது 'மார்க்கெட்' ஏறுமுகமாகி விடும் என்று நம்பிக்கொண்டிருக்கிறார் கனகா. கனகாவுக்காக பிரார்த்திப்போமா?



பிரபு-கனகா
படம்-பெரிய குடும்பம்

## சோட்டி சே ஆஷா

பம்பாய் நிருபர்

தற்போது தமிழில் ஏராளவு நல்லநிலைக்கு ... மீண்டும் தனது இந்திப் பட வேலைகளை ஆரம்பித்... நீண்ட இடைவெளி ஏற்பட்டதால் படத்தின் ... மாற்றிவிட்டார்கள். 'சச்சா பியார்' என்ற பெயரை ... சோட்டி சே ஆஷா' (சின்னச் சின்ன ஆசை) ... மாற்றிவிட்டார்கள். இன்னொரு தகவல் ... பெயரை 'பாண்டே ராஜ்' என்று ... பாண்டியராஜன். பெயர் பாவம்.

## தீபாவளிக்கு ...

## காதோடு சொல்லுகிறோம்

அடிதடி சாந்தி படமொன்றுக்கு வாங்கும் தொகை கோடிக்கு மேல். கோடிகளை குட்டிபோட வைக்கும் நல்லெண்ணத்தில் புதுத் தொழில் ஒன்றைத் தொடங்கியிருக்கிறார். நிலங்களைக் குறைந்த விலையில் வளைத்துப் போட்டு வீடு கட்டி விற்கும் தொழில். சம்பாதிக்க தெரிந்த சமயோசித சாந்தி.

பம்பாய் இறக்குமதிகள் தொகை அதிகமாகி வருவதால் கோடம்பாக்க நடிகைகள் பலர் பந்தாக்களை துறந்து இறங்கிவரத் தொடங்கிவிட்டார்களாம். 'பம்பாய்க்காரிகளிடம் அப்படி என்ன இருக்கு' நாங்கள் என்ன மட்டமோ என்று தயாரிப்பாளர்களது கதவுகளை தட்டுகிறார்களாம். தயாரிப்பாளர்களுக்கு செம குஷி.

வெளிநாடுகளுக்கு சென்று நட்சத்திர கலைவிழா நடத்தும் நடிகைகள் திரும்பி வரும்போது சுமந்து வரும் பொருட்களைக் கண்டு சுங்கப் பகுதி மூக்கில் விரலை வைக்கிறதாம். எல்லாமே அன்பளிப்புக்கள் என்று தோளைக் குலுக்குகிறார்களாம் நடிகைகள். நடிகர்களுக்கு மட்டும் அன்பளிப்புக்கள் இத்தனை இல்லையே என்று அப்பாவித்தனமாக யோசித்தால் அதற்கு நடிகைகளோ பொறுப்பு? எல்லாம் ஒரு சாமர்த்தியம்தான்.

சங்கு நடிகையும் 'ரசிக' நாயகனும் படப்பிடிப்பு தளத்திலேயே உருகிப் போகிறார்களாம். இயக்குநரான தந்தையின் காதில் விஷயத்தைப் போட்டாராம் ஒருவர். அதற்கு தந்தை சொன்னாராம் "அப்படி நடக்காவிட்டால்தான் ஆச்சரியம். ஏனென்றால் அவன் வயசுபிள்ளை" அனுபவமுள்ள அப்பா.

## கம்பீர நாசர்

'அருவா வேலு' படம் பற்றிய தகவல்களை முன்னதே தந்த... இப்போது படப்பிடிப்பு பற்றிய தகவல். அரிவாள் மீசையோடு நாசர் ... கெட்டப்பில் தோன்றுகிறார். நாசர் நடித்த காட்சிகள் மி... வந்திருப்பதாகக் கூறுகிறார்கள். நாசரின் ஜோடியாக நடிக்கிறார் ஊர்வசி. இருவரும் ... நடித்துக்கொண்டிருக்கிறார்கள். தீபாவளிக்கு திரைக்கு வரும் என்று சொல்கிறார்கள்.


படிப்பகம்

www.padippakam.com


பிரபுதேவா-ரோஜா-வடிவேலு
படம்-ராசய்யா


## ஜில்-ஜில்...ஷில்பா மீன்

வி.சி.குகநாதன் நம் நாட்டுக் காரர். தமிழ் நாட்டுக்குப்போய் படவுலகில் ஏதோ ஓரளவு வசதியாக இருக்கிறார். 'மைக்கல்ராஜ்' படத்திற்கு பிறகு நீண்டகாலத்திற்கு அவரது படங்கள் எதுவும் ஹிட்டாகவில்லை. பார்த்தார் குகநாதன், ஷில்பா ஷெட்டியை நினைத்துக் கொண்டு தெலுங்கில் ஒரு கதை நெய்தார். வெங்கடேஷ்தான் கதாநாயகன். படத்தின் பெயர் 'கனவுக்கன்னி' நீச்சல் குளத்தில் ஷில்பா ஷெட்டி நீருக்கடியில் நீந்துவது போல் ஒரு காட்சி. அதை படமாக்க மட்டும் மொத்தச் செலவு ஆக. 50 லட்சம். நீருக்கடியில் ஷில்பா ஷெட்டியும், நடனக்குழுவினரும் ஆடிப் பாடும் காட்சியை மலைபோல நம்பியிருக்கிறார் குகநாதன். தெலுங்கில் 'கனவுக்கன்னி' வசூலை அள்ளினால் தமிழிலும் மொழிமாற்றப்படும். தமிழ் பட ரசிகர்களுக்கும் ஷில்பாவை மீனாகப் பார்க்கும் மாபெரும் வாய்ப்பு ஏற்படும்.

## மீண்டும் மலர்ந்த காதல்

'செந்தூரப் பூவே' படத்தில் ராம்கியும்- நிரோஷாவும் காதலித்தது திரையில் தெரிந்தது. கமராவுக்கு பின்னாலும் அவர்கள் காதல் தொடர்ந்தது. 'செந்தூரப் பூவே' படத்தில் வரும் ரயில் வண்டிபோல நீண்டு கொண்டுமிருந்தது. இடையிலே ஒரு முறிவு. வேறு- வேறு தண்டவாளங்களில் இருவரும் பிரிந்து பயணம் செய்தார்கள். பல வருட இடைவெளிக்குப் பின்னர் இருவரும் தமது பழைய காதலை தூசுதட்டி புதுப்பிக்கத் தொடங்கிவிட்டார்கள். நிரோஷா வீட்டில் பலத்த எதிர்ப்பு. முடிவு எப்படி யாகுமோ?

# சி னி வி சி ட்.


நாசர்

# அருவா வேலு

## 'பாட்டி நல்ல பாட்டிதான்'

விஷ்ணு படத்தில் விஜய்- சங்கவி ஜோடி நடித்து வருகிறதல்லவா. கிளு-கிளு குளு-குளு காட்சிகள் பற்றி முன்னரே சொல்லிவிட்டோம். விஜய் சங்கவியை விடமாட்டார் போலிருக்கிறது. புதிய படம் ஒன்றிலும் விஜய் ஜோடி சங்கவிதான். படத்தின் பெயர்: 'கோயமுத்தூர் மாப்ளே' படப்பிடிப்பு ஆகஸ்ட் 3ம் திகதி ஆரம்பமாகிவிட்டது. ஒரு பாடல் காட்சியின் ஆரம்ப வரிகளைப் பாருங்கள்: "பம்பாய் பார்ட்டி. ஷில்பா ஷெட்டி. லவ் பண்ணினாலும் ஜாலி...பாம்பம் பட்டி சின்னக் குட்டி..... ஜாலி ஜாலிதான்." பாடலை ஷாகுல் ஹமீத்தும், விஜய்யும் இணைந்து பாடியிருக்கிறார்கள். ஏற்கனவே 'ரசிகன்', 'தேவா' படங்களில் விஜய் சொந்தக் குரலில் பாடியிருந்தார். ஷில்பா ஷெட்டி பற்றி பாடலில் மட்டும்தான் வருகிறது. படத்தில் அவர் இல்லை.


ஜூஹி சவ்லா


சரத்குமார்-நக்மா
படம்-ரகசிய பொலிஸ்

## ஐயோ பாவம் குஷ்பு

குஷ்புவின் கதியைக் கேளுங்கள். 'ஐயோ பாவம்' என்பீர்கள். சூப்பர் ஹீரோக்களோடு நடித்தவர். இப்போது 'வர்றார் சண்டியர்' என்றொரு படத்தில் பிரேம்ஜோடியாக நடித்து வருகிறார். 'குரோதம்', 'வீரமணி' போன்ற படங்களை தயாரித்து நடித்தவர் பிரேம். கதாநாயகனாக அவர் நடித்த படமெல்லாமே பப்படங்களாகியிருந்தன. பப்பட நாயகனோடு பப்ளி மாஸ் (கார்த்திக் வைத்த பட்டம்) நடிக்கலாமா?

## மினி சினி

*ஷங்கர் இயக்கத்தில் கமல் நடிக்கும் 'இந்தியன்' படத்தில் கமலுக்கு ஜோடியாக மனிஷா கொய்ராலாவுடன் இன்னொரு இந்தி நடிகையான ஊர்மிளாவும் நடிக்கிறார்.

* 'பசும்பொன்' படத்தைத் தயாரித்த ஆனந்தி ஃபிலிம்ஸ் நிறுவனம் அடுத்து அரவிந்தசாமி, ராஜ்கிரண் நடிக்கும் இரண்டு படங்களை தயாரிக்கத் திட்டமிட்டுள்ளது.

* தெலுங்கில் தயாராகும் 'வனஜா கிரிஜா' படத்தில் தமிழில் மோகினி நடித்த வேடத்தில் மோகினியும், குஷ்பு நடித்த வேடத்தில் ரம்பாவும், ஊர்வசி நடித்த வேடத்தில் பானுப்பிரியாவும் நடிக்கின்றனர்.

* 'என்றும் அன்புடன்' படத்தை இயக்கிய பாக்கியநாதன் தற்போது ராதிகாவுக்கு ஜோடியாக 'சித்திரச் சோலை'யில் நடித்து வருகிறார். இப்படம் முடிவடைந்ததும் 'தமிழச்சி' படத்தை தயாரித்த நிறுவனம் தயாரிக்கும் புதிய படத்தை இயக்கவுள்ளார்.

* 'மலைச்சாரல்' படத்தில் 'சீமா' என்ற பெயரில் தமிழில் அறிமுகமாகி பின்னர் 'சீமாட்டி' என்ற பெயரிலும், கடைசியாக 'மீரா' என்ற பெயரிலும் நடித்துக் கொண்டிருந்தவர், தற்போது தெலுங்கில் 'ரேணுகா' என்ற பெயரில் நடித்து வருகிறார்.

* ஆர்.வி.உதயகுமார் இயக்க அர்ஜுன்-ரேவதி ஜோடியாக நடிக்கும் 'ஆகஸ்ட் 15' படத்தின் பெயரை மாற்றி 'சுதந்திரம்' என்று பெயர் வைக்க தீர்மானித்துள்ளார்கள்.

* பிரபல மலையாள இயக்குநரான பிரியதர்ஷன் இப்போது ஜாக்கி ஷெரப்-அனில் கபூர் நடிக்கும் 'கபி நா கபி' என்ற இந்திப் படத்தை இயக்கி வருகிறார். இப்படம் முடிவடைந்ததும் சன்னிதியோல்-ரவீனா டான்டன் நடிக்கும் ஒரு இந்திப் படத்தை இயக்கவிருக்கிறார்.

* தான் இயக்கிய 'சுபசங்கல்பம்' (தமிழில் 'பாசவலை') படத்தில் கமலின் வேண்டுகோளுக்கிணங்க சிறிய வேடமொன்றில் நடித்திருந்தார் கே. விஸ்வநாத். இந்தப் படத்தைத் தொடர்ந்து இவர் கமலின் 'குருதிப் புனல்' நாகார்ஜுனாவின் 'வஜ்ஜிரம்' ஆகிய படங்களில் நடித்துவருகிறார்.

* 'எல்லாமே என் ராசாதான்', 'புள்ளகுட்டிக் காரன்' படங்களில் சிறப்பாக நடித்துள்ள சங்கீதா அடுத்து பிரபுவுடன் ஒரு படம், கார்த்திக்குடன் ஒரு படம் என முன்னணி நடிகர்களுக்கு ஜோடியாக நடித்து வருகிறார்.

* மலையாளத்திலிருந்து தெலுங்கிற்குச் சென்று அங்கு பிஸியாக நடித்து வரும் பிரியாராமன் மீண்டும் மலையாளப் படங்களில் கவனம் செலுத்துகிறார். தற்போது மலையாளத்தில் மோகன்லாலுக்கு ஜோடியாக 'மாந்திரீகம்' என்ற படத்தில் நடித்து வருகிறார் பிரியா ராமன்.

ஆசை முகமறந்து போச்சே-இதை
ஆரிடம் சொல்வேனடி தோழி?
நேச மறக்கவில்லை நெஞ்சம்-எனில்
நினைவு முகமறக்க லாமோ?
மகாகவி பாரதியார்


ஊர்வசி
படம்-இரு வல்லவர்கள்



படிப்பகம்

# லேடீஸ் ஸ்பெஷல்

## உலக அழகியானது எப்படி?



**1994ம்** ஆண்டு 'மிஸ் வேர்ட்' 'மிஸ் யூனிவர்ஸ்' ஆகிய இரண்டு உலக அழகிப் பட்டங்களையும் இந்தியாவைச் சேர்ந்த ஐஸ்வர்யா ராயும், சுஷ்மிதா சென்னும் வாங்கி உலக கவனம் முழுவதையும் இந்தியாவின் பக்கம் ஈர்த்தார்கள். அதை யடுத்து 1995-ம் ஆண்டிலும் உலக அழகி பட்டம் இந்திய அழகிக்கே வருமென்று மிகப் பரவலாக எதிர்பார்க்கப்பட்டது. இந்த எதிர்பார்ப்புகளை ஈடுகட்டும் வகையில் நமீபியாவில் நடந்த உலக அழகிப் போட்டியில் இந்திய அழகியான மான்பிரீத் 2-வது உலக அழகியாகத்தேர்ந்தெடுக்கப் பட்டார்.

ஒரு அழகிய பெண்ணை அழகிப் போட்டிகளில் முதல் பரிசு பெறச் செய்ய எத்தனை வகையான முன்னேற்பாடுகள் செய்யப்படுகின்றன?

மான்பிரீத்தின் முக அமைப்பு முதலில் ஆராயப்பட்டது. அவரது முகம் மிகவும் நீளமானது. புன்னகை செய்யும்போது வாய் மிகவும் அகலமாகக் காட்சியளிக்கும். அவருடைய உயரமும் குறைவுதான். இருந்தபோதிலும் உலக அழகிப் போட்டியில் மான்பிரீத் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக இந்திய அழகி போட்டிகளை நடத்தும் 'ஃபெமினா நிறுவனமும்' பெரு முயற்சி எடுத்துக்கொண்டது. உலக அழகிப் போட்டிகளில் ஐஸ்வர்யா ராயும், சுஷ்மிதா சென்னும் கலந்து கொண்ட முழு வீடியோப் படங்களும் மான்பிரீத்துக்கு போட்டுக் காட்டப்பட்டு, வெற்றி பெற்றவர்கள் எந்தச் சூழ்நிலையில், எவ்வாறு நடந்து கொண்டனர் என்பது அவரது மனதில் பதியுமாறு செய்யப்பட்டது.

அவரது குறைகளில் ஒன்று கடுமையான அவருடைய பார்வை. இதைப் போக்க கூந்தல் அழகுபடுத்தல், ஒப்பனை ஆகிய வைகளின் மூலம் பார்வையில் ஒரு மென்மையை வரவழைத்து, அப்பாவித் தோற்றம் ஏற்படுத்த முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இதற்காக புகழ் பெற்ற பல்மருத்துவ நிபுணர் சந்தோஷ் மயேகர் வரவழைக்கப்பட்டு மான்பிரீத்தின் தாடைக்கு ஒரு புதிய தோற்றம் உருவாக்கப்பட்டது.

உலக அழகிப் போட்டியில் கலந்து கொள்வதற்காக நமீபியாவுக்கு புறப்படும் கடைசி நேரம் வரை தன்னுடைய பல்லில் கம்பி கட்டிக் கொண்டுதான் இருந்தார் இந்திய அழகி.

கூந்தல் அலங்கார நிபுணரான மைக்கேல் டங் என்பவரை ஃபெமினா நிறுவனம் அழைத்து வந்து மான்பிரீத்தின் கூந்தலை அவர் முக அமைப்புக்கேற்ப மாற்றி அழகுபடுத்தியது. ஒப்பனைக்கலை நிபுணர்களான சாலினி ஷிஸ்ட், வித்யா, பியா ஆகியோர் அவரது முக அழகு பொலிவதற்கு உதவினர்.


பார்வையை கவர்ச்சியாகச் செய் வதற்காக மைக்கேல் டங் என்ற நிபுணர் மான்பிரீத்துக்கு தனிப் பயிற்சியளித்தார். கண்களை எப்படி உருட்ட வேண்டும், எப்படி கனிவுடன் பார்க்க வேண்டும், இலேசான பார்வை பார்ப்பது எப்படி, கனமான பார்வை எப்படிப் பார்க்க வேண்டும். என்பதெல்லாம் அவருக்கு சொல்லித்தரப்பட்டன.

எந்த மாதிரி உடை அவரது உடலுக்கு பொருத்தமாக இருக்குமென்பதற்கு அலங் கார நிபுணர் ரிட்டு குமாரும், ஐஸ்வர்யா ராயும் மான்பிரீத்துக்கு ஆலோசனை வழங் கினார்கள். ரிட்டு குமார் எந்த வித கட்டணமும் வாங்காமலேயே மான்பிரீத்தின் உடைகளை அமைத்துக் கொடுத்தார். சில விலையுயர்ந்த உடைகளை இரவலாகக் கொடுத்து உதவினார். அத்தகைய உடைகளில் ஒன்று, 7,000 சிறு கண்ணாடிகள் வைத்து தைக்கப்பட்டு, பழமையான நகைகள் பொருத்தப்பட்ட அரை லட்ச ரூபாய் மதிப்புடையது.

அதிரடியாகக் கேள்விகள் கேட்ட போதிலும் நிதானமிழக்காமலும், கம்பீரமா கவும், கண்ணியம் தோன்றும் வண்ணம் பதில் கூறுவதற்கும் தன்னம்பிக்கை, அறிவுக் கூர்மை வெளிப்படுமாறு பேசுவதற்கும் மான்பிரீத்திற்கு பயிற்சியளிக்கப்பட்டது.

உடல்வாகு 'டிரிம்'மாக இருக்க வேண்டு மென்பதற்காக ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட நேரத்திற்கு நீச்சலடிக்க வேண்டுமென்றும், நீச்சல் வகுப்புகளும், உடற்பயிற்சி வகுப்புகளும் தொடர்ந்து நடத்தப்பட்டன.

## குளிர்சாதனப் பெட்டியை கவனியுங்கள்



உங்கள் வீட்டில் குளிர்சாதனப் பெட்டி இருக்கலாம்; அல்லது எதிர்காலத்தில் ஒன்று வாங்கலாம். குளிர்சாதனப் பெட்டியைப் பயன் படுத்துவது எப்படி என்று சில குறிப்புக்கள் தருகிறோம். எப்போதும் உதவும்.

1. குளிர்சாதனப் பெட்டியில் உணவுப் பொருட்களை மூடித் தான் வைக்க வேண்டும். திறந்த நிலையில் வைக்கக் கூடாது.

2. மாமிசம் போன்றவற்றை இறுக்கமாக மூடிவைக்க வேண்டும். இல்லையெனில் இவற்றின் வாசனை ஏனைய உணவுப் பொருட்களை பாதித்து விடும்.

3. பால், தண்ணீர் போன்றவைகளைச் சுத்தமான போத்தல்களில் ஊற்றி வைக்க வேண்டும். போத்தல்களின் மேல்பகுதி நன்றாகத் துடைக்கப்பட்ட பின்னர்தான் குளிர்சாதனப் பெட்டியில் வைக்க வேண்டும்.

4. குளிர்சாதனப் பெட்டிக்குள் இருந்த காய்கறிகளை சுத்தமான நீரில் கழுவி விட்டுத்தான் சமைக்க வேண்டும்.

5. சமைக்கப்படாத மீன், இறைச்சி போன்ற வற்றை பொலித்தீன் தாளில் நன்றாகச் சுற்றிவைக்க வேண்டும்.

6. குளிர்சாதனப் பெட்டிக்குள் காற் றின் சுழற்சியைத் தடைசெய்யக்கூடிய பெரிய பாத்திரங்களை வைக்கக்கூடாது. வாழைப் பழம், பூசணிக்காய், புடலங்காய் போன் றவைகளையும் வைக்கக்கூடாது.

7. அதிக சூடான உணவுப் பொருட் களை அவை ஆறிய பின்னரே குளிர்சாதனப் பெட்டிக்குள் வைக்கவேண்டும்.

8. சோடா உப்புக் கலந்த இளம் சூடான நீரால் குளிர்சாதனப் பெட்டியின் உட்புறத்தை சுத்தம் செய்யலாம். வெளிப் புறத்தை சோப்பு நீரினால் கழுவிவிட்டு துணியினால் துடைத்துவிடவேண்டும்.

## யாருக்கு எந்த நிறம்? ஆளுக்கேற்ற ஆடை அழகு.



**சிவப்பு:**
மன அடக்கத்தையும், ஆளுமையையும் ஏற்படுத்தும். மேலதிகாரிகள், பிறருக்கு ஆலோசனைகள் கூறுபவர்கள் இந்த வர்ண ஆடைகளை அணியலாம்.

**பச்சை:**
விவாதங்களில் ஈடுபடுபவர்களுக்கு உகந்தது.

**நீலம் மற்றும் கருநீலம்:**
நம்பிக்கையையும், மன ஒருமைப் பாட்டையும் ஏற்படுத்தும். மனநிம்மதி இல்லாதவர்கள் இதை அணியலாம்.

**வெளிர் நிறம்:**
மனத்தெளிவை ஏற்படுத்தும். 'இண்டர் வியூ' செல்பவர்கள் இந்தக் கலர் ஆடை அணியலாம்.

**வயலெட்:**
அடுத்தவரை வசீகரிக்கும். தெய்வீகத் தன்மை கொண்டது. பிறரால் வெறுக்கப் படுபவர்கள் இந்தக் கலர் ஆடைகளை அணியலாம்.

**கறுப்பு:**
வெறுப்பு ஏற்படுத்தும் தன்மை கொண் டது. ஏதாவது ஒரு விசயத்தை மறக்க விரும்புபவர்கள் இதை அணியலாம்.

**வெண்மை:**
தூய்மையான எண்ணத்தை ஏற்படுத்தும். இசை வல்லுநர்கள் மற்றும் பேச்சாளர்கள் அணியலாம்.

**மஞ்சள்:**
இது மங்களகரமான நிறம். ஆசிரியர்கள், மாணவர்கள், மேடைப்பேச்சாளர்கள், அலுவலகப்பணியாளர்கள் இந்த வர்ண ஆடைகளை அணியலாம். ஞாபக மறதிக் காரர்கள் மஞ்சல் நிற ஆடையை அணிந்தால் பலன் கிடைக்கும்.

## வீட்டுக் குறிப்புக்கள்

★ கராம்பு மணம் உற்சாகம் தரும். நமைச்சலை அகற்றும். வாந்தியை நிறுத்தும். அஜீரணத்தைச் சீராக்கும்.

★ வாரம் ஒரு முறை குழந்தைகட்குச் சுண்டல் அவித்துக் கொடுங்கள். இதில் அதிகளவு சத்துள்ளது.

★ கீரைத்தண்டு, வாழைத்தண்டு, இஞ்சி போன்ற நார்ப்பொருட்களை உணவில் சேர்த்துக்கொண்டால் வயிறு சுத்தமாகிறது. வாரம் ஒருமுறையாவது இதில் ஏதாவதொன்றைப் பயன்படுத்த வேண்டும்.

★ எந்த வடாம் தயார் செய்தாலும் ஓமம் அல்லது நற்சீரகம் சிறிது சேர்த்துக் கொள்ளுங்கள். வடாம் சுவையாகவும், மணமாகவும் இருக்கும்.

★ இட்லி ஊற்றப்பயன்படுத்தப்படும் துணி வெள்ளைத் துணியாகத்தான் இருக்க வேண்டும். கலர் துணியாக இருந்தால், ஆவியில் துணியின் கலர் கரைந்து இட்லியை நிறமாக்கி விடும்.

★ வீட்டில் முதலுதவி சிகிச்சைக்குப் பயன்படக்கூடிய தலைவலி மாத்திரை, விக்ஸ், டெட்டோல், பண்டேஜ் துணி, பஞ்சு போன்றவற்றை வைத்திருங்கள்.

★ இரும்பு, அலுமினியம், பித்தளை போன்ற பாத்திரங்களின் மீதுள்ள எந்தக் கறையையும் தக்காளி போக்கிவிடும். அழுகிய தக்காளியை இதற்குப் பயன்படுத்தலாம்.

## சமைப்போம் சுவைப்போம்

(தொகுத்துத் தருவது சுகந்தினி)

### மசாலா போண்டா

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| பாண்- | 8 துண்டுகள் |
| உருளைக்கிழங்கு - | 2 (பெரியது) |
| கரட் - | 1 (பெரியது) |
| போஞ்சி - | 50 கிராம் |
| தக்காளி - | 1 (பெரியது) |
| பச்சை மிளகாய் - | 2 |
| கொத்த மல்லி இலை- | சிறிது |
| பட்டாணி - | 100 கிராம். |
| மசாலாத்தூள் - | 1/2 தேக்கரண்டி |
| மிளகாய்த் தூள் - | 1 தேக்கரண்டி |
| சீரகம்- | 1/2 தேக்கரண்டி |
| உப்பு - | தேவையான அளவு |
| எண்ணெய் - | தேவையான அளவு |

**செய்முறை:**

உருளைக்கிழங்கு, போஞ்சி, கரட், பட்டாணி ஆகியவற்றை வேகவைத்துக் கொள்ளவும். தக்காளி, பச்சைமிளகாய் இரண்டையும் பொடியாக நறுக்கி, வேக வைத்த காய்களுடன் சேர்த்துக் கொள்ளவும்.

வாணலியில் எண்ணெய் ஊற்றி அடுப்பில் வைக்கவும். எண்ணெய் சூடேறியதும் சீரகம், மிளகாய்த்தூள், உப்பு, வேகவைத்த காய் கறிக்கலவை ஆகியவற்றைச் சேர்த்து நன்கு வதக்கிக் கொள்ளவும். பின்னர் நெருப்பைக் குறைத்து வைத்து, மசாலா பொடி சேர்த்து காய்கறிக் கலவையில் தண்ணீர் இல்லாமல் வதக்கிக் கொள்ளவும்.

பிறகு அடுப்பிலிருந்து இறக்கி தேவை யான அளவுக்குச் சின்னச் சின்ன உருண டைகளாக உருட்டிக் கொள்ளவும். பாண் துண்டுகளை தண்ணீரில் நனைத்து, இரண்டு பாண்துண்டுகளுக்கிடையே இந்த மசாலா காய்கறி உருண்டையை வைத்து, மசாலா வெளியே தெரியாதபடி மூடி ஓரங்களை அழுத்தி விட வேண்டும். இந்த உருண் டைகளை எண்ணையில் போட்டுப் பொரித்தெடுக்கவும்.

## கோடை காலத்தில் வாடாமல் இருப்பதெப்படி?

### பயன்படுத்துவதுக்கு சில பயனுள்ள குறிப்புக்கள்.



கோடைகாலத்தில் உங்கள் சருமத் தைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டியது மிக மிக அவசியம். நீங்கள் வெய்யிலில் அலைபவராக இருந்தால் தினமும் குறைந்தது 3 தடவையாவது முகத்தைக் கழுவிச் சுத்தம் செய்யவேண்டும்.

கடும் வெய்யிலும், சுற்றுப்புறச் சூழலும் உங்கள் தோலை வறட்சியாக்கி விடும். எனவே அதற்கேற்ப ஈரத்தன்மையை அதிகரித்துக் கொள்ள வேண்டும்.

மோர், இளநீர், தயிர்கரைசல் போன்ற வைகளை நிறையக் குடிக்க வேண்டும். முடியாதவர்கள் நிறையத் தண்ணீராவது குடிக்க வேண்டும்.

கோடையில் லிப்ஸ்டிக், கண்மை,பவுடர் போன்றவைகளைக் குறைப்பது நல்லது.

இந்தக் காலத்தில் ஆடைகளை இறுக்கமாக அணியக்கூடாது. தொள... தொள...உடுப்புக்கள் தான் நல்லது. அதிலும் பருத்தி ஆடைகள் உடுத்தினால் இன்னும் நல்லது.

புழுக்கம் வியர்வை அதிகமாக உண்டா கும் என்று கருதும் இடங்களுக்குச் செல்லும் போது, நகைகள் அணிவதைக் கணிசமாகக் குறைத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் வெயில் மற்றும் வியர்வையில் படும் நகைகள் எதிர் விளைவுகளை ஏற்படுத்தி உடலில் அலர்ஜியை உண்டுபண்ணிவிடும்.

முடிந்தால் அடிக்கடி வாசனைப் பவுடர், வாசனைத் திரவியங்களை உப யோகிக்கலாம். இவை வியர்வை நாற்றங் களை மறைத்து புதுமணம் கமழ புத்துணர்ச்சியைக் கொடுக்கும்.

கோடையில் காலை, மாலை இரு நேரங்களிலும் குளித்தால் உடல் சுகாதாரம் பெறுவதோடு, உடலில் சமச்சீரான குளிர்ச்சி நிலவவும் உதவும்.

கோடையில் பலருக்கு தலைமுடி வறட்சியாகி ஒடிந்து உதிர்வு அதிகமா கிவிடும். கோடை முடியும்வரை அடிக்கடி தலைக்குக் குளிக்க வேண்டும்.

மொத்தத்தில் மதிய வெயிலில் அலை வதை ஒத்திவைத்தாலே போதும், கோடை யின் கொடுமைகளில் இருந்து நீங்கள் தப்பித்துக் கொள்ளலாம்.


மகளிருக்கு மற்றொரு வாய்ப்பு

தினமுரசு — அம்மன் ஜுவல்ஸ் இணைந்து வழங்கும்

தங்க நகைப் பரிசுப் போட்டி → அடுத்த வாரம் ஆரம்பம்

அடுத்த போட்டிக்கு இப்போதே ரெடியா நீங்கள்?

பரிசுக் கூப்பன் மகளீர் மட்டும் இல 25

மகளிர் மட்டும் —பரிசுப் போட்டி—

முதல் அதிஷ்டசாலிக்கு தங்க நகை

- முரசு 90 முதல் தொடர்ந்து 25 வாரங்கள் பரிசுக்கூப்பன்கள் வெளியாகும்.
- 25 கூப்பன்களையும் பத்திரமாகச் சேகரித்துக்கொள்ளுங்கள்.
- 25 கூப்பன்களும் வெளியான பின்னர் நாம் அனுப்பச் சொல்லும்போது நீங்கள் கூப்பன்களை அனுப்பி வைக்கலாம்.
- முதல் அதிஷ்டசாலிக்கு தங்கநகை பரிசு காத்திருக்கிறது.
- 25 அதிஷ்டசாலிகளுக்கு அசத்தலான பரிசில்கள் காத்திருக்கின்றன.


## பயணிகள் கவனிக்கவும்



வெளியூருக்குப் பயணம் செய்யப் போகிறீர்களா? எதை எதை எடுத்துச் செல்வது என்று புரியவில்லையா? இதோ, பாவேந்தர் பாரதிதாசன் சொல்கிறார் கேளுங்கள்.


"சீப்பு கண்ணாடி ஆடை
சிறுகத்தி கூந்தல் எண்ணெய்
சோப்பு பாட்டரி விளக்கு
தூக்கும் கூஜாதான் பென்சில்
தீப்பெட்டி கவிகை சால்வை
செருப்பு கோவணம் படுக்கை
காப்பிட்ட பெட்டி ரூபாய்
கைகொள்க யாத்திரைக்கே!"

"சீப்பு, கண்ணாடி, உடைகள், சிறிய கத்தி (சோதனை முகாமில் குடைவார் களோ?) தலைக்கு எண்ணெய், சோப்பு, டோர்ச் லைட், தண்ணீர்கூஜா, பென்சில், தீப்பெட்டி, போர்வை, செருப்பு, உள்ளாடை, படுக்கை, பூட்டுடன் பெட்டி, கைச் செலவுக்குப் பணம்," இவைதான் பாரதிதாசன் சொன்ன யோசனைகள்.

## வாழவைக்கும் காதலுக்கு ஜே!

காதலில் வெற்றி பெற என்ன செய்ய வேண்டும்? இளம் வயதினரிடம் இருக்கும் தீராக் கேள்வி இது.

இதோ சில யோசனைகள். நீங்கள் தாராளமாகப் பரிசீலித்துப் பார்க்கலாம்.



முதலில் உங்கள் குடும்பத்தைக் காதலியுங்கள்.
படிக்கும் போது கல்வியைக் காதலியுங்கள்.
செய்யும் தொழில் எதுவோ அதனைக் காதலியுங்கள்.
திருமணத்தின் பின் மனைவியைக் காதலியுங்கள்.
இந்தக் காதல் எதுவும் தோல்வியடைந்ததாக சரித்திரமில்லை. (யாரோ திட்டுகிறார்கள்)

## பெண் மொழி



பெண்களுக்கு மதிப்பு தராத எந்த தேசமும் ஒருபோதும் உயர்வடைந்தது கிடையாது. அடையப்போவதும் கிடையாது.

பெண்களுக்கு மதிப்பில்லாத குடும்பமும் உருப்படாது. மனத் துயரத்தோடு பெண்கள் வாழும் இடம் மேன்மையடையாது.

சுவாமி விவேகானந்தர்.




www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

## காலிமுகத்திடல்

அதிகாலை
வியாபாரிகள்
கடை விரிக்குமுன்பே
குடை விரிக்கும் இடம்!!

எம். சுரேஷ்.

## நானும் ஒரு அகதி!

காதல் தீவிரவாதத்தில்
தாக்கப்பட்டு,
தகர்க்கப்பட்டது-என்
இதயபுரம்!

அவள்
அந்நியோன்யமாய்
இருந்துவிட்டு,
'அந்நியம்' பேசியதால்
சூனியப் பிரதேசத்தில்
முகாம் கட்டி,
முகம் கொட்டி வாழ்கிறேன்!

இனிமைகளை
காவுகொடுத்துவிட்டு,
தனிமையினை
கவ்விக் கொண்டு...
கவுந்துகொண்டிருக்கிறது
உயிர்....ஒரு
மரண காவியாய்..!

தினமும்.....
என் சோகக்குடிலின்
ஞாபக ஓட்டைகளில்
ஒழுகும்
கண்ணீர் துளிகளில்
குளித்துப் போகிறேன்
நான்!



விரக்தி இழப்புக்களை
ஈடுசெய்ய
பட்டினி கிடந்த
கற்பனை....
கவிதைகளை
கொறித்துக் கொள்கிறது!

இன்னமும்....என்
'எண்ணத்' திண்ணையில்
உறங்கத் திராணியற்று,
கதறியழுகிறது
மனக்குழந்தை!

கனவுகளிலாவது....வந்து
கொஞ்சம்
நிவாரணம் கொடுப்பாளா....
அவள்....??

பானகமுவ-எஸ்-முஸ்தாக்

## போர் முனையில் ஓர் சமாதானக் கனா!



நான் மனிதன்
எனக்கும்
இறக்கை இருந்தது!
★
உலகின்
ஓரு ஓரம் விடாமல்
சிறகடித்தேன்!
★
புவிக்குள்
புதைந்து
கிடக்கலாமென்று
ஒவ்வொருமண்ணாக
பிரித்துப் பார்த்தேன்!
★
அது வனவாசம்
சென்றிருக்கலாமென்று
காடுகளெல்லாம்
கண்ணிவைத்துத் தேடினேன்
★
அதனை-உலகின்
எந்த மூலையிலும் சந்திக்க
முடியவில்லை!
★
புவிக்கு
வெளியே தேடினேன்!
தொலைவில்...
மிகத் தொலைவில்.....
மிகமிகத் தொலைவில்
ஒரு சிறிய கிரகத்தில்
சுருண்டு கிடந்தது!
★
எங்கள் தேசத்திற்கென்று
அழைப்பு விடுத்தேன்!
முன்பும்
அழைத்துச் சென்று
அவமதித்ததாகக் கூறி
மறுத்துவிட்டது!
★
வரும்படி
கையைப் பிடித்து
இழுத்தேன்!
அதன்
நிம்மதியை கெடுப்பதாக
சினந்தது!
★
நான் விடவில்லை!
மீண்டும்....மீண்டும்....
தொல்லை தாங்கமுடியாமல்
சொன்னது!:
நான் வருவதென்றால்
அவர்களின்
தேசியக் கொடியாய்ப்போன
ஆயுதங்களை
கீழே போடச்சொல்!
முகமூடிகளை கிழித்தெறியச் சொல்!
இறுகிக்கிடக்கும்
இதயக்கதவை
திறந்துவைக்கச் சொல்!
★
'ஷெல்'-தும்மல்...
துப்பாக்கிக் குரைப்பு....
ஹெலி உறுமல்....
காதைக்கிழிக்க
கண் விழித்தேன்....!
பக்கத்துக் கேம்பில்
.:.பயரிங்காம்!

மீராவோடை எஸ். நஸீம்.

## இங்கே

காற்றுவந்தால்
நின்றுபோகிறது
சுவாசம்.
காதல் வந்தால்
இறந்துபோகிறாள்
காதலி.

குருடர்களின்
விழிகளில் மட்டும்
வண்ணக்கனவுகள்!

தீப்பெட்டி
விளம்பரத்திற்காய்
ஊரே எரியும்...!

ஆடம்பரமாய்
வறுமையொழிப்பு
பிரசாரங்கள்!

சமாதானத்திற்காய்
சண்டை நிகழும்!

பாதுகாப்பு கருதி
காவல் நிலையங்கள்
தகர்க்கப்படும்!

பேச்சு வார்த்தைகளில்
ஊமைகளுக்கு
மட்டும்
அனுமதிகிட்டும்!

வௌவால்களுக்கு
மாத்திரம்
எல்லாம் சரியாக
தோன்றும்-இங்கே
மனிதர்களுக்கு
தலைகீழாய்த்தான்....!

பூண்டுலோயா மெய்யன் நட்ராஜ்.

# தேன் கிண்ணம்

## ஏங்கும் நெஞ்சம்!

விலகிடு
மேகமே
விழிகளை
ஈரப்படுத்தாதே!
••
உறங்கிடு
நிலவே
உணர்வுகளை
நெகிழவிடாதே!
••
ஒழித்திடு
காற்றே
சுவாசத்தில்
வீசாதே!
••
அணைந்திடு
விளக்கே
ஆசைகளை
எரிக்காதே!
••
பகல் இருட்டு
நிலாவே
பருவங்களை
உரசாதே!
••
சுடரும்
நட்சத்திரமே
சுமைகளை
ஸ்வரப்படுத்தாதே!
••
தென்றலே
தேகத்தில்
யாகம்
நடத்தாதே!
••
உப்புக்கடலே
உள்மனதை
கரைக்காதே!
••
முட்களே
மூர்க்கம்
கொள்ளாதே!
••
கல்வெட்டுச்
சிலையே
கறுப்புக்கொடி
தூக்காதே!
••
மாடப் புறாவே
மனப்பகை
கொள்ளாதே!
••
வெள்ளை
நிலாவே
சத்தியக் காதலை
காயப்படுத்தாதே!

ஷஹிர்ஷா தாஸிம்-தர்கா நகர்.

## என் சுவாசமே....

வருகின்ற வசந்தங்களை
வாரிக் கொண்டேன்,
பூபாளம் பாடிக் கொண்டேன்;
புது ரோஜாவை
சூடிக் கொண்டே
உன் விழியோரம்
மையெழுதினேன்;
என் விரல் நுனிகளில்
கவி முளைத்தது.
▫▫
கொட்டிவிட்ட
என் கற்பனைப் பூக்களில்
சில கவிமாலைகள்
தொடுத்தேன்!
▫▫
எந்த அழகினை
நான்
ரசித்தாலும்
மின்னல் கொடியாய்
அதில் உன் உருவம்!
▫▫
உன் நினைவுகளை
கொல்வதென்றால்
முதலில்
என்னைக் கொல்லவேண்டும்!
▫▫
என் சுவாசமே
"நீ"
என்னை மறந்து போனால்
என் கவிதைகளுடன்
நானும் இறந்து போவேன்...!

சுதேஷ்-மாவனல்லை.

## நீங்காத நிகழ்வுகள்

நலமிழந்த
நம் நாட்டில்
அப்போதுபோலவே
இப்போதும்
துப்பாக்கி நாய்களின்
குரைவைச் சப்தம்!

தூங்கிக் கொண்டிருந்த
அவ்வேட்டை நாய்களை
யார் விழிப்பாட்டியது....?

சமரசம் தேடி
சிறகசைத்த
சமாதானப் புறாக்களுக்கு
யார் சிறகொடித்தது....?

இருபதாம் நூற்றாண்டு
தரிசித்த
இரத்த வெள்ளத்தை
ஏன்
இருபத்தியோராம்
நூற்றாண்டும்
தரிசிக்கத் துடிக்கிறது....?

தூக்கமிழந்து
ஏக்கத்திலிருக்கும்
எமக்கு
இன்னும் இன்னும்
ஏனிந்தத்தாக்கம்?!

காவத்துமுனை ஹாறூன்.

## போட முடியாத படிக்கட்டுகள்



நினைவுகளில் எல்லாம்
நெருப்பின் நெருடல்....!
••
உன் சுட்டுவிரலால்
என் நெற்றியில்
வரைவதாகக் கூறிய
காதலின் குறியீடு
என் நெஞ்சக்குள்
நடுநடுங்குகிறது!
••
உனக்காகவும்
எனக்காகவும்
நானே நயனங்களில்
நோவுகளைச் சுமக்கிறேன்!
இதயத்தை
இழப்புகளால் நிரப்புகிறேன்!
••
கண்ணீர் மேகங்களைப்
பிழிந்து போட்டபின்பும்
இதயவானம்
இன்னும்
இருண்டே கிடக்கிறது!
••
காதல் சிறகுகளுக்கு
பறக்க மட்டும்தான்
பழக்கிக் கொடுத்தோம்!
இரத்தம் கசியும்
இதயங்களுக்கு
எண்ணைய் தடவ
ஒரு இறகுக் கேனும்
கற்றுக் கொடுக்கவில்லை!
••
அந்தரத்தில் உள்ள
காதல் மாளிகையை
அடைவதற்கு
அன்றிலிருந்து
இன்றுவரை
இளஉயிர்கள்
ஒவ்வொன்றாக
அடுக்கப்பட்டுக் கொண்டே
இருந்தாலும்....
இன்னும்...
உயிர்ப்படிக்கட்டுகளால்
பாதி உயரத்தையேனும்
பூரணப்படுத்தமுடியவில்லை!



பஹீமா ஜஹான்-மெல்சிறிபுர.






### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| திங்கள்- | அந்நியர் உதவி, கௌரவம். | காலை 6 மணி |
| செவ்வாய்- | பயனற்ற செயல், உயர்ச்சிதடை. | மு.ப. 10 மணி |
| புதன்- | வெளியிட வாழ்க்கை, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| வியாழன்- | துயர் நீங்கும், மனக்குறை மறையும். | பகல் 11 மணி |
| வெள்ளி- | உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | காலை 8 மணி |
| சனி- | அந்நியர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- | பொருள் வரவு, மனமகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | உயர்ந்த நிலை, இனசனநன்மை. | காலை 8 மணி |
| புதன்- | வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வியாழன்- | வீண் மனஸ்தாபம், அந்நியர் உதவி. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- | தொழில் கேடு, பணச் செலவு. | பி.ப. 1 மணி |
| சனி- | மனக்கவலை, தேகசுகம் பாதிப்பு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-2

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்துமுன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் உதவி, புதிய முயற்சி. | மு.ப. 9 மணி |
| திங்கள்- | பணச் சேலவு, காரியத் தடை. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | மு.ப. 9 மணி |
| புதன்-- | பயனற்ற செயல், மனக்கவலை. | காலை 8 மணி |
| வியாழன்- | துன்பம் நீங்கும், உயர்ந்த நட்பு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | காரிய சித்தி, கௌரவக் குறைவு. | பி.ப. 1 மணி |
| சனி- | தொழில் சிறப்பு, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரிய சித்தி. | காலை 7 மணி |
| திங்கள்- | துன்பம் நீங்கும், இனசன நன்மை. | காலை 10 மணி |
| செவ்வாய்- | புதிய முயற்சி, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| புதன்- | தொழில் சிறப்பு, மனமகிழ்ச்சி. | காலை 8 மணி |
| வியாழன்- | அந்நியர் உதவி, கௌரவம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| சனி- | இனசன விரோதம், கௌரவக் குறைவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-9

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | காரியானுகூலம், பணவரவு. | காலை 6 மணி |
| திங்கள்- | முயற்சி பலிதம், தொழில் சிறப்பு. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | வீண் மனஸ்தாபம், புதிய முயற்சி. | மு.ப. 9 மணி |
| புதன்- | உறவினர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |
| வியாழன்- | பயனுள்ள செயல், உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| வெள்ளி- | புதிய நட்பு, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| சனி- | தொழில் சிறப்பு, பெரியோர் உதவி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள் செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-2

## இந்த வாரம் உங்கள் பலன்

(13.08.95 முதல் 19.08.95 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

கர்க்கடகம் - சூரியன், வெள்ளி
சிம்மம் - புதன்
கன்னி - செவ்வாய்
துலாம் - இராகு
விருட்சிகம் - வியாழன்
கும்பம் - சனி
17.8.95ல் சிம்மச் சூரியன் மேடம் - கேது
சந்திரன்-கும்பம், மீனம், மேடம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார்.

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, உயர்ந்த நிலை. | காலை 6 மணி |
| திங்கள்- | முயற்சி பலிதம், அந்நியர் நட்பு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வீண் குறைகேட்டல், மனக்கவலை. | காலை 7 மணி |
| புதன்- | தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பகல் 11 மணி |
| வியாழன்- | பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், பணச் செலவு. | பகல் 12 மணி |
| சனி- | வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 7

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரிய சித்தி. | காலை 7 மணி |
| திங்கள்- | அந்நியர் நட்பு, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பயனற்ற செயல், கௌரவக் கேடு. | மு.ப. 9 மணி |
| புதன்- | துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| வியாழன்- | இனசன விரோதம், செலவு மிகுதி. | காலை 8 மணி |
| வெள்ளி- | தொழில் சிறப்பு, அந்நியர் நட்பு. | பி.ப. 2 மணி |
| சனி- | பொருள் வரவு, வீண் குறைகேட்டல். | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம் -6

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, கௌரவம். | காலை 7 மணி |
| திங்கள்- | பயனற்ற செயல், செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | காரிய சித்தி, பொருள் வரவு. | காலை 7 மணி |
| புதன்- | துன்பம் நீங்கும், முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| வியாழன்- | பெரியோர் உதவி, செலவு மிகுதி. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- | தூர இடப்பயணம், மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| சனி- | வீண் மனஸ்தாபம், மனக்குறை நீங்கும். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-6

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் உயர்ச்சி, புதிய முயற்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- | காரிய சித்தி, கௌரவம். | காலை 7 மணி |
| செவ்வாய்- | அந்நியர் நட்பு, மனமகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| புதன்- | வெளியிடப் பிரயாணம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | துயர் நீங்கும், முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| வெள்ளி- | வீண் குறைகேட்டல், அந்நியர் உதவி. | பகல் 11 மணி |
| சனி- | தொழில் விருத்தி, பணச்செலவு. | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம் -5

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் நட்பு, முயற்சி மேன்மை. | மு.ப. 9 மணி |
| திங்கள்- | காரிய சித்தி, பணவரவு. | காலை 6 மணி |
| செவ்வாய்- | இடர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| புதன்- | தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும். | காலை 7 மணி |
| வியாழன்- | வெளியிட வாழ்க்கை, மனமகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| வெள்ளி- | தொழில் சிறப்பு, பெரியோர் உதவி. | மு.ப. 10 மணி |
| சனி- | அந்நியர் நட்பு, கௌரவம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| திங்கள்- | பயனுள்ள செயல், உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | தொழில் மந்தம், மனக்குறை நீங்கும். | காலை 7 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| வியாழன்- | பொருள் வரவு, காரியானுகூலம். | மு.ப. 9 மணி |
| வெள்ளி- | புதிய முயற்சி, பணச் செலவு. | மு.ப. 10 மணி |
| சனி- | அந்நியர் நட்பு, உயர்ந்த நிலை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 8

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரியானுகூலம் | பி.ப. 2 மணி |
| திங்கள்- | இனசன மகிழ்ச்சி, வரவுக்கு மிஞ்சிய செலவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| புதன்- | துன்பம் நீங்கும், காரிய சித்தி. | பகல் 11 மணி |
| வியாழன்- | பயனற்ற செயல், வீண் மனஸ்தாபம். | மு.ப. 9 மணி |
| வெள்ளி- | பெரியோர் உதவி, கௌவரம். | பகல் 12 மணி |
| சனி- | செலவு மிகுதி, பணக்கஷ்டம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-3



படிப்பகம்





## வாழ்த்த வேண்டும்!

எழுத எழுதத் தமிழும் படியும்
எண்ணம் சிறக்கும் தம்பி
விழுது பெற்ற ஆல மரமாய்
வீரம் செழிக்கும் தம்பி

தொழுது பின்னே செல்லும் வாழ்க்கை
துளியும் வேண்டாம் தம்பி
பழுது வாராப் பண்பு உன்னைப்
பாரில் உயர்த்தும் தம்பி

தீமை கண்டு துடிக்கும் பண்பு
திரள வேண்டும் தம்பி
ஊமையாக உறங்கிக் கிடந்தால்
உயர்வு ஏது தம்பி?


உரிமையோடு எழுந்து வாடா
உலகம் உன்னை நம்பி
வரிசையோடு காத்து நின்று
வாழ்த்த வேண்டும் தம்பி!

அனுப்பியவர்–க.கோணேஸ்வரன்.

வாழ்க தமிழ் மொழி! வாழ்க தமிழ் மொழி!
வாழ்க தமிழ் மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்த
வளர் மொழி வாழியவே!
சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறு கதை

## ஓடு மீன் ஓட.....!



ஒரு குளத்தில் கொக்கு ஒன்று வசித்தது. அது அந்தக் குளத்திலுள்ள மீன்களைப் பிடித்துத் தின்று வந்தது. அது ஒரே ஒரு கொக்காக அங்கு இருந்ததால் அதற்குப் போட்டியாக அங்கு வேறு எந்தக் கொக்கும் இல்லை. அதனால் போதுமான அளவு மீன்களைச் சாப்பிட்டுப் பரமதிருப்தியுடன் அங்கு வசித்தது.

திடீரென்று ஒரு நாள் பல கொக்குகள் அந்தக் குளத்திற்கு வந்து சேர்ந்தன. குளம் நிறைய மீன்கள் இருப்பதைக் கண்டன. அவ்வளவு மீன்களை ஒரே இடத்தில் பார்த்திராத அந்தக் கொக்குகள், அங்கேயே தங்கி மீன்களைச் சாப்பிட்டு வரலாயின.

வெகுநாட்களாக அங்கே இருந்த கொக்கு, இனி இந்தக் குளத்தில் மீன்கள் குறைந்துவிடும். அதனால் இந்தக் குளத்தைவிட்டு வேறெங்காவது செல்வதென முடிவு செய்தது.

வேறு ஒரு நீர்நிலையைத் தேடிப் பறக்கப் புறப்பட்டது கொக்கு. வெகுதூரம் காட்டில் பறந்து சென்று கொண்டிருந்த கொக்கு, ஒரு நீரோடையைக் கண்டது. அங்கு வேறு கொக்குகள் தென்படுகின்றனவா என்று பார்த்தது. நல்ல வேளை அங்கு ஒரு கொக்குக்கூட இல்லை.

நீரோடை ஆழமில்லாமல் இருந்தது. அதில் தெளிந்த நீர் பளிங்கு போல் ஓடிக்கொண்டிருந்தது. அந்த நீரோடையில் ஓடும் நீர், சற்றுத் தொலைவில் உள்ள ஆற்றில் கலந்து கொண்டிருந்தது. அந்த ஆற்றில் ஓடை நீர் விழுகின்ற இடத்தில் எதிரும் புதிருமாக சின்னச் சின்ன மீன்கள் ஓடிக்கொண்டிருந்தன.

ஓடையின் அருகே வந்து, தண்ணீரில் ஓடிக்கொண்டிருக்கும் சின்னச் சின்ன மீன்களைப் பார்த்ததும் கொக்குக்கு சந்தோஷம் உண்டாயிற்று. நிறைய மீன்கள் உள்ளன என்பதைவிட, தனக்குப் போட்டியாக வேறு ஒரு கொக்கும் அங்கு இல்லை என்பதே அதற்குப் பெரிய சந்தோஷத்தை அளித்தது.

ஓடையில் ஓடிக்கொண்டிருக்கும் மீன்களைப் பிடித்துத் தின்ன எண்ணியது கொக்கு. உடனே அதற்கு முதலில் பெரிய கொழுத்த மீனாகச் சாப்பிட வேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று.

பறந்து வந்து ஓடையின் நடுவே ஆடாமல், அசையாமல் ஒற்றைக் காலில் நின்றது கொக்கு. தலையைக் கீழே சாய்த்து மீன்களைப் பார்த்தது.

திடீரென்று ஒரு கொக்கு வந்து நீரில் நிற்கவே சின்ன மீன்களெல்லாம் அச்சம் கொண்டன. அது தங்களைப் பிடித்துத் தின்னவே வந்திருக்கிறது என்பது மீன்களுக்குத் தெரிந்து விட்டது. இனி கொக்கின் பார்வையிலிருந்தால் ஆபத்துத்தான் என்றெண்ணி மூலை முடுக்கெல்லாம் சென்று ஒளிந்து கொண்டன.

பெரிய மீன் வந்ததும், அதைப் பிடித்துத் தின்ன வேண்டும், சின்ன மீன்கள் வந்தால், வந்துவிட்டுப் போகட்டும் என்று பெரிய மீன்களைக் கண்காணிப்பதிலேயே இருந்தது. கொக்கு ஆடாமல் அசையாமல் ஆணி அடித்தது போன்று நிற்கவே, சின்னமீன்கள் பயம் விலகி வெளியே வந்து அப்படியும், இப்படியும் ஓடி விளையாடின.

கூட்டம் கூட்டமாகச் சின்ன மீன்கள் வந்து திரிவதைப் பார்த்த கொக்கு, 'சின்ன மீன்களைப் பிடித்தால், அச்சத்தில் பெரிய மீன்கள் வெளியே வராது' என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டது.

உச்சிப்பொழுது கழிந்து மாலை நேரமும் வந்து விட்டது. அப்போதும் கொக்கு பெரியமீனை எதிர்பார்த்து ஓடை நீரில் ஒற்றைக் காலில் வெகு நேரம் நின்றுகொண்டிருந்தது. ஒரு பெரிய மீன் கூட வரவில்லை. மாலைப் பொழுது மயங்கி இருட்டத் தொடங்கிவிட்டது. கொக்கு அவ்வளவு நேரம் கால் கடுக்க நின்றதுதான் மிச்சம். அதற்கு ஒரு மீனும் சாப்பிடக் கிடைக்கவில்லை. பசியால் அது சோர்ந்து களைத்துப் போயிற்று. பறக்க முடியாமல் பறந்து மரத்திற்குச் சென்று படுத்துக் கொண்டது.

பெரிய மீன் கிடைக்கும் என்ற ஆசையில் சிறிய மீன்களையும் இழந்துவிட்ட தன் முட்டாள் தனத்தை எண்ணி அழுதது. **'ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும் வாடி நிற்குமாம் கொக்கு'** என்பது இதுதான்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!




மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 19.08.1995.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 103
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 100

பரிசுக்குரியவர்:
நிரோஷன் ஸ்பெக்
அர்ச் மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| ஸபருல் ஹஸன்<br>ஜெம் லேன், பேருவலை. | இ. ஷிரஸாகர்<br>ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, திருகோணமலை. |
| பா.ஜயத்ரதன்<br>மட்டக்குளி, கொழும்பு-15. | ஹிஸாம் சுபைர்மன்<br>கேம்பிரிஜ் இன்டர்நாசனல் ஸ்கூல், மாத்தளை. |
| மொஹமட் நபீல் லத்தீப்<br>ஹந்தான வீடமைப்புத் திட்டம், கண்டி | பி. தனீஷன்<br>சென். தோமஸ் கல்லூரி, கல்கிசை. |
| அ. முஹம்மத் அஸாம்<br>ஸாஹிரா தேசியக் கல்லூரி, புத்தளம். | வே. சதீஸ் பிரசாந்<br>சென். பேர்னதேத் தமிழ் மகா வித், சிலாபம். |
| ஆ.கு. கிறிஸ்டி குமார்<br>கொ/ றோயல் கல்லூரி, கொழும்பு-07. | பாத்திமா முப்தாஸா<br>127, கொடபொல வீதி, மாத்தளை. |

## வாரம் ஒரு நாடு



### எகிப்து

**தலைநகர்:** கெய்ரோ
**பரப்பளவு:** 9,97,677 சதுரகிலோ மீற்றர்.
**மக்கள் தொகை:** 5.61 கோடி
**மொழி:** அரபி, ஆங்கிலம்
**எழுத்தறிவு:** 44%
**சமயம்:** இஸ்லாம், கிறிஸ்தவம்
**தனிநபர் வருமானம்:** 700 டொலர்கள்.
**அமைவிடம்:** வடகிழக்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ளது. இதன் மேற்கே லிபியாவும்; தெற்கில் சூடானும்; கிழக்கில் செங்கடலும் எல்லைகளாக அமைந்துள்ளன. வடக்குப் பகுதியில் மத்தியதரைக் கடலும் இடம் பெற்றுள்ளது.
**வரலாறு:** பிரிட்டனின் முன்னாளைய குடியேற்ற நாடுகளில் இதுவும் ஒன்று. 1922ல் சுதந்திரம் பெற்றது. மன்னராட்சி தொடர்ந்த போதிலும் 1952 ல் இராணுவப் புரட்சி ஏற்பட்டது. 1953ல் குடியரசானது. 1958ல் சிரியாவுடன் இணைந்து 'ஐக்கிய அரபுக் குடியர'சானது. 1961ல் , சிரியா இதிலிருந்து பிரிந்தது. மறுபடியும் சுதந்திரத் தனிநாடானது.
**பொருளாதாரம்:** பருத்தி, பருத்தித் துணிகள், எண்ணெய் வளம் போன்றவை முக்கிய ஏற்றுமதிப் பொருட்கள். உணவுப் பொருள் உற்பத்தி தன்னிறைவு அடையவில்லை. அரிசி, கோதுமை, உருளைக்கிழங்கு விளைகின்றன.

## ஸ்பிரிங் பாக்



ஆபிரிக்க புல்வெகளில் காணப்படும் விலங்கு ஸ்பிரிங் பாக். இந்த விலங்கு பார்வைக்கு மானைப் போல் இருக்கும். ஆபத்து சமயத்தில் அதன் முதுகில் உள்ள ரோமங்கள் நிமிரும். அப்போது இந்த மிருகம் தன் கால்களை ஒன்றுசேர்த்து தலையைத் தாழ்த்தி வேகமாக உயரம், உயரமாகக் குதிக்கும். இந்தச் செய்கையைப் பார்த்ததும் இதனைத் தாக்கவரும் சிங்கம், புலி போன்ற விலங்குகள் கூட பயந்து ஒதுங்கிச் சென்றுவிடும். 75 சென்ரிமீற்றர் உயரமும், 43 கிலோ எடையும் கொண்டது ஸ்பிரிங் பாக். தென்மேற்கு ஆபிரிக்கா மற்றும் அங்கோலா ஆகிய நாடுகளில் இவை அதிகம். இவற்றின் எண்ணிக்கை இப்போது குறைந்து வருகிறது.

## உன்னால் முடியுமா தம்பி?



சில பிராணிகளால் செய்யக்கூடிய பல சாதனைகளை மனிதனால் செய்ய முடியாது:

★ சீத்தா எனப்படும் சிறுத்தைகளைப் போல் வேகமாக மனிதனால் ஓட முடியாது. இவை மணிக்கு 70 கிலோமீற்றர் ஓடக் கூடியன.

---

★ பொலிஃபேமஸ் விட்டில் என்று மற்றுமொரு விட்டில் பூச்சி இருக்கிறது. இவை உண்ணும் உணவினைப் போல் மனிதனால் உண்ண முடியாது. பிறக்கும் போது இவை இருக்கும் எடை அளவு போல் 86,000 மடங்கு உணவினை- 48 மணி நேரத்தில் தின்று தீர்த்துவிடும்.

## அதிசயம்– ஆனால் உண்மை!



★ மனிதனுடைய மூளை முழு வளர்ச்சியடைந்த யானையின் மூளையைப் பார்க்கிலும் 5 மடங்கு சிறியது.

★ ஒரு குழந்தையின் தலையின் அளவு அதன் உடலில் கால் பங்காகும். ஆனால் வளர்ந்து விட்ட மனிதனின் தலை அவனுடைய முழு அளவில் எட்டில் ஒரு பங்காகும்.



★ காண்டாமிருக வண்டுகளைப் போல் பாரம் சுமக்க மனிதனால் முடியாது. அவ்வண்டுகள் அவற்றின் எடையை விட 850 மடங்கு பாரத்தை அவற்றின் முதுகில் சுமந்து செல்லும்.

---

★ ராஜ அந்துப் பூச்சி என்றொரு இனமுண்டு. இவை விட்டில் பூச்சி இனத்தைச் சேர்ந்தவை. இவற்றால் 11 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள ஒரு பொருளை மோப்பம் பிடிக்க முடியும்.

---

★ டொல்ஃபின் மீன் இனமும் வெளவால்களும் மனிதனுடைய காதுகளுக்கு எட்டாத மிக உச்சஸ்தாயித் தொனியை உணரக் கூடியன.

---

★ தென் அமெரிக்காவில் காணப்படும் ஊளையிடும் குரங்குகள் உண்டாக்கும் ஒலி (ஊளை) 16 கிலோ மீற்றர் தூரம்வரை கேட்கும்.

www.padippakam.com

சர்க்கரை இல்லாத காப்பியை சிரமமாய் உறிஞ்சிக் கொண்டிருந்த சந்தானகிருஷ்ணன் டெலிபோன் கூப்பிட்டதும் எழுந்து போய் ரிஸீவரை எடுத்தார்.

"ஹலோ.... சந்தானகிருஷ்ணன் ஹியர்"

"லுக் மிஸ்டர் சந்தானகிருஷ்ணன்.... நான் யார்ன்னு தெரிஞ்சுக்க நீங்க ஆர்வப்பட வேண்டாம்....ஒரு விஷயத்தை உங்ககிட்ட கன்வே பண்ணத்தான் போன் பண்ணினேன்..."

"என்ன சொல்லப் போறே...?"

"உங்க டாட்டர் அபிநயா வீட்ல இருக்காளா...?"

"இல்லே...ஷாப்பிங் போயிருக்கா..."

"புவர் ஃபாதர்!"

"என்ன சொல்றே.....?"

"அபிநயா ஷாப்பிங் போகலை சந்தானகிருஷ்ணன். இப்ப என்கிட்டத் தான் இருக்கா.....என்னோட கஸ்டடியில் தான் இருக்கா....அவ திரும்பவும் உங்களுக்கு மகளா வேணுமின்னா ஒரு பிஸினஸ் பேசிக்குவோமா....?"

"டேய்...யார்ரா....நீ...?

"உங்க மகளை கிட்னாப் பண்ணினவன் பேரையும் ஊரையும் சொல்லுவாண்ணு நீங்க எதிர்பார்க்கலாமா சந்தானகிருஷ்ணன்?"

"அபிநயாவை ஒண்ணும் பண்ணிடாதே..."

"இது வரைக்கும் ஒண்ணும் பண்ணலை...... பிசினஸ் பேசிக்குவோமா.....?"

"என்ன பிசினஸ்...?"

"அபிநயாவுக்கு நான் ஒரு விலை வெச்சிருக்கேன்...."

"விலையா....?"

"இந்த நிமிஷம் அவளோட விலை... பத்துலட்சம்...."

"எ...என்ன சொல்றே.....?"

"தமிழில சொன்னா பத்து லட்சம். இங்கிலீஷ்ல சொன்னா டென் லாக்ஸ். இந்தியில சொன்னா தஸ் லாக்....நீங்க எந்த பாஷையில புரிஞ்சிக்கிட்டாலும் சரியே...."

சந்தானகிருஷ்ணன் தளர்ந்தார்.

மறுமுனைக்குரல் ஏகத்தாளமாய் கேட்டது. "என்ன சந்தானகிருஷ்ணன் விலை ரொம்ப ஜாஸ்தியா...?"

"பணம் தர்றேன்....அவளை ஒண்ணும் பண்ணிடாதே...."

"கேட்ட பணம் என் கைக்கு வந்தா உங்க மக சேதமில்லாமே வீட்டுக்கு வருவா.... நீங்க பணம் தராமே என்னை ஏமாத்த நினைச்சாலோ... போலீசுக்குப் போனாலோ அபிநயா அசிங்கப்பட்டுப் போயிடுவா.... ஏதாவது ஒரு குப்பைத் தொட்டியில உடம்புல துணி இல்லாமே பொணமா கிடப்பா உங்க மக...."

"டேய்....அப்படியெல்லாம் பண்ணிடாதே...நீ கேட்ட பணம் தர்றேன்...."

"போலீசுக்கு...?."

"போகமாட்டேன்..."

"குட்... நான் இப்ப சொல்றதை கவனிங்க.. இப்போ மணி ஆறே முக்கால். சரியா எட்டு மணிக்கு பத்துலட்ச ரூபாயை ஒரு சூட்கேஸ்ல போட்டு மருதமலை போற ரோட்டுக்கு வாங்க... மருதமலை 5 கி.மீ.ன்னு ஒரு மைல்கல் ரோட்டுக்கு இடது பக்கமாக தெரியும். அந்தக் கல்லையொட்டின மாதிரி



வாய்க்கால் தண்ணி போறதுக்காக ஒரு சின்னப் பாலம் கட்டிருயிருக்காங்க.... அந்த பாலத்துக்கு கீழே சூட்கேஸை வெச்சுட்டு வந்த வழியே நீங்க போயிடணும்...."

"அபிநயா?"

"தானே உங்க வீட்டுக்கு வந்துடுவா...! அவ உங்க வீட்டுக்கு வந்து சேர்ந்த பின்னாடி போலீசுக்கு போனா மறுபடியும் நான் அபிநயா கூட விளையாட வேண்டியிருக்கும்..."

"நான் போலீசுக்குப் போகலை..."

"தட்ஸ் குட்.... சரியா எட்டு மணிக்கு பணத்தோடு வர்றீங்களா?"

## கிரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்

"மறுபடியும் சொல்றேன் சந்தானகிருஷ்ணன்! பத்துலட்ச ரூபாயை காப்பாத்துறதுக்காக மகளை பலி குடுத்துடாதீங்க....நீங்க போலீசுக்கு போனா அடுத்த விநாடியே எங்களுக்கு விஷயம் தெரிஞ்சுடும். நீங்க பங்களாவுக்குள்ளே இருந்தாலும், உங்க ளோட ஒவ்வொரு அசைவையும், நாங்க 'நோட்' பண்ணிட்டுத்தான் இருக்கோம்...."

"பணத்தைக் கொண்டு வந்து தர்றேன்..."

"மருதமலை ரோடு. 5 வது கி.மீ.கல். பாலம்...."

"ஞாபகமிருக்கு..."

மறுமுனையில் டெலிபோன் வாயைச் சாத்திக் கொண்டது.

சந்தானகிருஷ்ணன் முகத்தில் வருகின்ற வியர்வையைக் கூட துடைக்கத் தோன்றாமல் ரிஸீவரை பிடித்தபடி நின்றிருந்தார்– வெறித்த பார்வை; நிமிஷங்கள் சுரத்தில்லாமல் நகர்ந்தன.

"நமஸ்காரம்..."

குரல் கேட்டு உணர்வுக்குத் திரும்பினார். புரோக்கர் சிவகுருநாதன் நின்றிருந்தார்.

ரிஸீவரை சாத்திவிட்டு சோபாவுக்குத் திரும்பினார் சந்தானகிருஷ்ணன். தொய்வோடு உட்கார்ந்தார். சிவகுருநாதன் சந்தானகிருஷ்ணனின் மனநிலையைப் புரிந்து கொள்ளாமல் உற்சாகித்தார்.

"மாப்பிள்ளையோட அப்பா இன்னிக்கும் என்கூட போன்ல பேசினார். நாளைக்கு சாயந்தரம் அஞ்சுமணிக்கு பொண்ணைப் பார்க்க வர்றாங்களாம்..."



சந்தானகிருஷ்ணனின் வயிற்றில் ஒரு திகில் சுழன்றது.

"எ...எ..எப்ப வர்றாங்க?"

"நாளைக்கு சாயந்தரம்..." என்று சொன்ன புரோக்கர் சந்தானகிருஷ்ணனின் முகத்தைப் பார்த்துவிட்டு,

"ஏன் எப்படியோ... என்னமோ மாதிரி இருக்கீங்க....?"

என்று கேட்டார்.

எச்சில் விழுங்கினார் சந்தானகிருஷ்ணன்.

"ஒண்ணுமில்ல... சிவகுருநாதன். அபிநயாவுக்கு உடம்பு சுகமில்லை...."

"அடடா...உடம்புக்கு என்ன?"

"காய்ச்சல்தான்...இருந்தாலும் உடம்புக்கு அசௌகரியமா இருக்கிற நேரத்துல அவங்க பொண்ணைப் பார்க்க வரவேண்டாமேன்னு நினைக்கிறேன்..."

"போன் பண்ணி அவங்களுக்கு தகவல் சொல்லிட்டாப்போச்சு...."

"இப்பவே போன் செஞ்சு சொல்லிடும்...."

சந்தானகிருஷ்ணன் டெலிபோனை நோக்கி–கையைக்காட்ட–சிவகுருநாதன் எழுந்து போனார்.

x x

ரிஸீவரைத் தொங்கப் போட்டுவிட்டு டெலிபோன் பூத்தைவிட்டு வெளியே வந்தான் சபரி. நெஞ்சுக் கூட்டில் யாரோ உட்கார்ந்து ட்ரம் வாசித்தார்கள்.

கணபதி பஸ் ஸ்டாப்பில் நின்றிருந்த சிட்டி பஸ்ஸில் ஏறி மறுபடியும் சரவணம் பட்டிக்கு வந்த சபரி ரோட்டோரமாய் இறங்கி–ஒற்றையடிப் பாதையை ஞாபகம் வைத்துக்கொண்டு பத்ரகாளியம்மன் கோயிலை நோக்கி நடந்தான்.

மணிக்கட்டை உயர்த்தி வாட்ச்சைப் பார்த்தான்.

மணி 6.50.

அபிநயா கோயிலில் தனியாய் இருப்பாள் என்ற எண்ணம் இருதயத்தை உசுப்ப–அந்த ஒற்றையடிப் பாதையில் வேகவேகமாய் நடந்தான்.

அபிநயாவின் தைரியம் அவனை அயர வைத்தது.

இந்த இருட்டில்–

அந்த பாழடைந்த கோயிலில்–

தனியாய் உட்கார்ந்திருக்க யாருக்கும் ஒரு அசுர தைரியம் வேண்டும்.

அபிநயாவுக்கு இவ்வளவு தைரியம் எப்படி சாத்தியம்!

ஆச்சர்யப்பட்டு– யோசித்துக் கொண்டே நடந்தான் சபரி. இருட்டில் மசமசவென்று கோயிலின் கோபுரம் தெரிந்தது.

கோயிலை நெருங்கினான்.

அமைதி.

அந்த அமைதியை அறுத்துப் பார்க்க விரும்புகிற மாதிரி சில்வண்டொன்று 'ஜிர்ர்ர்' என்று கத்திக்கொண்டிருந்தது. காற்று வேகமாய் இருந்தது.

"அபி...."

குரல் கொடுத்தான்.

பதிலுக்கு நிசப்தம்.

"அபி...."

"மௌனம்......"

சபரியின் பின்னங்கழுத்தில் வியர்வை ஊறியது.

"அபி...."

பெரிதாய் கத்திப்பார்த்தான்.

வௌவால் ஒன்று முகத்துக்கு நேராய் பறந்துவந்து பின் விருட்டென்று திரும்பிப் போனது. எங்கோ தொலைவில் ஒரு நாய் குரைக்கும் சத்தம் பலவீனமாய்க் கேட்டது.

மெல்ல கோயிலைச் சுற்றி வந்தான்.

இருதயம் எம்பியது.

கோயிலின் மண்டபக்கோடி வரைக்கும் போய்விட்டுத் திரும்பினான். சுற்றும் முற்றும் பார்த்தபடி நடந்து கோயில் தூணுக்குப் பக்கத்தில் வந்து நின்றான்.

அதே விநாடி–

மண்டபத் திட்டின் இருட்டில் இருந்து யாரோ குபீரென்று சபரியின் மேல் பாய்ந்தார்கள்.

மெத்தென்று ஒரு புஷ்ப மூட்டை மேலே வந்து விழுந்தது போன்ற உணர்வு.

சிரிப்பும் டார்ச் வெளிச்சமும் ஒரே நேரத்தில் பீறிட்டது.

அபிநயா நின்றிருந்தாள். சிரிப்போடு கேட்டாள். " பயந்துட்டீங்களா சபரி...."

சபரி விளையாட்டாய் அவளுடைய வயிற்றில் குத்தப் போனான். "இப்படித் தான் பயமுறுத்துறதா.... அபி....? கொஞ்ச நேரத்துல நான் வேர்த்து விறுவிறுத்துப் போயிட்டேன்."

"ஏன்தான் இப்படி பயப்படுறீங்களோ.., சரி போன விஷயம் என்னாச்சு......?"

"உங்கப்பா கூட போன்ல பேசினேன்....."

"விஷயத்தைக் கேட்டதும் ஆடிப் போயிருப்பாரே.....?"

"அரண்டுபோயிட்டார்....அபிநயாவை ஒண்ணும் பண்ணிடாதே....ஒண்ணும் பண்ணிடாதேன்னு கெஞ்சினார்..."

"அதான் அப்பா...."

"மருதமலை ரோட்டுக்கு வரச் சொல்லிட்டேன்...."

"அடையாளம் சரியாச் சொன்னீங்களா...."

"ஒரு தடவைக்கு இரண்டு தடவை சொல்லியிருக்கேன்....."

"பணத்தை எடுக்கப் போகலாமா?..."

"எப்படி போலாம்?....

"டாக்ஸியில போய் வட பள்ளி இறங்கி– அங்கிருந்து நடந்து ஸ்பாட்டுக்கு போயிடலாம்.... சூட்கேஸ் கைக்கு வந்ததும் மறுபடியும் நடந்து வந்து டாக்ஸி பிடிச்சுடலாம்"

"அபி....."

"என்ன சபரி...?"

"உங்கப்பா போலிஸுக்கு போயிட மாட்டாரோ....?"

"கண்டிப்பா போக மாட்டார்....."

"எனக்கு உதறலாயிருக்கு....."

"உதறலாயிருந்தா என் கையைப் பிடிச்சுக்கிட்டே நடந்துவாங்க! அய்யோ.... சபரி உங்களுக்கு ஆயிரம்வாட்டி தைரியம் சொல்லிட்டேன்.... ஏதாவது சிக்கல் வந்தால் நான் உண்மையைச் சொல்லி விடறேன் போதுமா.....?"

சபரி தயங்கி அவளைத் தொடர்ந்தான். (தொடர்ந்து வரும்)

## போலிச் சாமியால் பலியான பக்தர்கள்
## அமெரிக்கக் கண்டத்தில் அகோர மரணங்கள்!



சமீபத்தில் கடவுளின் பெயரால் லீலைகள் செய்து மாட்டியவர் பிரேமானந்தா. அவர் செய்தது ஆக, ஒரு கொலை மட்டும். ஏனையவை சில்மிசங்கள்.

ஆனால், 1948ல் அமெரிக்காவில் கடவுளின் பெயரால் நடந்த அகோரச் சம்பவத்தை எத்தனைபேர் அறிந்திருக்கிறீர்கள்?

தென் அமெரிக்காவில் இருக்கிறது கயானா என்னும் நாடு. கடவுளிடம் செல்ல புதிய வழி காட்டுகிறேன் என்று புறப்பட்டார் ஒருவர். கயானா அரசும் அவரை மகானாக நம்பி ஒரு பெரிய காணியும் கொடுத்தது. அங்கே ஒரு அழகான ஆச்சிரமம் அமைத்துக் கொண்டார் ஜிம் ஜோன்ஸ். பக்தர்கள் குவிந்தனர். 1000 பக்தர்கள் அங்கேயே தங்கியிருந்தனர்.

அதற்கு 'மக்களின் ஆலயம்' என்று பெயர் வைத்தார் ஜிம் ஜோன்ஸ். பிரசங்கம் செய்யும் போது ஒரு வாசகத்தை அடிக்கடி கூறுவார் ஜிம்: "ஆலயத்தின் மக்களாகிய நாம் ஒரு நாள் மரியாதையுடன் மரிக்கும் நாள் வரும்!" என்பதுதான் அந்த வாசகம்.

இதற்கிடையே ஜிம் ஜோன்ஸ் ஒரு போலி என்றும், மக்களை பலவந்தமாக ஆசிரமத்தில் தடுத்து வைத்துள்ளதாகவும் செய்திகள் வந்தன.

அமெரிக்க படைவீரர்களும், கயானா நாட்டு பொலிசாரும் ஆசிரமத்தை சோதனையிட அனுப்பப்பட்டனர். அவர்கள் புறப்பட்டு வந்து கொண்டிருந்த செய்தி 'ஜிம்' காதுக்கு எட்டியது.

உடனடியாக பக்தர்களை அழைத்தார். "பக்தர்களே! நமது பிரார்த்தனைக்கு இது பொருத்தமான இடமல்ல. பொருத்தமான இடத்திற்கு நம்மையெல்லாம் நமது கடவுள் அழைக்கிறார். அழைப்புக் குரல் கேட்கிறது. நாம் அனைவரும் மரியாதையுடன் மரிப்போம்"

அதன் பின்னர் பக்தர்கள் அனைவரும் ஒருவர் பின் ஒருவராக அணிவகுத்து வந்து மேடையில் ஒரு பாத்திரத்தில் வைக்கப்பட்டிருந்த பானத்தைப் பருகினார்கள்.

ஆசிரமத்துக்குள் புகுந்த படையினரை 913 உயிரற்ற சடலங்கள் வரவேற்றன. ஆண்கள், பருவப் பெண்கள், குழந்தைகள் ஆசிரம வெளியில் மடிந்து கிடந்தனர். எவருடைய உடலிலும் சிறு சேதம் கூடக் கிடையாது. போதகர் ஜிம் ஜோன்ஸ் மட்டும் நெற்றியில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்தோடு செத்துக் கிடந்தார். ஆனால், இதுவரை அந்த சூட்டுக்காயத்துக்கு காரணமான துப்பாக்கி கண்டுபிடிக்கப்படவில்லை. தற்கொலையா, அல்லது கொலையா என்று போதகர் மரணத்தை துப்புத் துலக்க முடியவில்லை.

எப்படியோ, போலி மகானை நம்பிய 913 பேர் செத்து மடிந்த கோரச் சம்பவம் உலக வரலாற்றில் பெரும் சோகங்களில் ஒன்றாகிவிட்டது.






## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: கே.மதியழகன்
வயது: 27
முகவரி: 28, முதலாவது டிவிஷன், மருதானை, கொழும்பு-10
பொழுதுபோக்கு: வழமையானவை.



பெயர்: எம். நியாஸ்
வயது: 20
முகவரி: 4, முகத்துவார வீதி, கல்பிட்டி.
பொழுதுபோக்கு: பத்திரிகை, நண்பர் தொடர்பு.



பெயர்: ஆர். டேவிட்
வயது: 25
முகவரி: 73. RUE, Riquet, 75018, Paris, France
பொழுதுபோக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி,கால்பந்து.



பெயர்: ஏ.ஹகீம்
வயது:-20
முகவரி: 25, பவுண்டரி ரோட், மருதமுனை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி, வானொலி.



பெயர்: கே.காந்தி
வயது: 17
முகவரி: பாலிப்போடி வீதி, தாவற்காடு, அக்கரைப்பற்று-08.
பொழுதுபோக்கு: தொலைக்காட்சி, பத்திரிகை.



பெயர்: எஸ். அப்துல் அஸீஸ்
வயது: 24
முகவரி: P.O.Box: No. 5031, Riyadh 11422. K..S.A
பொழுதுபோக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி.

பெயர்: பி.எஸ்.ராஜா
வயது: 25
முகவரி: 78, ஜெம்பட்டா வீதி, கொழும்பு-13.
பொ.போ: கிரிக்கெட், சினிமா விமர்சனம், பேனாநட்பு.

பெயர்: கே. ரகுநாதன்
வயது: 20
முகவரி: 37. பிரதான வீதி, கேகாலை
பொ.போ: வானொலி, பத்திரிகை, கிரிக்கெட்.

பெயர்: டி. ரவி
வயது: 32
முகவரி: F.No. 982, P.O.Box- 10331, Shuaiba-65454, Kuwait.
பொழுதுபோக்கு: பாடல்கள் கேட்டல், பேனா நட்பு.

பெயர்: எம். நிஹாஸ்
வயது: 17
முகவரி: அல்லை வீதி, தோப்பூர்-03.
பொ.போ: பத்திரிகை, வானொலி, டி.வி.

பெயர்: ஐ. தௌபீக்
வயது: 25
முகவரி: 144, முதலியார் வீதி, அக்கரைப்பற்று-04.
பொழுதுபோக்கு: வழமையான பொழுதுபோக்குகள்.

பெயர்: முஹம்மட் ஹனி
வயது: 21
முகவரி: 560, நீரெல்லை, அக்குறணை, கண்டி.
பொ.போ: வானொலி, பேனா நட்பு.


படிப்பகம்

www.padippakam.com



# 37

# மக்சீம் கார்க்கி

# தாய்

**அ**வன் அறைக்குள்ளே கீழும் மேலும் உலவினான்; எதையோ வெட்டித் தள்ளுவது மாதிரி– தன் இதயத்திலிருந்து எதையோ வெட்டித் தள்ளுவது மாதிரி–கைகளை வீசிக் கொண்டான். தாய் அவனைப் பீதியும் துக்கமும் கலந்த மனத்தோடு பார்த்தாள். அவனது இதயத்துக்குள்ளே ஏதோ ஒரு பலத்த காயம் ஏற்பட்டு, அவனை வேதனைப் படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை மட்டும் அவள் உணர்ந்தாள். அந்தக் கொலையைப்பற்றிய இருண்ட பயங்கர ஆபத்தான எண்ணங்கள் அவளைவிட்டுப் பிரிந்தன. நிகலாய் வெஸோவ்ஷிகோவ் அந்தக் குற்றத்தைச் செய்திராவிட்டால், பாவெலின் நண்பர்களில் மற்றவர் எவருமே அதைச் செய்யக் கூடியவர்கள் அல்ல. பாவெல் தன் தலையைத் தொங்கப் போட்டவாறு ஹஹோலின் பலம் பொருந்திய அழுத்தம் வாய்ந்த பேச்சைக் கேட்டவாறு இருந்தான்.

"தங்கு தடையற்ற நீ முன்னேறிச் செல்ல வேண்டுமானால், சமயங்களில் நீ உன் விருப்பத்துக்கு மாறான காரியங்களைக் கூடச் செய்யவேண்டும். அதற்காக நீ சகலத்தையும், உன் பரிபூரண இதயத்தையும் விட்டுக் கொடுக்கத் தயாராயிருக்க வேண்டும். கொள்கைக்காக நீ உன் உயிரை இழப்பது மிகவும் இலேசான காரியம். அதைவிட மகத்தானவற்றை, உன்னுடைய சொந்த வாழ்வில் உனக்கு மிகவும் அருமையும் விருப்பமும் நிறைந்தவற்றைக்கூட நீ தியாகம் செய்யவேண்டும். அப்படிப்பட்ட மகத்தான தியாகத்தினால்தான், நீ எந்த ஒரு சத்தியத்துக்காகப் போராடுகிறாயோ அந்தச் சத்தியம் எப்படி ஒரு மகா சக்தியாக வளர்ந்தோங்கிப் பெருகுகிறது என்பதை உன்னால் பார்க்கமுடியும். அந்தச் சத்தியம் தான் இந்த உலகத்தில் உனக்கு மிகவும் அருமை வாய்ந்த, அரிய பொருளாக இருக்கும்!"

அவன் அறையின் மத்தியில் சட்டென நின்றான். முகமெல்லாம் வெளுத்துப்போய், கண்களைப் பாதி மூடியவாறு கையை உயர்த்தி அமைதி நிறைந்த உறுதியோடு மேலும் பேசத் தொடங்கினான்:

"மக்கள் தங்கள் அழகைத் தாமே பார்த்து வியக்கின்ற காலம், மற்றவர்களுக்கெல்லாம் தாம் தனித்தனித் தாரகைகளைப் போல் ஒளி வீசப்போகும் காலம் வரத்தான் போகிறது என்பது எனக்குத் தெரியும். அந்தப் புண்ணிய காலத்தில் உலகத்தில் சுதந்திர மனிதர்கள் நிறைந்திருப்பார்கள்; அந்த மனிதர்கள் தமது சுதந்திரத்தால் பெருமை அடைவார்கள். சகல மக்களின் இதயங்களும் திறந்த வெள்ளை இதயங்களாக இருக்கும். அந்த இதயங்களில் பொறாமை இருக்காது; பகைமையைப் பற்றிய அறிவு கூட இருக்காது. அப்போது வாழ்க்கை என்பது மனிதகுலத்துக்காக மகத்தான சேவையாக மாறிவிடும்; மனிதனது உருவம் மகோன்னதச் சிகரத்தில், வானத்தை முட்டும் கொடுமுடி வரையில் உயர்ந்து சென்று கொலு அமரும். ஏனெனில் சுதந்திர புருஷர்களுக்கு எந்தச் சிகரமும் எந்த உயரமும் எட்டாத தூரமல்ல; தொலைவல்ல. அப்போது, மக்கள் அனைவரும் அழகின் பொருட்டு சத்தியத்தோடு, சுதந்திரத்தோடு வாழ்வார்கள். உலகத்தைத் தங்களது இதயங் களால் பரிபூரணமாக அதிகப்படியாகத் தழுவி, அதனை முழுமனத்தோடு காதலிப்பவர்களே அந்த மனிதர்களில் மகோன்னத புருஷர்களாக விளங்குவார்கள்; எவர் மிகுந்த சுதந்திரமாக வாழ்கிறாரோ அவரிடமே மகோன்னதமான அழகு குடி வாழ்கிறது. அவர்களே அந்தப் புத்துயிரின் புண்ணிய புருஷர்கள்; மகாபுருஷர்கள்!"

அவன் ஒரு நிமிஷ நேரம் மௌனமாயிருந்தான். பிறகு மீண்டும் நிமிர்ந்து நின்று கொண்டு, தனது ஆத்மாவின் அடித்தளத்தில் இருந்து எழும் குரலோடு பேசத் தொடங்கினான்:

"அந்தப் பெருவாழ்வுக்காக– நான் எதையும் செய்யச் சித்தமாயிருக்கிறேன்...."

அவனது முகம் சிலிர்த்து நடுங்கியது. பெரிது பெரிதான கண்ணீர்த் துளிகள் கன்னங்களில் வழிந்தோடின.

பாவெலின் முகம் வெளுத்தது. அவன் தலையை நிமிர்த்தி, தனது அகன்ற கண்களால் அவனைப் பார்த்தான். ஏதோ ஒரு இருண்ட பீதி தன் மனத்தில் திடீரெனக் கவிந்து பெருகுவது மாதிரி உணர்ந்த தாய் திடுக்கிட்டு நாற்காலியை விட்டுத்துள்ளி யெழுந்தாள்.

"இதென்ன, அந்திரேய்?" என்று மெதுவாகக் கேட்டான் பாவெல்.

ஹஹோல் தன் தலையை மட்டும் குலுக்கியசைத்து விட்டு, உடம்பை விறைப்பாக நிமிர்த்தி நின்றவாறு தாயை ஏறிட்டுப் பார்த்தான்:

"ஆமாம், என் கண்ணால் பார்த்தேன்... நானறிவேன்!"

அவள் ஓடோடியும் போய் அவனது கைகளை இறுகப்பற்றினாள். அவன் தனது வலது கையை விடுவிக்க முயன்றான். ஆனால், அவளோ அவனது கைகளை இறுகப் பிடித்தவாறு இரகசியமாகச் சொன்னாள்:

"உஷ்! ஐயோ, என் கண்ணே! என் அருமை மகனே..."

"ஒரு நிமிஷம் பொறுங்கள். அது எப்படி நடந்தது என்று நான் சொல்கிறேன்" என்று கரகரத்துச் சொன்னான் ஹஹோல்.

"இல்லை, வேண்டாம். வேண்டவே வேண்டாம், அந்திரியூஷா" என்று அவள் தனது கண்ணீர் நிறைந்த கண்களோடு அவனைப் பார்த்து முணுமுணுத்தாள்.

பாவெல் மெதுவாக நெருங்கி வந்தான்; அவனது கண்களிலும் ஈரம் கசிந்திருந்தது. அவனது முகம் வெளுத்திருந்தது. அவன் லேசாகச் சிரித்துக்கொண்டே சொன்னான்:

"நீயே தானோ என்று அம்மா பயந்துவிட்டாள்!"

"நானா–நானா பயந்தேன்? நான் அதை நம்பவேமாட்டேன். என் கண்ணாலே பார்த்தால்கூட நான் நம்பமாட்டேன்!"

"பொறுங்கள்" என்று தன் தலையை உலுப்பிக் கொண்டும் கைகளை விடுவிக்க முயன்றுகொண்டும் சொன்னான் ஹஹோல்

"அது நான் இல்லை. ஆனால் நான் அதைத் தடுத்திருக்க முடியும்...."

"அந்திரேய்! வாயை மூடு" என்றான் பாவெல்.

அவன் தன் நண்பனது கையை ஒரு கையால் பற்றிப் பிடித்தான்; மறுகையை ஹஹோலின் தோளின்மீது போட்டு, நடுநடுங்கும் அவனது நெடிய உருவத்தை தடவிக் கொடுத்தான். அந்திரேய் பாவெலின் பக்கம் திரும்பி உடைந்து கரகரக்கும் குரலில் பேசினான்:

"பாவெல், அப்படி நடக்கவேண்டும் என்று நான் விரும்பியிருக்க மாட்டேன் என்பது உனக்குத் தெரியும். நடந்தது இதுதான். நீ போன பிறகு நான் திராகுனவுடன் அந்த மூலையில் நின்று கொண்டிருந்தேன். அப்போது இஸாய் வந்தான். எங்களைக் கண்டதும் ஒரு ப்க்கமாக ஒதுங்கி நின்று கொண்டு எங்களை ஓரக்கண் போட்டுச் சிரித்தான். 'அவனைப் பார். அவன் இரவெல்லாம் என் பின்னாலேயே சுற்றித் திரிகிறான். அவனை நான் அடிக்காமல் விடப்போவதில்லை' என்றான் திராகுனவ். பிறகு அவன் போய்விட்டான். வீட்டுக்குத்தான் போகிறான் என்று நான் நினைத்தேன். பிறகு இஸாய் என்னிடம் வந்தான்...."

ஹஹோல் பேச்சை நிறுத்திவிட்டு மூச்செடுத்துக் கொண்டான்.

"அந்த நாயைப் போல், அவனைப்போல் என்னை இதுவரை எவனுமே அவமானப் படுத்தியதில்லை."

தாய் பேசாது மேஜைப் பக்கமாக வந்து அவனை உட்கார வைத்தாள். அவனருகிலே வந்து அவனது தோளோடு தோள் உரசி ஒட்டிக் கொண்டிருக்க அவளும் உட்கார்ந்து கொண்டாள். பாவெல் வெறுமனே நின்றவாறு, தன் தாடியை உவகையற்று இழுத்து உருவிவிட்டுக் கொண்டிருந்தான்.

"அவர்களுக்கு நம் அனைவரது பெயர்களும் தெரியுமென்றும், பொலிஸ் பட்டியலில் நம்முடைய பெயர்களெல்லாம் இருக்கின்றனவென்றும், மே தினக் கொண்டாட்டத்திற்கு முன்னால் நம்மையெல்லாம் அவர்கள் உள்ளே தள்ளப் போவதாகவும் அவன் என்னிடம் சொன்னான். நான் பதில் பேசவில்லை. வெறுமனே அவனைப் பார்த்துச் சிரித்தேன். ஆனால் என் உள்ளமோ உள்ளூரக் கொதித்துக் கொண்டிருந்தது. நான் ஒரு புத்திசாலிப் பையன் என்றும், இந்த மாதிரி வழியில் செல்வது தவறு என்றும், எனக்கு அவன் போதிக்க ஆரம்பித்துவிட்டான். மேலும் நான் இந்த வழியைக் கைவிட்டு விட்டு...."

அவன் பேச்சை நிறுத்திவிட்டு, இடது கையால் முகத்தைத் துடைத்துக் கொண்டான். அவனது கண்களில் ஏதோ ஒரு வறண்ட பிரகாசம் பளிச்சிட்டது.

"எனக்குப் புரிகிறது" என்றான் பாவெல்.

"இதைக் கைவிட்டு விட்டு, நான் சட்ட உத்தியோகம் பார்ப்பது நல்லது என்று சொன்னான் அவன்!" என்றான் ஹஹோல்

ஹஹோல் தன் முஷ்டியை ஓங்கி ஆட்டினான்.

"சட்டம்–நாசமாய்ப்போக!" அவன் பற்களை இறுகக் கடித்தவாறே பேசினான்; "அவன் என் முகத்தில் அறைந்திருந்தால்கூட, எனக்கு– ஒருவேளை அவனுக்கும்– எளிதாக இருந்திருக்கும். ஆனால் அந்தப் பயலோ என் இதயத்தில் அவனது நாற்றம் பிடித்த எச்சிலைக் காறித் துப்பிவிட்டான்! அந்த வேதனையை என்னால் தாங்க முடியவில்லை."

அந்திரேய் பாவெலிடமிருந்து தன் கையை வெடுக்கென்று பிடுங்கினான்; அதன்பின் கசப்பும் கரகரப்பும் நிறைந்த குரலில் பேசத் தொடங்கினான்:

"நான் அவனது முகத்தில் ஓங்கியறைந்துவிட்டு, விலகிப் போனேன். அப்போது எனக்குப் பின்னால், "மாட்டிக் கொண்டாயா?" என்று திராகுனவ் மெதுவாகச் சொல்லியது எனக்குக் கேட்டது. அவன் அந்த மூலையிலேயே காத்துக் கொண்டிருந்தான் போலும்...."

சிறிது நேரம் கழித்து, ஹஹோல் மீண்டும் தொடர்ந்து பேசினான்:

"நான் திரும்பியே பார்க்கவில்லை. என் மனதில் மட்டும் என்னமோ ஒரு உணர்ச்சி–அடி விழுந்த சத்தத்தை மட்டும் நான் கேட்டேன். இருந்தாலும் ஏதோ ஒரு தவளையை மிதித்து விட்ட மாதிரி அருவருப்போடு நான் என்வழியே நடந்தேன். வேலை பார்த்துக் கொண்டிருக்கும் போது, திடீரென்று ஜனங்கள் சத்தம் போட்டுக் கொண்டு வந்தார்கள்.

'இஸாயைக் கொன்று விட்டார்கள், என்று சத்தம் கேட்டது, என்னால் அதை நம்பமுடியவில்லை. எனது கையில் வலியெடுத்தது; என்னால் வேலையே பார்க்க முடியவில்லை. எனக்கு உண்மையில் வலியிருந்ததா என்பது தெரியாது. இருந்தாலும், என் கை மரத்துத் திமிர் பிடித்துப் போயிற்று....."

அவன் தன் கையை வெறித்துப் பார்த்துக் கொண்டான்.

"என் கையில் படிந்துவிட்ட இந்தக் கறையை என் வாழ்நாள் முழுதுமே என்னால் கழுவிவிட முடியாது..."

"ஆனால் உன் இதயம் பரிசுத்தமாய் இருக்கிறதே!" என்று மிருதுவாகச் சொன்னாள் தாய்.

"நான் அதற்காக என்மீது குறைகூறிக் கொள்ளவில்லை; இல்லவே இல்லை" என்று உறுதியாகச் சொன்னான் ஹஹோல். "இந்தச் சம்பவம் அருவருக்கத்தக்க சம்பவம்; இந்த வேண்டாத விவகாரத்தில் நான் சம்பந்தப்பட்டிருக்க வேண்டாம்."

"நீ சொல்வது எனக்குப் புரியவில்லை" என்று தோளை உலுப்பியவாறு சொன்னான் பாவெல். "நீ அவனைக் கொல்லவில்லை. அப்படியே செய்திருந்தாலும் ....."

"கேளு, தம்பி! ஒரு கொலை நடந்து கொண்டிருப்பது தெரிந்தும், அதைத் தடுப்பதற்கு எதுவும் செய்யாமல் சும்மாயிருப்பதென்றால்..."

"எனக்குப் புரியவேயில்லை" என்று பாவெல் அழுத்திக் கூறினான். பின் சிறிது யோசனைக்குப்பின்பு, "அதாவது புரிகிறது, ஆனால் வருந்துவதற்கு ஒன்றுமில்லை."

ஆலைச்சங்கு அலறியது. அதனது அதிகாரபூர்வமான ஆணையைக் காதில் வாங்கிக் கொண்ட ஹஹோல் தலையை ஆட்டியபடி சொன்னான்:

"நான் வேலைக்குப் போகவில்லை."

"நானும்தான்."

"நான் குளிக்கிற இடத்துக்குப் போகப்போகிறேன்" என்றான் அந்திரேய். அவன் லேசாகச் சிரித்தான். பிறகு தன் துணிமணிகளைச் சேகரித்துக் கொண்டு, உற்சாகமேயற்று வீட்டைவிட்டு வெளிச் சென்றான்.

தாய் அன்பு ததும்பும் கண்களோடு அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"நீ என்ன வேண்டுமானாலும் சொல்லு, பாவெல்" என்று பேசத் தொடங்கினாள் தாய். "ஒரு மனிதனைக் கொலை செய்வது மகாபாவம் என்று எனக்குத் தெரியத்தான் செய்கிறது. என்றாலும் நான் யாரையுமே குற்றஞ்சாட்ட மாட்டேன். நான் இஸாயிக்காக அனுதாபப்படுகிறேன். அவன் ஒரு குள்ளப் பிறவி. அவனை இன்று பார்த்தபொழுது அவன் என்னைப் பார்த்துச் சொன்ன விஷயம் ஞாபகத்துக்கு வருகிறது. உன்னைத் தூக்கில் போடப் போவதாக அவன் என்னைப் பயமுறுத்தினான். ஆனால், அவனே இப்போது செத்துப் போய்விட்டான். அவன் மறைந்து போனான் என்பதற்காகச் சந்தோஷப்படவோ, அவன் சொன்ன சொல்லுக்காக அவனைப் பகைப்பதற்கோ என்னால் முடியாது. அப்போது நான் அவன்மீது அனுதாபம் கொண்டேன். இப்போது அந்த அனுதாபம்கூட இல்லை....."

அவள் மீண்டும் மௌனமாகிச் சிந்தனையில் ஆழ்ந்தாள். பிறகு வியப்பு நிறைந்த புன்னகையோடு மேலும் பேசினாள்:

"அட கடவுளே பாஷாக்கண்ணு! நான் சொல்வதையெல்லாம் கேட்கிறாயா?"

உண்மையில் அவள் பேச்சை அவன் கேட்கவில்லை. எனவே அவன் முகத்தைச் சுழித்துக் கொண்டே பதில் சொன்னான். தரையைப் பார்த்தவாறே நடந்து கொண்டிருந்த பாவெல் பின்வருமாறு சொன்னான்:

(தொடர்ந்து வரும்)

---

# கண்ணீர் கதை

ராஜகமல்–திஹாரிய

**அ**ப்போது, இரவு சமார் 10 மணியிருக்கும்.

அவனும் நானும் தனிமையில்!

அவன் கை என்மேல்!

நான் அப்போது ஆடைகளுடன்தான் இருக்கிறேன்.

பின்னர், என்ன நினைத்தானோ தெரியவில்லை; திடீரென என்னைத் தூக்கி...எனக்கு உள்ளூர பயம்தான். இருப்பினும் இதை எப்படி வெளிக் காண்பிப்பது?

பேசாமலேயே இருந்தேன்......

சீ...நான் ஏன்தான் இப்பிறவி எடுத்தேனோ தெரியவில்லை.....

என்று என்மேலேயே எனக்கு வருத்தம்!

ஆடைகளைக் களையத் தொடங்கியவன் நேரே என்னை அவனது முகத்தருகே கொண்டு சென்றான்– சென்றவன்.....

அவனது காய்ந்துபோன முரட்டு உதடுகளால் அழுத்தமாக ஒரு முத்தமிட்டான்...

நான் பேசாமலேயே இருந்தேன்.


அவனால் முடிந்தவரை என்னை எவ்விதமாகக் கையாள முடியுமோ, அவ்விதமாக எல்லாம் எடுத்தாண்டான்.... அது மட்டுமா...?

என் உடலில் உள்ள சத்துக்களையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக இரத்தக் காட்டேரி போல உறிஞ்சியே தீர்த்துவிட்டான்....

இப்போது அவனுக்கு ஓய்வு!

ஆனால் என்கதி....?

சகலமும் உறிஞ்சப்பட்டு, அனைத்தையும் இழந்த அவல நிலையில் இருந்த என்னை அவன் அப்போது லட்சியமா



செய்தான்? இல்லையே...? விட்டெறிந்து விட்டான் வீதியிலே...?

இனி என்கதி என்ன? கண்ணீர் விட்டுத்தான் என்ன ஆகப் போகிறது...?

என்னைப் போன்றோர்களுக்கு இழைக்கப் படும் அக்கிரமங்களுக்கு ஒரு முடிவே இல்லையா...?

எனது கூக்குரல் யார் காதிலும் விழவேயில்லையா? விழாது...!

ஆம், எனக்கு நன்றாகத் தெரியும்!

என்னைப் போன்றவர்களை இம்மாதிரிக் கொடுமைகளுக்கு உள்ளாக்கிவிட்டு தான் மட்டும் சுகம் பெற்றுவிடலாம் என்ற எண்ணமோ அம்மாதிரி உள்ளோருக்கு? நிச்சயம் சொல்கின்றேன்– என்னை மட்டுமல்ல, என் போன்ற பல்லாயிரம் பேர்களோடு இன்பம் துய்க்கும் பல்லாயிரக்கணக்கான பேர்கள் கடைசியில் வீழ்வது கேவலமான நரகமே அன்றி வேறில்லை...!

என்ன சொன்னாலும் செய்பவர்கள் செய்து கொண்டேதான் இருப்பார்கள். ஆண்டவனே....! அவர்களைத் திருத்த நீ தான் வரவேண்டும்....

சரி, இவ்வளவும் கூறிய நான் யார் என்று உங்களால் ஊகிக்க முடியவில்லையா?

நான் தான் **சிகரெட்!!**

---

**சி**வபாதம் அவனை அலட்சியமாகப் பார்த்தார். இருபது வயது இளமை. நுரை பொங்கும் அலைகளாய் தலைமுடி.. டெனிம் ஜீன்ஸ், தொள தொள சட்டை. ஒற்றைக் காதில் கடுக்கன். பெயர் உமேஷ்.

"சோ....யு வோன்ட்...மை டோட்டர்...."

"ஓம். நானும் ஆர்த்தியும்....."

"உயிருக்குயிராய் காதலிக்கிறீங்க.... யாராலும் பிரிக்க முடியாது. அப்படித் தானே?"

# காதலுக்கும் விலை உண்டு



அனு பாரதி

அவன் பேசாமல் அவரைப் பார்த்தான்.

"மை டியர் இளைஞனே.... பதட்டப் படாமல் நான் கேட்கிற ஒண்ணுக்குத் தயங்காமல் பதில் சொல்லு. அதாவது....என் மகளை நீ மறக்கிறதாயிருந்தா, இப்பவே இரண்டு இலட்சம்... ரெடி காஷ்.... சம்மதிக்கிறாயா?"

அவன் உஷ்ணமானான். "அட போய்யா நீயும் உன் பணமும்....நாலு இடத்தில முட்டை தூக்கியாவது அவளைக் காப்பாத்துவேன். உன்ர பணத்தைக் குப்பையில கொண்டு போய்க் கொட்டு" சொல்லிவிட்டு அவன் வேகமாக வெளியேறினான்.

உள்ளே மறைவிலிருந்து வெளிவந்த மகள் ஆர்த்தியிடம் அவர் திருப்தியுடன்,

"யூ ஆர் லக்கிம்மா, பையன் மானஸ்தன். பரவாயில்லை நாளைக்கே அவன் வீட்டுக்குப் போய்...."

"அப்பா ஸ்ரொப் இற். உமேஷ் மானஸ்தனா இருக்கலாம். ஆனால் பணத்தின்ர மதிப்பு இன்னும் தெரியேல்ல. உங்ககிட்ட வேறு விதமாப் பேசிச் சம்மதம் வாங்க முயற்சி செய்திருக்கலாம். நடை முறையில பணம் இல்லையின்னா காதல் கூட கசக்குமப்பா. நீங்களே வேற நல்ல மாப்பிள்ளையாப் பாருங்க...." என்றாள் அமைதியாக.

சிவபாதம் திகைப்புடன், புரியாமல் அவளைப் பார்த்தார்.



படிப்பகம்

www.padippakam.com

# கவிதை கேளுங்கள்

— ஷர்மிளா இஸ்மாயில், கண்டி —

"ரகு..." தயங்கியபடி வந்தான் ராகுல். "என்ன?" கேட்டான் ரகு. "அ...அது இந்தா..." வெள்ளைத் தாளில் மணியான எழுத்துக்கள். நீட்டினான்.

"கவிதையொண்ணு எழுதிப் பார்த்தேன்; நல்லாருக்கா? படிச்சு சொல்லு..." தொடர்ந்து பேசினான் ராகுல். "நல்லாருந்தா பேப்பருக்கு அனுப்பலாம்னு...."

எழுந்து கொண்டான் ரகு." சும்மா இருப்பியா? மனுசனுக்கு ஆயிரம் வேல வெட்டி. இதுல வேற உன் அறுவை. தலையப் பிச்சிக்கிட்டு ஓடிடலாம்னு தோணுது. நீயெல்லாம் எழுதி...அதெல்லாம்



பேப்பர்ல வந்து...கனவு காணாதே."

"பிளீஸ் ரகு. இ...இது என் முதல் கவிதை. மறுக்காம வாசிச்சு பாரு." கெஞ்சிய நண்பனை அலட்சியப்படுத்தி வெளியேறினான்.

மாமா மகனுக்கு அடுத்த ஞாயிறு கல்யாணம். கட்டாயம் போகணும். சும்மாவா? பரிசு அது இதென்று வேறு கையோடு கொண்டு போகணும்.

ஒபீஸில் குவிந்து கிடக்குது, கட்டு கட்டா பைல்கள். அடுத்த வெள்ளிக்கு முன்னர் மேசையை 'கிளீன்' பண்ண வேண்டும். இல்லாவிட்டால் எம்-டியின் வசைபாடல் நிச்சயம்.

வீட்டுத் தோட்டத்தில் களை மண்டிக் கிடக்குது. அதை வேறு சுத்தப்படுத்தணும்.

வீட்டுக்கு 'பெயின்ட்' அடிக்க வேண்டும் என அம்மா அடிக்கடி முணுமுணுத்துக் கொண்டிருந்தாள். தம்பி மகனின் கல்யாணத்துக்கு வரும் உறவினர்களில் பாதிப் பேர் இங்கு வராமல் போகமாட்டார்கள் என அம்மா சொல்வதிலும் நிச்சயம் நியாயமுண்டு.

யோசித்தவாறே நடந்த ரகு பாதையில் கிடந்த வாழைப்பழத் தோலை கவனிக்காத பலன் பலத்த அடியுடன் நிலத்தில் விழுந்திருந்தான்.

ஹொஸ்பிடல் படுக்கை. கண்மூடி படுத்திருந்தான் ரகு. நினைத்ததொன்று நடந்ததொன்று. ஒரு கிழமையாக எழும்பமுடியாத படி படுக்கை. எழும்ப வேண்டாமென சொல்லிவிட்டார் டொக்டர்.

எவ்வளவு திட்டங்கள்? எத்தனை தீர்மானங்கள்? எல்லாமே பாழாய்ப்போயின. நினைக்கவே ரகுவுக்கு மனது எரிந்தது. வாழ்க்கை வெறுத்துப்போனது.

எல்லோரும் ரகுவை நலம் விசாரிக்க வந்தனர். அனுதாபக் கணைகள் வேறு. "கொஞ்சம் பார்த்து நடந்திருக்கப் படாதோ" என காலங்கடந்து ஞானம் பற்றி கவலைப் பட்டார்கள் பலர். ரகு யோசித்தவாறு சாய்ந்திருந்தான்.

ராகுல் வரவில்லை. ராகுல் மட்டும் வரவில்லை. ஏன்? கவிதை வாசிக்காத கோபமோ? சின்னச் சின்ன விடயங்களுக்கு பெரிதாக மனஸ்தாபப்படும் குணம் ராகுலுக்குண்டு. ஆனாலும் காயப்பட்ட நண்பனை பார்க்காத அளவுக்கு அப்படி என்ன?

ராகுலின் தம்பி வந்திருந்தான். ரகு முகத்தை இழுத்துக் கொண்டு சாய்ந்திருந்தான் "அண்ணாக்கு கடந்த ஒரு கிழமையா காய்ச்சல். சொல்லி அனுப்பியும் நீங்க பார்க்கவரலைன்னு ரொம்ப 'பீல்' பண்றாரு. ஏன் வரலைன்னு பார்க்கத் தான் வந்தேன்... பார்த்தா நீங்க இப்படி..... இருக்கீங்க....."

ரகுவுக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. "சொ....சொல்லி அனுப்பினீங்களா? யா...யாரும் வந்து சொல்லலியே...." ரகு தட்டுத் தடுமாறினான். "பரவாயில்லை ரகு அண்ணா. நான் அண்ணாக்கிட்டே சொல்லிடறேன். நீங்களும் படுக்கையோட படுக்கையா கெடக்கிறீங்கன்னு.... வரட்டுமா?"

ரகுவுக்கு என்னவோ போல் இருந்தது. "தம்பி...அண்ணா எழுதிய கவிதைன்னு சொல்லி என்கிட்ட அன்னைக்கு வாசிக்க காட்டினான். இப்போ சும்மா தானே இருக்கேன். அதக்கொண்டுவந்து கொடுக்கறீங்களா?"

"ஓ...அதுவா..?" என்ற ராகுலின் தம்பி கையோடு வைத்திருந்த பையைத் திறந்தான். ரகு வியப்புடன் பார்த்தான்.

"இந்தாங்கண்ணா....இந்த பேப்பர்ல இருக்கு. அண்ணா எழுதின முதல் கவிதை இதுல வந்திருக்கு....பார்த்துட்டுத்தாங்க."

'தினமுரசு' என்ற தலைப்பைப்பார்த்து வியந்தான் ரகு. 'தேன் கிண்ணம்' பக்கத்தைப் புரட்ட ராகுலின் கவிதை ரகுவைப் பார்த்து சிரித்தது.

'யாரையும் தரக்குறைவா எடைபோடக் கூடாது ரகு. எல்லார்க்கிட்டயும் ஒவ்வொரு திறமை மறைஞ்சு கிடக்குது. சரியான வாய்ப்பும் வசதியும் கெடச்சா அவங்க பட்டை தீட்டிய வைரமா ஜொலிப்பாங்க.....'

மனசாட்சி ரகுவைப் பார்த்து பேசியது. ரகு மௌனமாய் வாசித்துக்கொண்டிருந்தான்.

# உன் மனதுக்குள் என்னைச் சொல்!



காதலி!

உன்னால் அனுப்பப்பட்ட உனது திருமண அழைப்பிதழுக்கு நன்றி! காரணம்.... எனை மறந்து போன உன் மனதில் என்னைப் பற்றிய நினைவுகளை இன்னமும் ஞாபகமாய் வைத்திருக்கிறாய். அதுவரையில் நன்றி!!

நீ காணாமல் போனாலும் உன் நினைவுகளில் என்னைத் தொலைத்து விடாமல் இன்னமும் பத்திரப்படுத்தியிருக்கிறாய். உனக்குள் நான் இறந்து போனதாக நினைத்திருந்தேன். இன்னமும் உனக்குள் நான் முழுதாய்க் கொல்லப் படவில்லை என்பது மட்டும் புரிகிறது. அதுவரையில் மிக்க நன்றி! நன்றி!!

என்னைச் சித்திரவதைப் படுத்துவதற்காக உன்னால் அனுப்பப்பட்ட அழைப்பிதழ் அழகாயிருக்கிறது! உன்னைப் போல...

உன் கல்யாணத்துக்கு நிச்சயமாய் எனை எதிர்பார்க்கமாட்டாய். நான் கல்யாணத்துக்கு வந்தால் நீ சந்தேஷிக்கமாட்டாய். என் வரவு உன்னைப் பொறுத்து நல்வரவாகாது என்று தெரியும். எல்லாம் என் மனம் அறியும்.

மணவறையில் நீ மனம் வெந்து உடம்பில் நடுங்கக் கூடாது.

நான் வந்தால் மேலிரண்டும் நிச்சயமாய் நடக்கும்.

சபையில் இருக்கும் யதார்த்த கணவனுக்கு முன், ஒத்திகை பார்த்த காதலனை எந்தப் பெண்ணும் எதிர்பார்க்க மாட்டாள்.

நீயும் சாதாரண சராசரிப் பெண்.

ஆக, என்னையும் எதிர்பார்க்க மாட்டாய்.

உன் நெஞ்சைத் தொட்டுச் சொல்லு..!...

அழைப்பிதழை மட்டும் ஏனடி அனுப்பி வைத்தாய்?

உனக்குத் திருமணம் என்று சொல்லிக் கொள்ள மட்டும்தானே!

நீ நினைப்பது போல–

கட்டாயம் நான் உன் கல்யாணத்துக்கு.... வரமாட்டேன்.

எனக்கு அழைப்பிதழ் அனுப்பிய நேரம் தொட்டு- நிமிஷம் தொட்டு, வருவானோவென்று உன் நெஞ்சு படபடக்கும்; தேவையில்லை!

நான் (கட்டாயம்) வரமாட்டேன்.

மனதுக்குள் ஆறுதல் கொள்.

அப்படியே....மனதுக்குள் என்னைக் கொல்!

நம் காதல் தோல்வியில் நீ தற்கொலை செய்வாயோ என்று நான் எண்ணியிருந்தேன். ஆனால், நீயோ புத்திசாலிக் காதலி. என்னை (துவிக்க) விட்டு நல்லதோர் வாழ்க்கையைத் தேடிக்கொண்டிருக்கிறாய். சொகுசாய்....

நானோ வாழ்க்கையைத் தொலைத்து விட்டு–

காதலின் முகவரியைத் திரும்பத் திரும்ப– திரும்பத் திரும்பத் தேடிக்கொண்டிருக்கிறேன். ஏனெனில் மடையன். காதல் மடையன்!

உனக்குச் சாக வேண்டும் என்கிற அவசியமில்லை என்கிறபோது...

இங்கே நான் வாழவும் வேண்டுமாவென்று சிந்தித்துக்கொண்டிருக்கிறேன்.

நாம் செத்திருந்தால் –

நம் காதலாவது வாழ்ந்திருக்கும்.

உலகத்தில் யதார்த்தமாய்ப் பேசப் பட்டிருக்கும்.

ஆனால்...நடைப்பிணமாய் நாம் (நான்) வாழ்ந்து கொண்டு–

காதலை சாகடித்துவிட்டே(ாம்)ன்.

இந்நிலையில்... நான் செத்து நீ வாழ்வதில் ஏதடி நியாயம்?

நீ வாழ்ந்து நான் சாவதில் இருக்குதடி அநியாயம்!

❧ ❧

'சல்லிவன்' பற்றி ஏதாவது தெரியுமா உனக்கு?

சரித்திரத்தில் தன் பெயர் பதித்த வீரன்.

இந்த 'சல்லிவன்' கின்னஸ் வீரன், செயல் வீரன், மின்னல் வீரன்.(07) ஏழுமுறை இயற்கை மின்னல் குறிவைத்துத் தாக்கியும் சின்னக் காயம்கூட ஆகாமல் கின்னஸில் பதியப்பட்ட உண்மை வீரன். ஆனால்....

மாவனல்லை ரிஸ்கி ஷெரீப்

காலப்போக்கில் தற்கொலை செய்து கொண்டார். காரணம்....காதல்!

காதலைப் பற்றி (ஏதாவது) தெரியுமா உனக்கு?

கடந்த காலங்களில் உனக்கும் எனக்கும் மத்தியில் இருந்ததேயொன்று... அதுமாதிரி காதல்!

அந்தச் செயல் வீரனே செத்துப் போன போது....நானின்னும் உயிரோடு இருக்கிறேனென்று எனக்கு நீ அழைப்பிதழ் அனுப்பியிருக்கிறாய் பெண்ணே! அதற்காகவாவது உனக்கு நான் நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பெண்ணே... என் வரவை எதிர்பார்க்காமல் –

எனக்கு ஏனடி அழைப்பிதழ் அனுப்பினாய்?

பெருமையாய்....உனக்குத் திருமணம் என்று சொல்லிக் கொள்ள மட்டும்தானே!

கடந்த (காதல்) காலங்களில் நான் தந்த கடிதங்கள், கைக்குட்டைகள், வாசனைத் திரவியங்கள் அனைத்தையும் அப்படியே திருப்பியனுப்பியிருந்தாய். ஆனால், நான் தந்த முத்தங்களையேனடி மிச்சம் வைத்துக் கொண்டாய்?

எச்சில் கலந்த அதையும் திருப்பியிருக்கலாமே!

'ஓஹ்... எனை நோக்கி முத்தங்களை நீ திருப்பினால்...

உனக்கு நானுமல்லவோ முத்தங்கள் தரவேண்டும்......?

மீண்டும் மீண்டும் என்கிறபோது...

காதல் மீண்டு மீண்டு... காதல் மீண்டும் மீண்டும் என்கிறபோதும்,

அது நமக்குள்ளும் நம்மைச் சுற்றியும் சுற்றுவதைப் பார்த்தாயா?

காதல் ஒரு உலகமடி! காதல் ஒரு உருண்டையடி!!

ஆக..

நாம் நாமாகிப் போகாமல்....வேறாகிப் போனாலும்,

நான் நானாக–

நீ நீயாக–

நாம் ஒருநாள் சந்திப்போம்!

அப்படியிருக்க....

அழகான அழைப்பிதழை ஏனடி அனுப்பிவைத்தாய்?

பெருமையாய்...

உனக்குத் திருமணம் என்று சொல்லிக் கொள்ளத்தானே!

❧ ❧

ஏதென் தோட்டத்தில் ஆதமும் ஏவாளும் காதல் செய்ததைத்தான் இந்த பூமித் தோட்டத்தில் நானும் நீயும் செய்தோம். முன்னோர் செய்ததை பின்னோர் செய்ததாக...

நாம் செய்த காதலை நம் பின்னோர் செய்வர்.

ஏன்?

உனக்கும் எனக்கும் வேறு வேறாய் பிறக்கும்–

நம் குழந்தைகள் கூடக் காதல் செய்யும்.

ஆதமும் ஏவாளும் 'காதல்' பாவம் செய்ததால்தான் சோதனைக்கு உள்ளானார்கள் என்று சரித்திரம் சொல்கிறது.

நம் காதலே சோதனையாகி....நான் வேதனையாகி....

நமக்குள் தப்பித்துப்போன– தப்பாகிப் போன நம் காதலை,

நம் குழந்தைகளும் செய்யும், நிச்சயமாய்....

ஆக,

உன்னைப் போன்றும் என்னைப் போன்றும்– காலவோட்டத்தில்

உனக்கொரு மகளும்

எனக்கொரு மகனும் பிறக்கக்கூடும்.

நாம் செய்த காதலைப்போல் தப்புத் தப்பாய் அவர்களும் காதல் செய்யக்கூடும்.

நீ செய்த தப்பை சிலவேளை உன் மகளும் செய்வாள்.

என் மனநிலையில் எனது மகனும் வாடிப்போவான்.

நம்மில் ஏற்படாத உறவுகளில் நம் பிள்ளைகள் ஈடுபடவும் கூடும்.

புனிதக் காதல் காலமிதில் கர்ப்பமே சரித்திரமாக....

அந்த இரண்டாயிரமாம் வருஷத்தில்– காதல் வற்றிக் காமம் வளர்ந்து கருக்கலைப்புகள் கூட சம்பவமாகலாம்.

நம் கல்லறைகள் கூட

வெவ்வேறான நம் பிள்ளைகளின் கட்டிலறையாகலாம்.

எப்படியோ...

எதையும் எண்ணாமல் எனக்காகவொரு அழைப்பிதழ் அனுப்பியிருந்தாய்.... ஏனடி...? பெருமையாய்...

உனக்கும் கல்யாணம் என்று சொல்லிக் கொள்ள–

என்னைச் சொல்லிக் 'கொல்ல' மட்டும் தானே!

கட்டாயம் நான் உன் கல்யாணத்துக்கு... வரமாட்டேன்.

மனதை திடப்படுத்திக் கொள்!

அப்படி திடமாய் மனதுக்குள் என்னைக் 'கொல்'!!

எனக்கொரு கல்யாணம் நடந்தால் –

எப்போதாவது நானுமொரு மணமகனாகிப் போனால்......

என் மணமேடைக்கு நீ வரலாம்... மகிழ்ச்சியோடு.

உன்னைப்போல்–

நான் மனதில் வெந்து, உடம்பில் நடுங்கமாட்டேன்.

ஏனெனில்–

நான், சாண்பிள்ளை ஆனாலும் ஆண் பிள்ளை!

அதிலேயும்..... மனச்சாட்சியுள்ள மனுஷன்.

காதலி!

உன்னால் அனுப்பப்பட்ட உனது திருமண அழைப்பிதழுக்கு நன்றி.

நம் காதல் சாட்சியாக–


அதை மட்டுமாவது என்னோடு பத்திரப் படுத்திக்கொள்கிறேன்.

உன்னைமாதிரி...

பத்திரப்படுத்திக் 'கொல்ல' எனக்குத் தெரியாது.

# எங்கே அவன்?

மழை ஓ...வென சொரிந்து கொண்டிருந்தது. மைதிலி நாற்காலியில் சாய்ந்தவாறே தூக்கத்தில் ஆழ்ந்திருந்தாள். மழை விடுவதாயில்லை. மழையும் மின்னலுமாய் வெளியில் பொங்கிக் கொண்டிருந்தது. திடீரென முழங்கிய இடியில் மைதிலி விழித்துக் கொண்டாள். விழித்தவள் நேரே கடிகாரத்தை முறைக்க அது இன்னும் இரண்டுக்கு ஐந்து நிமிடம் இருப்பதாக சாடை காட்டியது.



எழுந்தவள் வானொலியை நோக்கி வாசலிட்டாள். வானொலியைத் திறந்தவள் மெருதுவாய் செவிமடுக்கத் துவங்கினாள். அது தலைப்புச் செய்தியை காற்றில் கரைத்துக் கொண்டிருந்தது.

மைதிலி அவசர அவசரமாக பீஸை எடுத்தவள் கெஸட்டுக்குள் வைத்து அழுத்தினாள்- "அடுத்து கவியரங்கம்.... கவியரங்கில் முதல் கவிதையை எழுதியிருப்பவர் ராகச் சோலை எம்.ரமேஸ்..." அவன் கூறிக் கொண்டே போக... மைதிலி ரமேஸின் கவிதையை ஒலிப்பதிவு செய்து முடித்தாள். ஆம் அவள் வானொலியை நாடியதே ரமேஸின் கவிதைக்காகத்தான்.

மைதிலி ரமேஸைக் காதலிக்கிறாள்; அவன் கவிதையைக் காதலிக்கிறாள்; அவன் எழுத்தாற்றலைக் காதலிக்கிறாள். இன்னும் சொல்லப் போனால்...ரமேஸ் அவள் உள்ளத்தில் ஆணிவேராய் அமிழ்ந்திருந்தான்.

இதற்கெல்லாம் அவள் ரமேஸுக்கு இதுவரை ஒரு மடல்கூட வரைந்ததில்லை. அவளுக்குள் ஒருவித மனத்தாக்கம் "இப்படிப்பட்ட ஒரு பெரிய கவிஞர், எழுத்தாளர் என்னை உதாசீனம் செய்து விட்டால் அதை என்னால் தாங்கிக் கொள்ள முடியாதே..... அதை தாங்கும் சக்தியை இறைவன் எனக்கு கொடுக்க வில்லையே..." அடிக்கடி மனதுக்குள் நினைத்து புலம்பிக் கொள்வாள்.

ஆனால் மைதிலியின் மனதில் ரமேஸைத் தவிர யாரையும் ஏற்றுக் கொள்ளும் சக்தி இருக்க வில்லை. ரமேஸ் கறுப்பா, சிவப்பா, முடமா, முண்டமா.... கட்டையா, நெட்டையா...? ம் ஹு....தெரியாது...ஆனால் அவளால் அவனைத் தவிர யாரையும்.... ம்....ஹு...

அவள் அவன்மீது பைத்தியமாய் பாசத்தை அறியாமல் அள்ளி வீசிக் கொண்டிருந்தாள். ஆனால் அவள் மனதிலொரு அழியாத எண்ணம் ஒன்று அசைபோட்டுக் கொண்டிருந்தது.

ரமேஸிடம் நேரடியாகப் போய் 'உங்களைக் காதலிக்கிறேன்...உங்களைத் தவிர வேறு யாரையும் நினைக்க, ஏன்– மணக்கக் கூட மாட்டேன்...' என்று கூறிவிட வேண்டும் என்று நினைத்தாள்.

அந்த நாள் என்று வரும் என எதிர்பார்த்திருந்தாள் மைதிலி. நாளும் வந்தது. ரமேஸின் முகவரியை தன் கைப் பையின் வயிற்றுக்குள் திணித்தவள் உள்ளத்தில் ஆனந்த அமுத மழை பொழிய பஸ்ஸை நோக்கிப் பறந்தாள்.

அவள் ரமேஸின் ஊரான ராகச் சோலையை அடைந்தாள். தன்னுடன் வந்த தங்கையையும் அழைத்துக் கொண்டு ரமேஸின் வீட்டை நோக்கி விரைந்தாள்... அவளால் அவனின் வீட்டைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

துக்கத்தோடும் வேதனை யோடும் பக்கத்தில் சென்றவரைப் பார்த்து மெல்லிய குரலில் "எக்ஸ்கியூஸ் மீ... கொஞ்சநிக்கிறீங்களா......? ப்ளீஸ்...!

"யேஸ்...என்ன வேணும் உங்களுக்கு..."

கிண்ணியா — ரைஷ்தீன்

என்று கேட்க "இந்த கவிதையெல்லாம் எழுதுற ரமேஸிட வீடு எங்கிருக்கு...? இங்கிருந்து இன்னும் தூரமா போகணும்...?" "ஆ......அவர்ர வீடா அந்தா தெரியிற பச்சப் பெயின்ற் பூசின வீடுதான்..." கூறியவர் சென்று விட்டார்.

மைதிலியின் மனதுக்குள் மத்தளம் கொட்டத் தொடங்கியது. ஒருவாறு சமாளித்துக் கொண்டு வீட்டை அடைந்தாள். சுவரில் இருந்த சுவிட்சை அழுத்தினாள் மைதிலி. நடுக்கத்தால் நாவு வரண்டது.

கதவைத் திறந்த சிறுவனிடம் "இது ரமேஸின் வீடு தானே? இந்த ஒலி மஞ்சரிக்கு கவிதையெல்லாம் எழுதுற அந்த ரமேஸின் வீடுதானே...?" நடுக்கத்தின் நடுவிலும் கூறிமுடித்தாள் மைதிலி.

"யேஸ் இது ரமேஸின் வீடுதான்.... உள்ள வாங்க..."


"தம்பி கவிஞர் ரமேஸைக் கொஞ்சம் வரச்சொல்றீங்களா....?" கேட்க, "வந்து நான்தான் ரமேஸ்...ஒலிமஞ்சரிக் கெல்லாம் கவிதை எழுதுறது நான்தான்..." கூறிமுடிக்க மைதிலி ஒரு கணம் செத்தே போனாள். அசடுவழிய வீட்டைவிட்டு நகர்ந்தாள்.


படிப்பகம்

www.padippakam.com

# இலக்கிய நயம்

# ஒரு வில் ஒரு சொல்!



"ஆச்சரியமாக இருக்கிறதே!" என்றான் சுந்தர பாண்டியன்.

"என்ன ஆச்சரியம் மன்னா?" என்றான் குறுநில மன்னன் சேரலாதன்.

"நட்புக் கரம் நீட்டி, புன்னகையை முகத்தில் சூடி நீர் வந்திருப்பது! உறையில் இருந்து வாளை எடுப்பதற்கு பதிலாக உள்ளத்திலிருந்து நட்புத் தோய்ந்த வார்த்தைகளை உருவி, உதடுகளால் வீசுகிறீரே, இது ஆச்சரியமல்லவா?"

"மலையென்று தெரிந்த பின்னர் மோதினாலும் என் உயிர்தான் விலை என்று உணர்ந்தேன். அதனால் நட்பு நாடி வந்தேன்"

"பலத்திற்கு முன் ஏற்பட்ட பணிவா? அல்லது என் மீது கொண்ட நல்லெண்ணத்தால் ஏற்பட்ட கனிவா?"

"இரண்டும்தான்!"

"தவறு! பலத்தின் முன் மண்டியிடுபவன் கோழை! சுந்தரபாண்டியன் ஒரு கோழையோடு கைகுலுக்கினான் என்று வரலாறு சொல்லுமே நாளை!"

சேரலாதன் நெளிந்தான்! சுந்தரபாண்டியன் நகைத்தான் மண்டபமே இடிந்து விழுந்து விடுமோ என்று நினைக்கும் விதமான இடியென்ற நகைப்பு.

"சேரலாதா! அடக்கம் அதிகம் உனக்கு! சபை நடுக்கம் தான் பழுது! சபை அடக்கம் சான்றோருக்கு அழகு!"

சேரலாதன் சிரித்தான்.

"மன்னர் மன்னா ஒரு விண்ணப்பம்!"

"என்னப்பா உன் விண்ணப்பம்?"

"கேரளத்து எழில் பருக வரவேண்டும் தாங்கள் அங்கு!"

மன்னன் யோசித்தான்.

"நல்லது; உன் எண்ணப்படியே ஆகட்டும்!"

▫▫

உயர்ந்து நின்று அசையாமல் இருக்கும் கேரளத்து மலைகள் அழகா? நிலம் நோக்கி முகம் தாழ்ந்திருந்தாலும், நம் முகம் நோக்கி உயர்ந்தும், தாழ்ந்தும் முறைக்கும் மங்கையர் நெஞ்சத்து மலைகள் அழகா?

சுந்தர பாண்டியன் தன் பவனிகாணவந்த பாவையரைக் காண்டு குழம்பிப்போனான்.

தேரில் சுந்தரபாண்டியன் அருகில் இருந்த சேரலாதன் அவன் விழிகள் பாயும் திசைகள் அறிந்து தனக்குள் சிரித்துக் கொண்டான்.



"மன்னா! எங்கள் மண்ணின் வளம் எப்படி?"

"எல்லாமே வளமாகத்தானே இருக்கின்றன."

"எல்லாமே என்றால்?"

"கனிவளம், கலைவளம், மலைவளம், மழைவளம், மாற்றுக் குறையாத மங்கையர் வளம்"

சேரலாதன் நகைப்போடு சொன்னான்;

"தாங்கள் பெரிய ரசிகர்!"

"கலையை ரசிப்பதோடு நிறுத்திக் கொள்வேன். கனிகளை என்றால் சுவைக்கும் வரை தூங்கமாட்டேன்"

குறிப்பறிந்து கொண்டான் சேரலாதன்.

என் அந்தப்புரம் ஒரு நந்தவனம். அங்கு மலர்களும் உண்டு. மாங்கனிகளும் உண்டு. தேன் குடங்களும் நன்று!"

அந்தப்புரத்தை திறந்துவிட்டான் சேரலாதன்.

மேலாடை இல்லாத பாலாடை மேனியர் பூக்களை சொரிந்தனர் மன்னன் மீது.

"காலையில் பார்க்கலாம். ஓய்வு கொள்ளுங்கள்."

என்றான் சேரலாதன்.

"ஓய்வா, மோக அலைக்குள் சிக்கிய படகு ஓய்வதெப்படி?"

சுந்தர பாண்டியன் நகைத்தான். சேரலாதன் சொன்னான்,

"ஆயுள் முழுவதும் தாங்கள் மறக்காத புதிய பாடங்கள், விடிய விடிய கற்றுத்தர வித்தை தெரிந்த நர்த்தகிகள்! இந்த நாள் தங்களுக்கு இனிய நாள்!"

விடைபெற்றுச் சென்றான் சேரலாதன். படைபல வென்ற மன்னன் பாவையரின் மடி பல மாறினான்.

திராட்சை மதுவை இதழ்களில் ஏந்தி, மன்னன் உதட்டில் தன் இதழ்களால் ஊட்டினாள் ஒருத்தி.

மன்னனின் உடல் முழுக்க ஒவ்வொரு நரம்பாக சுரம் மீட்டினாள் மற்றொருத்தி.

உடல் பஞ்சானது. உள்ளம் நெருப்பானது. மஞ்சம் களமானது.

தடையே இல்லாமல் நீச்சல் பழகினான். மூச்சை அடக்காமல் முத்தை அள்ளினான். பேச்சே இல்லாமல் கதையை எழுதினான். மறுப்பே இல்லாமல் அவன் விரும்பம் யாவிலும் செவ்வாழை மேனியர் கலந்து கரைந்தனர்.

▫▫

சுந்தரபாண்டியன் திகைத்துப் போனான்.

"மன்னர் செய்தது மோசம். பணிவிடை செய்ய அனுப்பிய பாவையை பள்ளியறை பாடம் நடத்த 'வா' என்று அழைத்தார்.

# தருவது ரசிகன்

அழைத்தது மன்னன். மறுப்பது எப்படி? பாவம் இந்தப் பாவை. இப்போது வயிற்றில் சுமப்பது கருவை!"

மன்னன் சபை நடுவே குற்றப்பத்திரம் வாசித்தான் குறுநில மன்னன் சேரலாதன்.

சுந்தரபாண்டியன் கூனிக்குறுகிப் போனான்.

சபை அசைவின்றி உறைந்து போனது.

அரியாசனம் விட்டு எழுந்த மன்னன் மகுடம் அகற்றி அமைச்சரிடம் கொடுத்தான்.

"அமைச்சரே! நீரே முதியவர். நீரே நீதியறிந்தவர். ஆகவே நீரே இந்த வழக்கில் தீர்ப்புச் சொல்ல வல்லவர்"

என்றான் கம்மிய குரலில்.

அமைச்சர் ஆடிப்போனார். ஆயினும் நீதி தவறலாமா?

"மன்னா! சாட்டப்பட்ட குற்றங்கள் தங்கள் மீது வேண்டுமென்றே வீசப்பட்ட சாட்டையா? அல்லது..."

கையமர்த்தி விட்டு மன்னன் சொன்னான்;

"முற்றிலும் உண்மை!"

மன்னன் சொல்ல சபை அதிர்ந்தது. அமைச்சர் நாலும் அறிந்தவர், என்ன நடந்திருக்கும் என்று அறிந்து கொண்டார்.

"மன்னா! முன்பொருநாள் வில் வளைத்து அம்பு தொடுத்தான் சேரலாதன். ஆனால், தோல்வியே கண்டான். பின்பொருநாள் இனிய சொல் விடுத்து உன்னை நட்பாய் அடைந்தான்; வெற்றியே பெற்றான்."

அமைச்சர் சொல்லிவிட்டு சேரலாதனைப் பார்த்தார். அவன் அப்பாவியாக முகத்தை வைத்துக் கொண்டிருந்தான்.

**"வில் வளைவது வணக்கம் செய்யவல்ல; குறிவைக்க! பகைவனின் சொல்லில் உள்ள வணக்கம் பணிவால் அல்ல, பண்பாலும் அல்ல, உறவாடிக் கெடுக்கும் நோக்கத்தால்! வில் வளைவதும் ஒன்றுதான், பகைவனின் சொல் வளைவதும் ஒன்றுதான்!"**

அமைச்சர் சொன்னதில் நியாயம் இருந்தது. புரிந்து கொண்ட மன்னன் முகத்தில் சோகம் இருந்தது.

அமைச்சர் சொன்ன கருத்தைத்தான் திருவள்ளுவரும் சொல்லுகிறார் இப்படி:

**"சொல் வணக்கம் ஒன்னார்கண்**
**— கொள்ளற்க வில்வணக்கம்**
**தீங்கு குறித்தமை யான்."**

அதிகாரம்–83
பாடல் –827

## குறுக்கெழுத்துப் போட்டி இல–113

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | ■ | 3 |
| | ■ | ■ | 4 | | 5 | |
| 6 | | | | ■ | | |
| | ■ | 7 | | | | |
| ■ | 8 | | | ■ | | ■ |
| ■ | | | ■ | 9 | | |
| ■ | 10 | | | | ■ | ■ |

### இடமிருந்து வலம்

01. நிலத்திற்குக் கீழே அமைக்கப்படுவது.
04. இவர் தனது வேலைக்காகப் பெறும் கூலி 'கொமிஷன்' ஆகும்.
06. பெரிய மேளம்.
07. உதவி என்றும் கூறலாம்.
08. இங்கு அணிவகுப்பு செய்ய அனுமதிப்பதில்லை.
09. இது ஒரு மிருகம்.
10. கூட்டத்தை இப்படியும் அழைப்பார்கள்.

### மேலிருந்து கீழ்

01. ஒரு உணவுப் பொருள்.
02. பல மலர்கள் சேர்ந்தது.
03. மாணவர்களுக்கு படிப்பில் மட்டுமின்றி விளையாட்டிலும் இது இருக்க வேண்டும்.
05. சூரியனுக்கு வேறொரு பெயர்.
07. இதை முதன் முதலில் கப்பலில் சுற்றி வந்தவர் மகலன் என்னும் மாலுமி.
08. வெற்றிலையுடன் சேர்த்துச் சாப்பிடுவார்கள்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 19.08.1995இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-113
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-111ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ■ | 1 மு | ங் | கி | ல் | ■ | 2 கு |
| 3 மா | ர் | ■ | 4 அ | ங் | 5 கா | டி |
| 6 த | க் | கா | ளி | ■ | டை | கா |
| 7 வி | க | ட | க | 8 வி | ■ | ர |
| ■ | ன் | ■ | ■ | ய | ■ | ன் |
| 9 உ | ■ | 10 த | ள | ர் | வு | ■ |
| 11 மி | தி | லை | ■ | 12 வை | ரி | ■ |

குறுக்கெழுத்துப் போட்டி இல. 111இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்.

1. திருமதி. வி. அருள்மொழி, கொழும்பு-14.
2. ஆர். ஜெயச்சந்திரன், மாத்தளை.
3. ஏ.ஹனீபா முகமட், ஏத்தாலை.
4. செல்வி. ஏ.கமருஸ் ஸலாமா பேருவளை.
5. செல்வி. ஏ.கிறிஸ்ரீன், வத்தளை.
6. என். சிவநேசன், எட்டியாந்தோட்டை.
7. திருமதி. சஹானா ராஸிக், கண்டி.
8. பைஸா எம் அலி, கிண்ணியா.
9. எஸ்வி. ராஜேஸ்வரன், மன்னார்.
10. பூபாலப்பிள்ளை ராஜன், வாழைச்சேனை.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

**விம்பிள்டனில் 'ஸ்டெபி கிராப்பின்' ஆட்டம் எப்படி?**
ச.சஞ்ஜீவ்-கருவாஞ்சிக்குடி.

*வெற்றிகரம்தான் என்பது பழைய செய்தியாகிவிட்டது. புதிய செய்தி, ஸ்டெபி கிராப் வருமானவரி சமாச்சாரத்தில் மாட்டிக் கொண்டு ஆடிப்போயிருக்கிறார். அப்பாவை கைது செய்துவிட்டார்கள். வெற்றிக் கிண்ணம் ஏந்திய கரங்களுக்கு விலங்கு மாட்டி விடுவார்களோ என்று ஸ்டெபி யோசித்துக் கொண்டிருக்கிறார்.*

▫▫

**இனப்பிரச்சனையைத் தீர்க்க பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஐ.தே.கட்சியும் ஒன்றுசேர்ந்து தீர்வு கண்டால் என்ன?**
ஏ.ஆர்.பாலா-ஹட்டன்.

*பாலா! நீங்கள் பகற்கனவையெல்லாம் நம்புகிறீர்கள்!*

▫▫

**வடக்கின் உண்மை நிலை என்ன?**
எஸ்.மாந்தன்-வத்தளை

*கையிருப்பில் உள்ள உணவுகூட முடிந்துவிட்ட நிலை என்று யாழ் அரச அதிபர் ஜனாதிபதிக்கு அறிக்கை கொடுத்திருக்கிறார்.*

▫▫

**யுத்தம் முடிவு பெறுமா?**
ஏ.ஆர்.எம்.மாஹிர்-புத்தளம்.

*கீழ்வானம் சிவக்க ரொம்ப நாளாகும் மாஹிர்.*

▫▫

**தமிழ்நாட்டில் புலிகளுக்கு மீண்டும் ஆதரவு அலை வீசுகிறதா?**
எஸ்.பவானி-கண்டி

*படையினரின் முன்னேற்றப் பாய்ச்சல் தமிழ்நாட்டில் புலிகளுக்கு முன்னேற்றமான நிலமையை உருவாக்கியுள்ளது. புலிகளை எதிர்ப்பவர்களும் தமிழர்கள் தாக்கப்படுவதை சகிக்கமாட்டார்கள். தாக்குதல் உக்கிரம் என்று நினைத்தால் அதை தடுப்பவர்களுக்கே விரும்பியோ விரும்பாமலோ ஆதரவளிப்பார்கள்.*

▫▫

**தமிழக பத்திரிகைகள் இலங்கை நிலவரத்தை முன்புபோல தெரியப் படுத்துகின்றனவா?**
என்.ஜெயக்குமார்-கொழும்பு 06

*சில நேரங்களில் கற்பனைகளையும் சேர்த்து கதை கட்டியும் விடுகின்றன. 'ஜூனியர் விகடனில்' ஒரு செய்தி படித்தேன். மண்டைதீவில் இருந்த மக்களை படையினர் பொலிடோல் குடிக்க வைத்தார்கள் என்கிறது அந்தச் செய்தி. உண்மை என்ன தெரியுமா? மண்டைதீவில் மக்களில் எவரும் மருந்துக்கும் கூட கிடையாது. பொய்கள், உண்மைகளையும் பொய்யாக்கிவிடும்.*

▫▫

**போகிற போக்கைப் பார்த்தால் இனி தென்றலும் சுடும் போலிருக்கிறதே?**
கிண்ணியா-ஸன்

*எரியும் பிரச்சனைகள் சூழலையும் வெப்பமாக்கிக் கொண்டிருக்கின்றன.*

▫▫

**ஒரு காதலி, காதலனுக்கு கொடுக்கக் கூடாதது எது? எடுக்கக் கூடாதது எது?**
ரிஸ்னா ஜெய்னுதீன்-பாணந்துறை

*இரண்டுக்கும் ஒரே பதில்: அளவுக்கு மீறிய உரிமை.*




▫▫

**ஒரு தலைக் காதல் என்றால் என்ன?**
ஜே.ஜிப்ரி-அக்கரைப்பற்று 06

*அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள்: இருவருக்குள் ஒருவருக்குள் மட்டுமே மின்சாரம் பாய்ந்தது. அதுதானுங்கோ ஒரு தலைக் காதல்!*

▫▫

**சில ஆண்கள் பெண்களைப் போல் தலைமுடி வளர்ப்பதைப் பற்றி சிந்தியா என்ன நினைக்கிறீர்?**
மரியம் காலித்-கண்டி

*மன்னராட்சிக் காலம் என்றால் முடிசூடும் ஆசையை வளர்த்திருப்பார்கள். இப்போது மக்களாட்சிக் காலம், முடி வளர்க்கும் ஆசையை என்றாலும் வைத்திருக்கட்டுமேன். பொறாமையா மரியம் காலித்? டேக் இட் ஈஸி!*

▫▫

**காதலைப் பற்றி உங்களின் கருத்து?**
த.அர்ஜுன் குமார்- பெதன்டி குருப்.

*முதுமையிலும் இளமை தரும் சூப்பர் டொனிக்.*

▫▫

**யுத்தத்தை நேசிப்பவர்களுக்கு தாங்கள் கூற விரும்புவது...?**
ஒஸ்லி கபூர்-அநுராதபுரம்

*அது இருபக்கமும் கூர் உள்ள கத்தி!*

▫▫

**சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அரசியலில் குதிப்பாரா?**
சா.கமலேஸ்வரன்-மட்டக்களப்பு.

*எப்படியாவது குதிக்க வைக்க வேண்டும் என்று சில (தமிழக) பத்திரிகைகள் பிடிவாதமாக இருப்பது மட்டும் தெரிகிறது. "நேற்று பஸ் நடத்துநர், இன்று நடிகன், நாளை....? " என்று ரஜினி பேசிய வசனத்தை விடுகதையாகப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அம்மாவை வீழ்த்த ரஜினியை அஸ்திரமாக்கவும் அரசியல்வாதிகள் சிலருக்கு கொள்ளை ஆசை. "கவனம் ரஜினி, இதே அரசியல் வாதிகள் நாளை உங்களையே குறிபார்ப்பார்கள்" என்று சோ உட்பட பலர் ரஜினியிடம் அட்வைஸ் கொடுத்திருக்கிறார்கள். இத்தனைக்கும் மத்தியில் அமைதியாக இருக்கிறார் ரஜினி. எம்.ஜி.ஆருக்குப் பின் நடிகர்களில் அரசியல் செல்வாக்கு பெறக்கூடியவராக ரஜினி இருப்பதற்கு 'அம்மா' விடும் தவறுகள்தான் காரணம். ரஜினியை சீண்டி அரசியலுக்கு வரவைத்தால்அதுதான் அம்மா புரட்சித் தலைவி செய்யும் மாபெரும் தவறாக அமையக்கூடும்.*



படிப்பகம்

www.padippakam.com

# மகாபாரதம்

அங்கம் 89

இவ்வாரம் (13.08.95 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

**காலத்தின் குரல்**

காலமெனும் நாமமதை நான்போர்த்தேயிருப்பதனால்
கோரவுருக்காட்டும் குருச்சேத்திர முனைதன்னில்
கொட்டும் குருதியினைக் காண்பதனைத் தவிர்க்காமல்
நட்டநெடு மரம்போல நான்பார்த்து நிற்கின்றேன்!
நன்மைக்கும் தீமைக்கும் நடக்குமிந்தப் போரினிலே
நாராயணன்தானும் நடுநிலையைத் தவறவிட்டான்!
அம்புப் படுக்கையிலே அவதியுறும் பீஷ்மர்,
அரிய உயிரினையே போக்கிவிட்ட துரோணர்,
தரியன் கடனுக்காய் துயரணைக்கும் கர்ணன்
பெரியோரிவரெல்லாம் பொல்லா இப்போரினிலே
வரிசையாகத் தீயில் வெந்து மடிகின்ற
கருமைமிகு காட்சியன்றோ கருத்தைக் குடைகிறது!

—காட்சி தொடக்கம்—

குருச்சேத்திரம்-கவுரவர் பாசறை-கர்ணனும் துரியோதனனும்.

**துரி:** நண்பனே..! எப்படியோ எனக்குரிய வெற்றி வாய்ப்பினை இழந்து விட்டேன். குருச்சேத்திரப் போரில் தர்ம நியாயங்களையோ, நல்லது கெட்டதுகளையோ நான் சிந்திக்கப் போவதில்லை....எனக்கு வேண்டியதெல்லாம் போரில் வெற்றி மட்டுமே! ஒன்றை மட்டும் மனதில் வைத்திரு நண்பனே.....! பிதாமகர் மீதோ, குரு துரோணாச்சாரியார் மீதோ நான் பூரண நம்பிக்கை வைத்திருக்கவில்லை...! ஆனால்...

**கர்ண:** கங்கை மைந்தர் மற்றும் துரோணாச்சாரியாரைவிட நான் வயதில் இளையவன். அவர்களைக் குறை சொல்வதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. இன்றுவரை பாண்டவர்களில் எவரையாவது எம்மால் கொல்ல முடியாதிருக்கும் போது நான் மட்டும் அவர்களைக் கொல்வது சாத்தியமா....?

**துரி:** நண்பனே! உன்னுடைய விசுவாசத்தில் எனக்கு எவ்வித ஐயமும் கிடையாது என்பதை கூற முற்பட்டேனே தவிர வேறொன்றுமில்லை...!
என்னுடைய பதட்டமான நிலையினை உணர மாட்டாயா நண்பா?

**கர்ண:** நான் பரிபூரணமாக உன் நிலையினை அறிவேன் நண்பா...! நான் எத்தகைய சோதனைகளையும் வேதனைகளையும் அனுபவிக்கிறேன் என்பதை நீ அறியமாட்டாய்! கவலையை விட்டு விடு: நாளைய தினம் நடக்கவிருக்கும் சம்பவங்களை எதிர்காலம் என்றும் மறக்கப் போவதில்லை!

—காட்சி மாற்றம்—

பாண்டவர் பாசறை-அர்ச்சுனனுடன் பாஞ்சாலி..

**அர்ச்:** பாஞ்சாலி! எப்போதும் உன்னுடைய சொந்தக் குரோதங்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கலாகாது. எமது முதியவர்கள் இரத்தம் சிந்தும் போது நாங்கள் அடையும் துயரத்தின் அளவை உன்னால் புரிந்துகொள்ள முடியுமா? உன் சிகையில் தடவப்பட்ட இரத்தத்தை உடன்போய்க் கழுவிவிடு! உடலுக்குளுள்ள நாளங்கள் தான் உதிரத்துக்கான இடம்!

**திரொ:** வில்லுக்கு விஜயரே...! எனக்கு அன்று ஏற்படுத்தப்பட்ட அவமானத்துக்கு இது பழிவாங்கலாகாதா...? வஞ்சம் தீர்க்கப்பட்டது முறையற்றது என்றா சொல்லுகிறீர்கள்?

**அர்ச்:** அவ்வாறு நான் கூறவில்லை பாஞ்சாலி! நீ திரௌபதிதான்.... ஆனாலும் அன்பே நீ அஸ்தினாபுரமல்ல! அஸ்தினாபுரம் ஒரு பெருங்கடல் என்றால், அதில் நீ ஒரு சிறு துளி! நீ இல்லாமல் அப்பெருங்கடலும் முழுமை பெறாது!

**திரொள:** அப்போ தாங்கள் கர்ணனைக் கொல்லப் போவதில்லை....! அப்படித் தானே?

**அர்ச்:** யார் அவ்வாறு சொன்னார்கள்...? கர்ணனைக் கொல்வதுதான் அஸ்தினாபுரத்தின் பாதுகாப்புக்கு இன்றியமையாததாகும். திரௌபதி! அன்று அவமானப் படுத்தப்பட்டவள் நீயல்ல... இந்த நாடேதான் அவமானத் துக்குட்படுத்தப்பட்டது. நான் உனக்களித்த வாக்குறுதியை மறந்து விடவில்லை. அந்தத் தேரோட்டி மகன் கர்ணன் நாளை சூரிய அஸ்தமனத்தை பார்க்க உயிரோடு இருக்கப்போவதில்லை!

—காட்சி மாற்றம்—

கூடாரத்தில் கர்ணன் தூக்கமின்றிப் படுத்திருக்கும்போது பழைய நினைவுகளால் துடிக்கிறான்.

—காட்சி பின்னோக்கு—

**கர்ண:** குருசிரேஷ்டரே! ஒரேயொரு நாள் மட்டும் தங்களுடைய சாபத்திலிருந்து என்னை விடுவியுங்கள். அது போதும்.. ஒரேயொரு நாள்...மட்டும்....!

**பரசுராமர்:** நாளைய நாள்தான் முக்கியமானநாள் கர்ணா.....! குந்தியின் புதல்வனே.....! சூரியதேவனின் மகனே.! நாளைய நாள் ஒன்றுக்காகவேதான் உன்னை நான் அன்று சபித்தேனடா மகனே...! ஏனெனில் -பாண்டவர்கள்தான் வெற்றிக் குரியவர்கள்! அது அவர்களுடைய உரிமை! எவருடைய பொருளையும் நீ பெறப் போவதில்லை. நீ பிறருக்குக் கொடுத்துப் பழகியவன்! அபிமன்யுவைக் கொல்வதில் பங்கேற்றபோதே, துரியோதனனுக்கான கடனை நீ அடைத்துவிட்டாய்! இந்த உலகில் மாவீரர்களைப் பற்றி எவர் எப்போது கணக்கிட்டாலும், அப்பட்டியலில் உன்னுடைய நாமம் முதன்மை பெற்றேயாகும் மகனே...! உன் பேரைக் கேட்டாலே எல்லோரும் கை கூப்பி வணங்குவார்கள்!

—காட்சி பின்னோக்கு முடிவு—

கர்ணன் படுத்திருக்கும் படுக்கைக்கு அருகே குந்தி வருகிறார். அவருடைய கண்களிலிருந்து பெருகும் கண்ணீர் கர்ணன் மேல் பட்டு அவன் விழித்துக் கொள்கிறான்.

**கர்ண:** அம்மா....! தாங்களா...? இந்த வேளையில்....?

**குந்:** ஆண்டவன் உனக்கு நீண்ட ஆயுளைக் கொடுக்கட்டும் மகனே...!

**கர்ண:** அம்மா! அந்த வாழ்த்துக்கள் என் தம்பி அர்ச்சுனனுக்குரியவை! எதற்காக இவ்வேளையில் இங்கு வந்தீர்கள்? தங்களுக்கு அளித்த வாக்கினை நான் மறக்கவில்லையே....!

**குந்தி:** நீ எதையும் மறக்க மாட்டாய் என்பது எனக்குத் தெரிந்ததே....! அது தான் உன் துன்ப துயரங்களுக்கே காரணம்...!

**கர்ண:** அதுவே என்னுடைய பலமும் துரதிஷ்டமும் ஆகும் அம்மா.....!

**குந்தி:** மகனே! நான் உங்களில் எவரையும் இழக்கவிரும்பவில்லையடா!

**கர்ண:** தாயே...! இத்தனை சுயநலம் ஒரு தாய்க்கு இருக்கலாகாது. இந்த யுத்தம் அஸ்தினாபுரத்தின் ஸ்திரத்தினை நிர்ணயிப்பதற்காக நடைபெறுகிறது. தாங்கள் இந்த பாரதவம்சத்தின் ஒரங்கம்! தாங்களும் தங்கள் பங்குக்காக எதையாவது அர்ப்பணித்தே ஆக வேண்டும். பெரிய தாயார் காந்தாரி இந்த யுத்தத்தில் தனது 99 புதல்வர்களை தியாகம் செய்திருக்கிறார்! எதிர்காலம் தங்களுடைய பங்களிப்பு என்ன என்று கேட்டால் தங்களுடைய பதில் என்ன?

குந்தி வெளியேறும்போது அவருடைய தாழ் பணிந்து கர்ணன் வணங்குகிறான். இவர்களுடைய கடைசிச்சந்திப்பு இதுதான் என்பதை இருவரும் அறிவார்கள். குந்தி அழுது கொண்டு வெளியேற, கர்ணன் அர்த்தத்துடன் சிரிக்கிறான்.

—காட்சி மாற்றம்—

அஸ்தினாபுரம்- அரண்மனையில் திருதராட்டினருடன் சஞ்சயன்

**திருத:** சஞ்சயா...! அமைதியாகவிருந்து நீ பார்க்கும் காட்சி என்ன...?

**சஞ்ச:** மகாராஜா...! ஒரு தாயின் உருக்கமான-பரிதாபமான காட்சியைக் காண்கிறேன்...!

**திருத:** காந்தாரிக்காக நானும் கண்ணீர் வடிக்கிறேன் சஞ்சயா....! மகாராணி அங்கே போயிருக்கக்கூடாது.

**சஞ்ச:** மகாராஜா! குந்தி மகாராணியும் அங்குதான் இருக்கிறார்!
ஆனால், தன்னுடைய புதல்வர்களின் பாசறையில் இல்லை! கவுரவர் பாசறையிலிருந்துதான் கண்ணீர் வடிக்கிறார்.

**திருத:** நீ தவறாக எதையோ கண்டு விட்டாய்....! குந்தியின் மைந்தர்கள் வெற்றியைத் தழுவிக் கொண்டிருக்கும்போது அவளேன் கண்கலங்க வேண்டும்?

—காட்சி மாற்றம்—

குந்தி பீஷ்மரின் அம்புப்படுக்கையை நோக்கி இரவில் வந்து அவருடைய கால்களைத் தொட்டு வணங்குகிறார்.

**பீஷ்ம:** குந்தி! உன் மகன் அர்ச்சுனன் என்னுடைய பார்வையைக் கட்டுப்படுத்தி விட்டான். ஆகவே சற்று இப்பக்கமாக என் முகத்தின் அருகே வா மகளே...!

**குந்தி:** (அழுத வண்ணம்) தாத்தா..! நான் இப்போது என்ன செய்ய வேண்டும்?

**பிஷ்ம:** மகளே..! இன்று நீ சந்திக்கும் அதே பிரச்சனைகளைத் தான் என் வாழ் நாளில் பெரும் பகுதியில் நான் சந்தித்தேன்! ஏதாவதொரு பக்கத்தை நான் சார்ந்து நின்றால் அடுத்த பக்கத்தை நான் புறக்கணித்து விட்டவனாக மாட்டேனா என்ற சங்கடமான நிலையில்தான் நான் சிக்கித் தவித்தேன்! ஆனால் இன்று எதுவுமே செய்ய முடியாத இக்கட்டான சூழ்நிலையில் கிடக்கிறேன்! என் வாழ்நாளில் நான் பெற்ற இலாபம் எது நட்டம் என்ன என்பதை நிர்ணயிக்க முடியாத நிலையிலுள்ளேன்! உனது நியாயங்களை பாசம் ஆட்கொண்டு விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று உன்னை நான் எச்சரிக்க விரும்புகிறேன். நாளை தலைசிறந்த இரு வீரர்கள் ஒருவருடன் ஒருவர் மோதப் போகின்றனர்! அதில் ஒருவருடைய வெற்றிதான் அஸ்தினாபுரத்தின் வெற்றிக்கு அறிகுறியாக இருக்கப் போகிறது. அவர்கள் இருவரும் உன்னுடைய புதல்வர்கள் என்பதை மறந்துவிட்டு, அஸ்தினாபுரத்தின் வெற்றிக்காகப் பிரார்த்தனை செய்...!

**குந்தி:** (புறப்பட ஆயத்தமாகும்போது) தாத்தா அவர்களே! தாங்கள் ஒரு தாயாக இல்லாதிருப்பதால் தாங்கள் புண்ணியவானே...! உண்மையில் இந்த யுத்தம் யாருக்காக நடைபெறுகிறது....? இதில் செத்து மடிபவர்கள் எல்லோரும் எமது புத்திரர்கள்தானே?

—காட்சி மாற்றம்—

அர்ச்சுனன் தனது பாசறையில் அம்புகளைத் தீட்டிக்கொண்டிருக்கும்போது நகுலன் அங்கு வருகிறான்.

**நகுல:** சின்னண்ணா! இன்னும் தூங்கச் செல்லவில்லையா...?

**அர்ச்:** ஆமாம்...நீயும் இன்னும் தூங்கவில்லையே....?

**நகுல:** இந்த அம்புகளில் எக்குறையும் காணப்படவில்லையே....!

**அர்ச்:** ஆனால், அங்கத்துக்கதிபன் மீது ஏவுவதற்கேற்ற கூர்மை இருப்பதாகத் தெரியவில்லை!

**நகுல:** அந்த தேரோட்டி மகனுக்கு அவ்வளவு முக்கியத்துவம் ஏன் கொடுக்கிறீர்கள் சின்னண்ணா...?

**அர்ச்:** தம்பி நகுலா! பிதாமகர் பீஷ்மர், குரு துரோணாச்சாரியார் போன்ற மாபெரும் வீரர்கள் வகித்த படைத்தளபதிப் பதவியை ஏற்பதற்குத் தகுதியுடையவனாகவிருப்பதனால், கர்ணனை அவனுடைய பெற்றாரின் தகுதியை வைத்துக் கணிக்கமுடியாது. அஸ்வத்தாமன் மற்றும் மதுரா மன்னர் சல்லியன் போன்றாரை விட்டுவிட்டு, துரியோதனன் கர்ணனை படைத் தளபதியாக நியமித்திருக்கிறான். அது மட்டுமல்லாமல் ஆச்சாரியார் துரோணரும் பிதாமகரும் பயின்ற அதே மகான் பரசுராமரின் சீடனாக இருந்து வித்தைகள் பயின்றவன் கர்ணன் என்பதையும் மறந்துவிடாதே!

**நகுல:** இவற்றையெல்லாம் கூறி என்னைப் பயங்காட்டப்பார்க்கிறீர்களா சின்னண்ணா..?

**அர்ச்:** அவ்வாறல்ல தம்பி! போரில் வெற்றியீட்ட வேண்டும் என்றால் பயமடைவதும் ஓரளவில் அவசியமானதுதான்.

—காட்சி மாற்றம்—

கர்ணனின் பாசறை- படுத்திருந்த போதிலும் தூக்கமின்றித் தவிக்கிறான். முன்பு எப்போதோ நடைபெற்ற சம்பவம் ஒன்றினை கனவாகக் காண்கிறான் கர்ணன்.

—காட்சி பின்னோக்கு—

அந்தணர் ஒருவர் இறந்து போன பசுவின் கன்றைச் சுமந்த வண்ணம் கர்ணனிடம் வருகிறார்.

**அந்தணர்:** ஒருவருக்கு துன்பத்தை ஏற்படுத்தி அவருக்கு வேதனையை அளிப்பதே பாபம் எனப்படுவது. வீரனே! நீர் தெரிந்தோ தெரியாமலோ இக்கன்றினை உன் பாணத்துக்கு இரையாக்கி விட்டாய். தன் கன்றைப் பறிகொடுத்துவிட்டுத் தவிக்கும் தாய்ப் பசுவின் சாபத்துக்கு நீ எவ்வாறு ஆட்படாதிருக்க முடியும்?

**கர்ணன்:** பிராமணோத்தமரே....! தயவு செய்து என்னை சபித்துவிடாதீர்கள்..!

**அந்த:** பிறருக்கு தர்மம் வழங்குவதில் பின்நிற்காதவரான தானவீரரே, இக்கன்றின் உயிரை உம்மால் கொடுக்க முடியுமா? இதோ நீர் வீற்றிருக்கும் தேரானது இந்த பிராமணனுக்கும் இந்தக் கன்றுக் குட்டிக்கும் உயரமாக உன்னைத் தாங்கி நிற்கின்றது. உமது வாழ்க்கையில் மிக முக்கியமான போரில் நீர் ஈடுபட்டிருக்கும் போது உமது தேர் இந்தப்பூமாதாவால் உள்ளே அமிழ்த்தப்படும்! உமது தேரின் சக்கரங்கள் பூமியில் புதைந்துவிடும்!

கனவு கலைகிறது; தடுமாற்றத்துடன் கர்ணன் எழுகிறான். அப்போது காவலன் ஒருவன் வந்து மகாராணி அழைப்பதாகக் கூறுகிறான்.

★★★

காந்தாரியின் கூடாரம்

**காந்தா:** நான் மகாராணி மட்டுமல்ல; உன்னுடைய நண்பன் துரியோதனனின் தாயும்கூட....ஆகவே ஒரு தாயாக நினைத்து என்னுடன் பழகலாம்!

**கர்ண:** தாங்கள் தாய்தான்! ஆகவே தாங்கள் தங்கள் மகனுக்கு ஆணையிடுவது போல எனக்கும் ஆணையிடலாம் தாயே!

**காந்தா:** உம்மை எனது மகனே என்று அழைக்க உரிமை உண்டா?

**கர்ண:** தாங்கள் என்னை மகனே என்று அழைக்க சகல உரிமைகளும் உண்டு மகாராணி!

**காந்தா:** இறைவன் நீடித்த ஆயுளை உனக்கு வழங்கட்டும் மகனே...!

**கர்ண:** போர்க்களத்தில் இத்தகைய வாழ்த்துக்கு எதுவித அர்த்தமும் இல்லை தாயே! துச்சாதனனுக்கும் இந்த வாழ்த்தினைத்தானே தாங்கள் அளித்தீர்கள்?

**காந்தா:** ஒரு தாயிடம் கிடைக்கும் வாழ்த்து எப்போதும் இத்தகையதாகத்தான் இருக்கும் மகனே! போர்க்களத்தில் துரியோதனன் தனித்து விடப்பட்டுள்ளான் மகனே. அவன் முரட்டுத்தனமாக உன்னிடம் நடந்து கொண்டாலும் பொருட்படுத்தாமல் அவனுடனே இருக்க வேண்டும் என்று உன்னிடம் கோருகிறேன் ராதேயா..!

**கர்ண:** தாயே...! மரத்தை நிழல் புறக்கணிக்கலாம்; கதிரவனை ஒளி மறக்கலாம்; இமையத்தை பனி விட்டு விலகலாம்...ஆனால் இந்த ராதேயன்... என்னை அங்க நாட்டுக்கே அதிபனாக்கிப் பெருமைப்படுத்திய என் ஆப்த நண்பன் துரியோதனனை ஒரு போதும் விட்டு விலகமாட்டேன்! என்னுயிர் உள்ளவரை அவனை எவரும் தீண்ட முடியாது!

**காந்தா:** சாவினைப் பற்றி ஏன் மகனே இப்போது கூறுகிறாய்?

**கர்ண:** ஏனெனில் இன்று அர்ச்சுனனும் நானும் இறுதிப் போரில் ஈடுபடப் போகிறோம். எங்களில் யார் நாளை சூரியஅஸ்தமனத்தின் பின்னர் தங்களிடம் ஆசிபெறப் போகிறார்கள்?

**காந்தா:** இதற்கு விடையளிக்க என்னால் முடியாது மகனே! துரியோதனனும் அர்ச்சுனனும் உயிருடன் இருப்பதையேதான் நான் விரும்புகிறேன்!

**கர்ண:** அது முடியாத காரியம்...என்னுடைய கேள்வி-அர்ச்சுனனா...அல்லது நானா உயிருடன் இருப்பதைத் தாங்கள் விரும்புகிறீர்கள்?....நான் விடை பெறுகிறேன் தாயே...!

—காட்சி மாற்றம்—

போர்க்களம்-ஒரு புறம் கிருபாச்சாரியாருடன் திஷ்டத்துய்மனும், யுதிஷ்டிரரும் துரியோதனனும் மற்றொருபுறமும் போரிடுகின்றனர். துரியோதனன் காயப்படுகிறான். கர்ணனுடன் போரிடும் நகுலன் கர்ணனால் மடக்கப்படுகிறான். காயப்பட்ட நகுலனிடம் கர்ணன்..

**கர்ண:** குந்தி மைந்தனே...! எப்போதும் ஓரளவு சமபலமுள்ளவனுடன்தான் போர் புரிய முற்பட வேண்டும். போய் உன் காயங்களுக்கு மருந்தினைத் தடவிக்கொள்!

—காட்சி மாற்றம்—

போர் முனையில் யுதிஷ்டிரரும் துரியோதனனும் மோதுகின்றனர். தொடர்ந்து வீசப்படும் பாணங்களினால் துரியோதனன் தடுமாறுகிறான். கர்ணன் இடைமறித்து யுதிஷ்டிரருடன் பொருதுகையில் அவர் ஆயுதங்களை இழக்கிறார்.

**கர்ண:** துரோணாச்சாரியாரிடம் பெற்ற போர்ப் பயிற்சி முறைகள் யாவற்றையும் மறந்து விட்டீர் யுதிஷ்டிரரே...ஆகவே உங்களுடன் பொருதுவதில் பயனில்லை.. மதுரா மன்னர் அவர்களே! தேரைத் திருப்புங்கள்....!

அர்ச்சுனன் இருக்கும் பக்கமாக தேர் செல்கிறது.

**சல்லி:** தளபதியாரே...! அர்ச்சுனனின் வில்லில் உள்ள நாணின் ஒலி கேட்கமுடியாத அளவு தூரத்துக்கப்பால் இரதத்தினை செலுத்தலாம் என்று கருதுகிறேன்!

**கர்ண:** மதுராபுரி மன்னரே...! தாங்கள் என்னுடைய வெற்றிக்களிப்பினால் ஏற்படும் ஆரவாரங்களையும் கேட்டிருக்கமாட்டீர்கள்...அதோ அங்கே பார்த்தீர்களா...அந்த அற்புதமான காட்சியை...! நான்கு புரவிகள் இழுத்து வரும் அந்த இரதத்தினை வாசுதேவன் செலுத்திவர அதில் அர்ச்சுனன் அழகாக அமர்ந்து வரும் காட்சி! இக்காட்சியினைக் கண்டு அச்சமடையாத ஒருவர் மகாதேவன் மட்டுமாகத் தான் இருக்க முடியும்!

**சல்லி:** அப்போ அங்கத்துக்கதிபரே! தாமும் இக்காட்சியைக் கண்டு பயந்துவிட்டீர் போல் தோன்றுகிறதே...!

**கர்ண:** மரத்தால் உருவாக்கப்பட்ட போர் வீரனால்தான் பயங்கொள்ளாதிருக்க முடியும் மன்னரே!

அர்ச்சுனனும் கர்ணனும் தங்களுடைய



நாணொலியை எழுப்பி-இருவரும் மோதுவதற்கு ஆயத்தமாகிவிட்டனர் என்பதை உணர்த்திய பின்னர் பொருதுகின்றனர். இருவரும் ஒருவருக்கொருவர் சளைத்தவரல்லர் என்பது தெளிவாகிறது. அர்ச்சுனனின் வில் ஒவ்வொன்றாக கர்ணனால் உடைக்கப்படுகின்றன. சாதாரண அம்புகளை விடுத்து திவ்யாஸ்த்திரத்தை பயன்படுத்துமாறு கிருஷ்ணர் அர்ச்சுனனிடம் கூறுகிறார்.

**கர்ண:** மதுரா மன்னரே! அர்ச்சுனன் அசகாயசூரன் என்று தாங்கள் கூறியது உண்மைதான். நான் பாணம் தொடுக்கு முன்னே அவன் வில்லைத் தயார் படுத்திவிடுகிறானே...!.

அர்ச்சுனன் திவ்யாஸ்திரத்தைப் பெறுகிறான். கர்ணன் முன்னேறி வரும்போது அவனுடைய தேர்ச்சக்கரம் மண்ணில் புதைந்து விடுகிறது.

**கர்ண:** (தனக்கு அந்தணரிட்ட சாபத்தை நினைத்தவனாக..) ஓ அந்தணரே...! என்னுடைய தேர் சக்கரத்தைச் செயலிழக்க வைத்துவிட்டீர்...ஆனாலும் என்னுடைய ஆற்றலை உம்மால் எதுவுமே செய்துவிட முடியாது...இதோ பிரம்மாஸ்திரத்தை எடுக்கிறேன்...!

கர்ணன் பிரம்மாஸ்திரத்துக்குரிய மந்திரங்களை உச்சாடனம் பண்ணி பிரம்ம தேவனைத் துதித்தும் அஸ்திரம் வரவில்லை.

அப்போது தான் பிரம்மாஸ்திரத்தை ஏற்கனவே கடோற்கஜனைக் கொல்வதற்கு பயன்படுத்திவிட்டதை உணர்கிறான்.

**கர்ண:** அர்ச்சுனா..! என்னுடைய தேர்ச்சில்லு மண்ணில் புதைந்து விட்டது. அதனை எடுக்கும்வரை கணைகளைத் தொடுக்காதே..!

தேரிலிருந்து கீழே குதித்து சக்கரத்தை மீட்க கர்ணன் முயற்சிக்கிறான்.

**கிருஷ்:** பார்த்தா! எதற்காகத் தாமதிக்கிறாய்...?

**அர்ச்:** வாசுதேவா...! நான் தேரின் மீது நிற்கிறேன்; அவனோ கீழே நிலத்தில் அல்லவா நிற்கிறான்...!

**கிருஷ்:** போர் முனையில் எத்தனையோ இரதங்கள் உடைந்து விடுகின்றன. அவன் ஏன் மற்றுமொரு இரதத்தினில் ஏறிவரமுடியாது...? தாமதிக்காதே.....!

**அர்ச்:** போர்க்களத்தில் கடைப்பிடிக்க வேண்டிய கட்டுப்பாடுகளைப் புறக்கணிக்கலாகாதல்லவா?

**கிருஷ்:** (சிரித்துக் கொண்டே) போர்க்கள சட்டதிட்டங்களைப் பற்றி குறிப்பிடுகின்றாயே.... இந்த அங்கராஜன் அந்தச் சட்டங்களை எப்போது மதித்து நடந்திருக்கிறான்? துரியோதனனின் தீச்செயல்களுக்கெல்லாம் இவன் தூபம் போட்டு வந்தவனாயிற்றே? கவுரவரின் சபையில் அன்று இவன்தானே பாஞ்சாலியை வேசி என்று அழைத்தவன்? இன்று சட்டதிட்டங்களைப் பற்றிக்கூறுகின்றாயே பார்த்தா...! நான்கு நாட்களுக்கு முன்னர் தானே ஏனையோருடன் சேர்ந்து நிராயுதபாணியான உன்மகன் அபிமன்யுவை கொல்லக் காரணமாயிருந்தான்...? அப்போது அபிமன்யு காயமடைந்தவனாக நிலத்தில் தானே நிர்க்கதியாக நின்றான்....?

அபிமன்யுவைப் பற்றி கிருஷ்ணர் நினைவூட்டியதும் அபிமன்யு அன்று எழுப்பிய அவலக்குரல் அர்ச்சுனனின் காதுகளுக்குக் கேட்கிறது.

கர்ணனை நோக்கி தன்னுடைய பாணத்தைச் செலுத்தி அவனுடைய தலையைக் கொய்துவிடுகிறான்.

**பின்னணிப் பாடல்:**

மாவீரன் கர்ணனவன் மண்மீது தன்னுடலை
சாவிற்குத் துணைபோகத்தாளளித்தான்—பூமிதனில்
தாளத்தில் தலைசிறந்த தனையனவன் சாய்ந்ததனால்
தர்மத்தின் தாயவளும் தலைகவிழ்ந்தாள்!

(தொடர்ந்து வரும்)

எம்.ரீ.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

Regd. as a News Paper at the G.P.O.(PRO/7/95)




அருள் ஜுவலர்ஸ்

ARUL JUWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

436331


# நக நயம்

எதையும் இழக்கத் துணியாதவர்களால் புதிதாக எதையும் பெறமுடியாது. படத்தில் இருக்கிறார் பாருங்கள் சாதனை மன்னர் சிறீதர்சிலால், இவர் இழந்தது நிம்மதியான தூக்கத்தை. அதனால் இவர் பெற்றிருப்பது கின்னஸ் சாதனை வீரர் என்ற பட்டத்தை! பெறப்போவது இரண்டு இலட்சம் அமெரிக்க டொலர்களை! (ஒரு கோடி) இவரது நகங்களை எப்போது வெட்டுகிறாரோ அப்போதே 2 இலட்சம் டொலர்களை கொடுத்துவிட்டு வாங்கிக்கொள்ள பிரபல பணக்காரர்கள் பலர் ரெடியாக இருக்கிறார்கள். அதிசயப் பொருட்கள் சேகரிப்பதில் பைத்தியமாக அலையும் பணக்காரர்கள் எக்கச்சக்கமாக இருக்கிறார்கள். அவர்கள்தான் நகங்களை வாங்க காத்திருக்கிறார்கள். 30 வருடங்களாக வளர்த்த நகங்கள். ஒவ்வொன்றும் 35 முதல் 47 அங்குலம் இருக்கின்றன. தூங்கும் போது பையொன்றில் கையை விட்டு முடிக்கட்டியபடி தான் தூங்கு வார்.






அம்மன் ஜுவல்

AMMAN JUWEL

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு

29 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

332033


நம் நாட்டிலும் 'வோக்ஸ் வாகன்' கார்கள் ஓடித்திரிகின்றன. ஆனால் அவை பழைய ரகங்கள். இப்போது 'வோக்ஸ் வாகன்' காரில் புதிய ரகம் சந்தைக்கு வந்துவிட்டது. தரம், குணம், ஈடுகொடுக்கும் திறன், என்று அனைத்துமே நவீன யுகத்திற்கு ஏற்ப அமைந்துள்ளன. பெற்றோலில் இயங்கும் இக்காரின் கதவுகள் இறக்கை விரிவது போல எழுந்து கொள்ளக்கூடியவை. பெற்றோல் அதிகம் செலவாகாத வகையில் எஞ்சின் நவீனமாக்கப்பட்டுள்ளது. இதில் உள்ள வசதிகளில் முக்கியமானது என்ன தெரியுமா? சாரதியின் கவனக் குறைவால் முன்னால் செல்லும் வாகனத்தை முத்தமிடும் நிலை ஏற்படாது. முன்னால் செல்லும் வாகனத்தை நெருங்கப்போவதாக தெரிந்தால் காரில் உள்ள எச்சரிக்கைக் கருவி சத்தம் போடத் தொடங்கிவிடும். சாரதி உஷாராகி விடலாம்.

# ஜோரான கார்

# விபத்தல்ல-வியப்பு!



# தருவது-வியோட

நம் நாட்டில் என்றால் தாத்தா கால சைக்கிள் என்றாலும் திருத்திப் பாவிப்போம். பணக்கார நாடுகளில் என்றால் கார்களைக்கூட ஒரு குறிப்பிட்ட காலம் மட்டுமே உபயோகித்துவிட்டு குப்பையில் வீசிவிடுவார்கள். தினம் ஒரு ரகமான புதுக் கார்கள் சந்தைக்கு வருவதால் பழைய பாஷன் கார்களுக்கு குட்பை சொல்லி குப்பையில் எறிவதும் நடக்கிறது. குப்பை லொறியில் அந்த கார்களை அள்ளிக் கொண்டு சென்று புல்டோசர்களால் நசித்து அப்பளமாக்கி விடுகிறார்கள். குப்பைகள் குவிவதை தடுக்க வேண்டாமா. படத்தில் இருப்பது ஒரு அலங்கார வளைவு. உபயோகமற்ற கார்களை வைத்து வியப்பான வளைவு அமைத்துவிட்டார்கள். பணம் மிஞ்சிப் போனால் பட்டும் வந்துவிடுகிறதோ?




வாரமலர் தினமுரசு

இதுதான் 'வோக்ஸ் வாகன்' காரின் புதிய மொடல். இதன் பெயர்: IRVW-FUTURA

# காப்பது கடன்



என்ன இது வித்தியாசமான மிருகமாக இருக்கிறதே என்று நினைத்தீர்கள் தானே! குரங்கு தான் என்றால் நம்புவீர்களா! நம்பத்தான் வேண்டும். இது ஒரு வித்தியாசக் குரங்கு. சாதாரண குரங்கில் இருந்தும், மனிதக் குரங்கில் இருந்தும் (ஏப் ரக குரங்கு) இது வேறுபட்ட ஒரு இனத்தைச் சேர்ந்தது. சிவப்புக் கம்பளி மயிர்கள், மஞ்சள் கண்கள், கரிய முகம் கொண்ட இந்தக் குரங்குகளை 'காட்டின் பிசாசு' என்று அழைக்கிறார்கள். உலகில் மிக அரிதாகவே உள்ள இந்த ரகக் குரங்குகள் ஆபிரிக்க கண்டத்தில் உள்ள காடுகளில் காணப்படுகின்றன. இவற்றை அழியாமல் பாதுகாக்க வேண்டும் என்று சுற்றுச் சூழல் பாதுகாப்பாளர்கள் கூறியுள்ளனர். 9கோடியே 50 இலட்சம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய மூத்த இனம் இதுஎன்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

# இலக்கை நோக்கி

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி என்றதும் இம்ரான்கான் பெயர் தான் நினைவுக்கு வரும். இம்ரான் கான் ஓய்வு பெற்ற பின்னர் கிரிக்கெட் ரசிகர்கள் மனதில் இடம்பிடித்திருப்பவர் வாசிம் அக்ரம். 28 வயதான வாசிம் அக்ரமை பாகிஸ்தான் கிரிக்கெட் பிரியர்கள் 'எங்கள ஹீரோ' என்கிறார்கள்.

கடந்த பத்தாண்டுகளாக விளையாடி வருகிறார். ஒரு நாள் போட்டிகளில் உலகிலேயே அதிக விக்கெட்டுக்களை வீழ்த்திய சாதனை நாயகன் இவர்தான்.

சமீபத்தில் இவர் கிளப்பிய ஒரு பிரச்சனை சர்ச்சைகளை உருவாக்கி விட்டது. தான் எங்கு விளையாடச் சென்றாலும் மனைவியும் உடன் வர வேண்டும் என்றார் அக்ரம். கிரிக்கெட்சபை அதை மறுத்ததால் பிரச்சனை வளர்ந்தது.

வாசிம் அக்ரம் வருத்தப்படும் ஒரு விஷயம். 'பாகிஸ்தான் கிரிக்கெட் அணியில் அரசியல் புகுந்து வருகிறதே' என்பதுதான். "இந்த நிலை என்று ஒழிகிறதோ அன்றுதான் பாகிஸ்தான் கிரிக்கெட் அணி உருப்படும்" என்று பகிரங்கமாகவே சொல்லியிருக்கிறார்.

இந்தியா தொடர்பாகவும் வித்தியாசமாகப் பேசுகிறார் வாசிம் அக்ரம். "இந்திய அணி பாகிஸ்தான் மண்ணிலும், பாகிஸ்தான் அணி இந்திய மண்ணிலும் மீண்டும் சமுகமாக விளையாட வேண்டும். அப்படியொரு நாள் வர வேண்டும். நான் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதற்குள் இந்திய மண்ணில் ஆட வேண்டும். அதை எனது இலட்சியக் கனவாகவும், இலக்காகவும் வைத்திருக்கிறேன்." என்றும் சொல்லியிருக்கிறார் வாசிம் அக்ரம்.






படிப்பகம்